விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: இருபத்துநான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 29 வெள்ளிக்கிழமை (11.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 144

ரா ம் கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# இந்தியக் குழுவின் இலங்கை விஜயத்தால்
# தமிழர்களின் பாதுகாப்பு அதிகரிப்பு!

## மதுரையில் அத்வானி உரை



(மதுரை)

இந்திய எதிர்க் கட்சிகள் குழு இலங்கை சென்று அந்நாட்டு அரசுடன் பேசியதன் பயனாக தமிழ் மக்களுக்கான பாதுகாப்பு கூடியுள்ளதாக பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் அத்வானி தெரிவித்தார். மதுரையில் நடைபெற்ற தாமரை சங்கமம் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இதனைக் கூறினார்.

கடந்த 1947 ஆம் ஆண்டுநாடு சுதந்திரம் அடைந்தபோது நான் பாகிஸ்தானின் கராச்சி நகரில் இருந்தேன். பின்னர் இந்தியா - பாக் பிரிவினை ஏற்பட்ட உடன் எனது 20 வயதில் இந்தியா வந்தேன். இங்கே கூடியுள்ள மக்களை பார்க்கும்போது நான் பெருமை அடைகிறேன். இது போன்ற மாநாட்டு கூட்டத்தினை நான் இதுவரை பார்த்ததில்லை. அதிலும் தமிழகத்தில் இந்த மதுரை மண்ணில் பார்த்ததில்லை. நான் பலமுறை மதுரைக்கு வந்திருக்கிறேன். இந்த மாநாட்டில் கூடியுள்ள மக்களை பார்த்ததும் எனக்கு ஆச்சரியமாக உள்ளது.

ஊழல், கறுப்பு பணத்தை ஒழிக்க வேண்டி பா.ஜ.க தொடர்ந்து (24ஆம் பக்கம் பார்க்க)

## அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றலாம்

(கொழும்பு)

மணல் ஏற்றிச் செல்வதில் ஏற்பட்டுள்ள சிக்கலைத்தவிர்க்கும் வகையில் நேற்று வியாழக்கிழமை முதல் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிவரை அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் செல்வதற்கான அனுமதியினை அரசாங்கம் வழங்கியுள்ளது என்று சுற்றாடல் துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதே வேளை, மணல் ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப்பத்திரம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதால் பல்வேறு மோசடிகள் இடம்பெறுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு சிறந்த தீர்மானமொன்றை உடனடியாக எடுக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் அநுர பிரிய தர்ஷன யாப்பாவுக்கு உத்தரவிட்டுள்ளார் (24ஆம் பக்கம் பார்க்க)

## சோதிடரின் ஆலோசனைப்படி அமைச்சரவையில் மாற்றம்

### இளம் எம்.பிக்களுக்கு பிரதியமைச்சர் பதவி

(கொழும்பு)

அமைச்சரவையை அடுத்த மாதம் நடுப்பகுதியில் மாற்றியமைப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டமான தீர்மானமொன்றை எடுத்திருப்பதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.

இதற்கமைய எரிபொருள் மின்சக்தி, கலாசாரம், விஞ்ஞானதொழில்நுட்ப மற்றும் விவசாயம் ஆகிய அமைச்சுப் பதவிகளுக்கு புதியவர்களை நியமிப்பதற்கு அரச தலைமைப் பீடம் முடிவெடுத்துள்ளது என்றும் தெரியவந்துள்ளது.

அதேவேளை, இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கும் பிரதியமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, (24ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் யாழ். அரச அதிபரானால் பெரும் பேறாக கருதுவேன்!

### அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள மக்களுக்கு சேவை செய்ய மீண்டுமோர் சந்தர்ப்பம் கிடைத்தால் அதை என் வாழ்நாளின் பெரும் பேறாகக் கருதுவேன் என இடமாற்றம் பெற்றுச் செல்லும் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்ட அரச அதிபராக நான் பதவியேற்று கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் பணிபுரிந்துள்ளேன். இக்காலப் பகுதியில் எனது மனச்சாட்சிக்கு விரோதமாக செயற்பட்டதில்லை. பொது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் (23ஆம் பக்கம் பார்க்க)

## தூதுவர் பதவியை ஏற்க தமரா மறுப்பு

(கொழும்பு)

கியூபாவுக்கான இலங்கைத் தூதுவர் பதவியை ஏற்பதற்கு தமரா குணநாயகம் மறுப்பு தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதி விடப் பிரதிநிதியாகப் பணியாற்றிய தமரா குணநாயகம் கியூபாவுக்கான தூதுவராக வெளிவிவகார அமைச்சினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அப்பதவியை ஏற்பதற்கு தமரா குணநாயகம் மறுப்புத் தெரிவித்துள்ளதாக (24ஆம் பக்கம் பார்க்க)

## பொருட்களின் விலை உயர்வை கண்டித்து அரசாங்கத்திற்கு எதிராக ரணில் தலைமையில் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

பாண், சமையல் எரிவாயு, பால் மா உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று கொழும்பு வாழைத் தோட்டம் பகுதியில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

இதில் ஐ.தே.க பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, கொழும்பு மாநகர மேயர் முஸம்மில் உள்ளிட்ட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றி ரணில், அரசாங்கம் மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைப்பதை விடுத்து, புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. இது அரசாங்கத்தின் பிழையான பொருளாதார (24ஆம் பக்கம் பார்க்க)

## நாவாந்துறை கிறிஸ் பூத வழக்கினை விசாரணைக்கு ஏற்றது உயர் நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை கிறிஸ் பூத விவகாரம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட 51 பேரின் மனுக்களை ஏற்றுக்கொண்ட கொழும்பு உயர் நீதிமன்றம் அதனைத் தொடர்ந்து நடத்துவதற்கும் அனுமதியளித்துள்ளது.

நாவாந்துறை கிறிஸ் பூதம் பிரச்சினை கடந்தவருடம் இடம்பெற்று இதில் பலர் பொலிஸாராலும் இராணுவத்தினராலும் தாக்கப்பட்டதுடன் கைது செய்யப்பட்டுமிருந்தனர்.

இதில் பாதிக்கப்பட்டவர்கள் 51 பேர் கொழும்பு உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

இவ் 51பேரின் மனுக்களினை ஏற்றுக் கொள்வதா அல்லது நிராகரிப்பதா?, வழக்கினை தொடர்ந்தும் நடத்திச் செல்வதற்கு அனுமதியளிப்பதா என்பனவற்றுக்கு தீர்ப்பு வழங்குவதற்காக (24 ஆம் பக்கம் பார்க்க)

## புதியவர்களுக்கு சந்தர்ப்பம் பழையவர்களுக்கு இடமாற்றம்

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

மாவட்ட அரசாங்க அதிபர்களாக புதிதாக நியமனம் பெற்றவர்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதற்காகவே யாழ்.அரச அதிபர் உள்ளிட்ட மேலும் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதுஎன்று ஊடகத்துறைபதில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன நேற்று தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டின் போது, (24ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# சட்டத்தை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினால் 14 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதில் 10 வர்த்தகர்களுக்கு நேற்று யாழ். நீதவான் நீதிமன்றம் 51 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை அதிகாரி என். சிவசீலன் தெரிவித்தார்.

யாழ். நீதவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே மேற்குறிப்பிட்ட வர்த்தகர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதில் காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 9 வர்த்தகர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 45 ஆயிரம் ரூபாயும் விலைப்பட்டியல் இன்றி பொருட்களை விற்பனை செய்த ஒரு வர்த்தகருக்கு 6 ஆயிரம் ரூபாயும் அபராதம் விதித்து யாழ். நீதிவான் மா. கணேசராஜா தீர்ப்பளித்தார்.

இதேவேளை வழக்கிற்கு சமுகமளிக்காத ஏனைய நான்கு வர்த்தகர்களுக்குழ் பிடியாணை பிறப்பித்தும் நீதவான் உத்தரவிட்டார்.

மேலும் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 21 வர்த்தகர்கள் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் சட்டதிட்டத்தை மீறி செயற்பட்டது கண்டறியப்பட்டதோடு அவர்களுக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

அத்தோடு 30 வர்த்தகர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் 25 திகதியும், 16 வர்த்தகர்களுக்கு எதிராக எதிர்வரும் 16ஆம் திகதி மல்லாகம் நீதவான் நீதிமன்றிலும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# நகுலேஸ்வரத்துக் காளை மாடும் என்னை வாழ்த்தும் -யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரம் சிவன் கோவிலில் ஒப்படைக்கப்பட்ட நல்லினக் காளை மாடும் தன்னை வாழ்த்தும் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

நகுலேஸ்வரம் ஆலயத்தில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டிருந்தபோது நல்லினக் காளை மாடு இறைச்சிக்காக வெட்டப்படுவதிலிருந்து தடுக்குமாறு அந்தண சிவாச்சாரியர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதன் பிரகாரம் சமூக நலன்கருதி காளை மாட்டை வெட்டுவதற்குத் தடை விதித்தேன். தற்போது அந்த காளை மாடு நகுலேஸ்வரம் ஆலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்தக் காளை மாட்டின் உயிரைக் காப்பாற்றியதற்காக அந்த காளை மாடு நிச்சயம் என்னை வாழ்த்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறித்து நீதி அமைச்சு பொறுப்புடன் செயற்படும்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதில் நீதி அமைச்சுக்கும் முக்கிய பொறுப்பு இருப்பதாக நீதி அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தம்மைச் சந்திந்த நோர்வேத் தூதுவர் ஹய்டி ஹரல்ட்ஸ்டிடம் தெரிவித்தார்.

நோர்வே தூதுவர் ஹய்டி ஹரல்ட்ஸ்ட் நேற்று முற்பகல் நீதியமைச்சர் ஹக்கீமை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் ஹக்கீம் நோர்வே தூதுவரிடம் மேலும் தெரிவித்ததாவது,

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முழுமையாக செயற்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே முஸ்லிம் காங்கிரஸ் இருக்கிறது.

அது தொடர்பான கருத்துக்களை அரசுக்கு தெரிவிப்பதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஓர் உயர்மட்ட குழுவை நியமித்து மிகவும் நுணுக்கமாக அது பற்றி ஆராய்ந்து வருகிறது. ஆணைக்குழுவின் விதந்துரைகள் படிப்படியாக அமுல்படுத்தப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

நோர்வே அரசின் அனுசரணையோடு இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த நிலையில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் இலங்கை முஸ்லிம்களின் பரிமாணம் குறித்து உரிய கவனம் செலுத்தப்பட்டிராதமை ஒரு பாரிய குறைபாடாகும்.

அவ்வறிக்கையில் இனப்பிரச்சினைத் தீர்வில் முக்கிய தரப்புக்களில் ஒன்றான முஸ்லிம்களின் பரிமாணம் சரிவர உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆயினும் தற்பொழுதுகூட இந்நாட்டு முஸ்லிம்கள் தொடர்பான முக்கிய அம்சங் கள் உள்வாங்கப்பட்டு அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட முடியும். அதற்கான முயற்சிகளை நோர்வே அரசு மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

அரசாங்கத்தையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றோம். இலங்கையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது பற்றி அதிகமாகப் பேசப்பட்டுவரும் இக் காலகட்டத்தில் அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் இடையே சிறந்த கருத்துப் பரிமாற்றல்கள் நிகழ்வது மிகவும் அவசியமாகும்.

யுத்தம் முடிபடைந்துள்ள நிலையில் வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த முஸ்லிம்களையும் இலங்கையில் முதலீடு செய்வதற்கும், இந் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் உரிய பங்களிப்புக்களைச் செய்வதற்கும் ஊக்குவிக்க வேண்டும் என

# விபத்தில் சிக்கிய முதிய்வர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வீதியால் நடந்து கொண்டு திடீரென வீதியைக் கடக்க முற்பட்டபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த முதியவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் ஆடியபாதம் வீதி கொக்குவிலில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் பஞ்சலிங்கம் (வயது 72) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

சம்பவ தினமன்று குறித்த முதியவர் திடீரென வீதியினை கடக்க முற்பட்டபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிளின் கண்ணாடி குறித்த முதியவரின் தலையில் இடித்தமையால் மயங்கிய நிலையில் அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 12.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகள் நடத்தி வருபதோடு பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-4)

# பஸ்ஸிலிருந்து விழுந்து படுகாயம்

தனியார் பேருந்து ஒன்றில் மது போதையில் பயணித்த நபர் ஒருவர் நிதானமிழந்து பேருந்து வாசலில் நின்ற ஒருவரை தள்ளி விழுத்தியதில் படுகாயமடைந்த அந்த நபர் தர்மபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் கிளிநொச்சியில் இருந்து நெடுங்கேணி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்திலேயே இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் தர்மபுரத்தைச் சேர்ந்த சின்னையா குணேஸ்வரன் என்பவரே படுகாயமடைந்தவராவார். (எ-3;252)

# அரசாங்க வைத்தியர்கள் இன்று பணிப் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

தமக்கு வாக்களித்தபடி போக்குவரத்துப் படியை உரிய காலத்தில் வழங்க அரசாங்கம் தவறியுள்ளதால் அரசாங்க வைத்தியர்கள் இன்று நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தம் செய்ய தீர்மானித்துள்ளனர்.

தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தரும் பதிலைப் பொறுத்து, இன்று காலை 8 மணிக்கு தொடங்கும் இந்த வேலை நிறுத்தம் மேலும் சில நாட்களுக்கு தொடரலாம் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் அமைப்பு கூறியது.

வைத்தியர்களிடம் விரக்தியும் அமைதியின்மையும் காணப்படுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் அமைப்பின் தலைவர் அநுருத்த பாதினிய கூறினார்.

16 ஆயிரம் வைத்தியர்களையும் 60 கிளைகளையும் கொண்ட மருத்துவ அதிகாரிகள் அமைப்பை சேர்ந்த வைத்தியர்கள் அண்மையில் நடந்த மருத்துவ அதிகாரிகள் அமைப்பின் பொதுக்குழு கூட்டத்தில் இந்த தொழிற்சங்க நடவடிக்கையை எடுக்க வேண்டுமென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. (எ-11)

# உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சகல உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் பீடாதிபதி எஸ். கே.யோகநாதன் கேட்டுள்ளார். (எ-2)





YAALH ENGLISH ACADEMY

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

ஏழு நாட்களும் மு.ப/ பி.ப வகுப்புகள் உண்டு

- உத்தியோகத்தர்க்கு
- உயர் கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- பிறநாடு செல்பவர்க்கு
- தாய்மார்க்கு
- பாடசாலை மாணவர்க்கு

விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்

வகுப்பிட அனுசரணை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி : யாழ்நகர் (8284)

சிங்கள, ஆங்கில வகுப்புகள்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. பேச, எழுத, வாசிக்க அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.

தொழில் புரிபவர்களுக்கு விசேட நேரம் வழங்கப்படும்

(குறைந்த, இலகு தவணைக் கட்டண முறை)

North Lead Educational Center
No-328, Stanly Road, Jaffna.
Tel : 222 4459, 0772533390. Fax : 222 4460

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
SRI NAGAPOOSHANI AMMAN KOVIL

முக்கிய அறிவித்தல்

அம்பிகை அடியார்களே!

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பெயரில் இலங்கையிலும் சரி வேறு பிற நாடுகளிலும் சரி நிதியோ, பொருளோ பெற்றுக் கொள்வதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதை பலமுறை நாங்கள் பகிரங்கப்படுத்தியிருந்தும் இடம் பெயர்ந்த வன்னி மக்களிடமும், தூரதேசம் இருந்து வரும் மக்களிடமும் பலர் நூல்களை விற்பனை செய்தும் அம்பாளின் இலட்சனை குறிக்கப்பட்ட படங்களையும் விற்பனை செய்வதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளது என்பதை அடியார் களுக்கு அறியத் தருகிறோம். இவ்வாறான செயற்பாடுகளுக்கு அறங்காவலர் சபையினர் எவருக்கும் அனுமதி வழங்கவில்லை. யாராவது நிதியுதவி, நேர்த்திகள் செய்ய விரும்பினால் தபால் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். இலங்கையிலுள்ள வர்த்தகவங்கி, இலங்கை வங்கிகளில் வைப்பு செய்யலாம்.

எமது தொலைபேசி இலக்கம்: 021 321 3024, 021 320 7785
கணக்கு இலக்கம் : BOC 7687860, COM 1060012330, 01-2426285.01

அறங்காவலர் சபை
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்
(C-6578)

தனியார் கல்வி நிறுவனங்களை பதிவு செய்தல்

யாழ் மாநகர சபை எல்லைக்குள் இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனங்கள், கணினிக் கற்கைநெறி, தொழில்நுட்பப் பாடங்களைக் கற்பிக்கும் நிறுவனங்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புகளை நடாத்தும் நிறுவனங்கள் ஆகியன தத்தமது நிறுவனங்களை யாழ் மாநகர சபையில் பதிவு செய்து கொள்வதற்காக, எதிர்வரும் 31.05.2012 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன் அதற்கான விண்ணப்பப்படிவங்களை மாநகர சபை கலாசார பிரிவில் பெற்று விண்ணப்பிக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

முதல்வர்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
(C-6579)

## இன்று ஒரு தகவல்

# எதிர்மறை மனோபாவம்

நேற்றையதினம் காலையிலே போய் ஒரு கல்யாண விருந்திற்குப் போய் இருந்தியே...விருந்து எப்படி இருந்தது? என்று ஒருவர் கேட்டார்.

"எப்படி இருந்ததா?...சாப்பாடு சரியில்லை. சாம்பாரிலே உப்பு போதாது..."என்று அடுக்கிக்கொண்டே போனார். இது ஒரு மனிதனின் சுபாவம்.

எப்போதுமே எதிர்மறையான செய்திகளைப் பேசுவதில்தான் மனிதனுக்கு ஆர்வம் அதிகம் உண்டு.

எது சரியில்லை என்பதைச் சொல்லவே அவன் ஆசைப்படுகிறான். சரியாக நடந்தவற்றை சுட்டிக்காட்டிக் கூற அவன் விரும்பப்படமாட்டான்.

ஒரு பெரிய வெள்ளைத்தாளின் நடுவில் ஒரு சிறிய கறுப்புப் புள்ளியை வையுங்கள். அதை ஒருவரிடம் காட்டி "இது என்ன?" என்று கேளுங்கள்.

"கறுப்பப்புள்ளி" என்றுதான் சொல்லுவார்கள்.

ஒரு சிறிய கறுப்புப்புள்ளியைத்தான் அவர் கவனிக்கின்றார். அந்தப்புள்ளியைச் சுற்றியிருக்கும் விசாலமான வெள்ளைப் பகுதியை அவர் கவனிப்பதில்லை.

ஒரு கண்ணாடியின் முன்னால் போய் நிற்கிறோம். முகத்தை கண்ணாடிக்குக் காண்பிக்கிறோம்.

முதலில் நமக்குப் பிடிக்காத பகுதியைத்தான் முதலில் கவனிப்போம். கன்னத்தில் ஒரு பரு இருந்தால் அதுதான் முதலில் நம் கண்ணில் தென்படும்.

கறுப்பான ஒரு மச்சம் இருந்தால் அதைத்தான் கண்கள் முதலில் கவர்ந்து கவனிக்கும். அதைச் சுற்றியிருக்கும் அழகான பகுதிகள் எல்லாம் அதற்குப் பின்னர்தான்.

காலையிலே ஒரு செய்தித்தாளை கையில் எடுத்துப் புரட்டுகிறீர்கள். அதில் பிரசுரிக்கப்பட்டுள்ள எதிர்மறையான செய்திகளைத்தான் முதலில் பார்ப்போம். ஆக்கபூர்வமான செய்திகள் எல்லாம் அதன் பின்பு தான் வாசிப்போம்.

எதிர்மறையான செய்திகள்தான் பத்திரிகைகளின் விற்பனையை உயர்த்துகின்றது.

ஒரு கும்பலில் கலவரம் ஏற்பட்டுவிட்டது. பத்திரிகையில் அதை எப்படி பிரசுரிப்பார்கள்?

"கலவரத்தில் 10 பேர் உயிரிழந்தார்கள்" என்று எழுதுவார்கள். கலவரத்தில் 918 பேர் உயிரோடு திரும்பிப் போனார்கள்" என்று வராது.

எத்தனைபேர் இறந்து போனார்கள் என்பதுதான் பத்திரிகைக்கு முக்கியம்.

ஏனென்றால் மனிதமனம் அதைத்தான் கவன த்தில் கொள்கிறது. பாதகமான செய்திகளே பத்திரிகைகளில் அதிகம் வருகின்றன. எதிர்மறையான செய்திகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

இந்த உலகத்திலே எங்கே பார்த்தாலும் கொலையும் கொள்ளையும் விபத்தும் கற்பழிப்பம் உயிரிழப்பும் தான் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்த உலகில் இருந்தால் மகிழ்ச்சிகளையெல்லாம் நாம் மறந்து விடுகின்றோம். வாழ்வின் வெளிச்சங்களையெல்லாம் நாம் இழந்து விடுகின்றோம்.

இன்று விமானத்தில் பயணித்த 214 பேர் உயிரிழந்தார்கள் என்பது எதிர்மறையான செய்தி.

இன்று விமானம் மூலமாக இரண்டு இலட்சம் பேர் சௌகரியமாக பயணித்தார்கள் என்பது நேரிடை யான செய்தி. இறந்ததுதான் செய்தியாக வெளிவரும். சௌகரியமாக பயணித்தவர்கள் பற்றிய செய்தி வெளியே தெரியாது.

வாழ்க்கையின் சாதகமான அம்சங்களில் கவனம் செலுத்த நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வுலகில் நாம் மகிழ்வாக வாழ்வதற்கு நிறைய உண்டு. அவற்றையெல்லாம் கவனித்துப் பார்க்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். எதிர்மறையாகவே நினை ப்பது, பேசுவது என்ற இரு குணங்களையும் மாற்றிக் கொள்ளாதவன் எந்தக்காலத்திலேயும் வாழ்க்கை எனும் வட்டத்தில் முன்னேற்றம் காண முடியாது.

அப்படிப்பட்டவன் வெற்றிகரமான மனிதனும் கிடையாது.

எனவே, வாழ்வில் வெற்றிபெற விரும்புகிறவர்கள் எதிர்மறையான மனோபாவத்தை மாற்றிக்கொள்ளுங்கள்.

Negative விடயங்களில் இருந்து உங்கள் கவனத்தைத் திருப்புங்கள்.

Positive விடயங்களில் கவனத்தைச் செலுத்துங்கள் வெற்றி நிச்சயம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மரண தண்டனையை ஆயுள்தண்டனையாக குறைப்பது தொடர்பில் விசேடகுழு ஆராய்வு

(கொழும்பு)

மரண தண்டனை பெற்றுள்ள கைதிகள் தமது தண்டனையினை ஆயுள் தண்டனையாக குறைத்துத் தருமாறு விடுக்கும் வேண்டுகோள்களை ஆராயவென நியமிக்கப்பட்டிருக்கும் விசேட குழுவானது தொடர்ந்தும் மேற்படி கைதிகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாக அமைச்சின் செயலாளர் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்விசேட குழுவின் சிபாரிசுக்கமைய ஜனாதிபதி செயலகத்தின் அனுமதியுடன் இதுவரையில் 5 மரண தண்டனைக் கைதிகளது தண்டனைகள் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டுள்ளதெனவும் அமைச்சின் செயலாளர் கூறினார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் மரணதண்டனை விதிக்கப்படும் கைதிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்குவது தொடர்பில் ஆராயவென புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் 2011 ஆம் ஆண்டு இவ்விசேட குழு நியமிக்கப்பட்டது.

இக்குழு நியமிக்கப்பட்ட நாள் முதல் 2002 இலிருந்து மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் ஒவ்வொருவரதும் தனிப்பட்ட வழக்குகள்தொடர்பில்ஆராய்ந்துவருகிறது.

இருப்பினும் மரண தண்டனை விதிக்கப்பட்ட வழக்கில் நீதிமன்றம், சட்டமா அதிபர், நீதியமைச்சர் ஆகிய மூவரினதும் கருத்துக்களும் அபிப்பிராயங்களும் வித்தியாசப்படும் வழக்குகளை மாத்திரமே இக்குழு ஆராய்ந்து சிபாரிசு செய்ய முடியுமேயொழிய மேற்படி மூவரினதும் கருத்துக்கள் ஒருமித்த நிலையில் ஒரு கைதிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்குமாயின் அவரது தண்டனையினை ஆயுள் தண்டனையாக மாற்ற இயலாதெனவும் அதற்கு சட்டத்தில் இடமில்லை எனவும் அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

மரண தண்டனையானது 1979 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் திகதி முதல் எமது சட்டத்திலிருந்து நீக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மரண தண்டனைக் கைதிகள் யாவருக்கும் அவர்களது தண்டனை ஆயுள்தண்டனையாக குறைக்கப்பட்டது. இந்நடைமுறை 2002 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஆராய்வதற்கென்றே மேற்படி விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் தெரிவாகியோர்

மெய்வல்லுநர் சம்மேளனத்தால் நடத்தப்படும் கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகள் நேற்றைய தினம் கொழும்பு தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்.அருணோதயா கல்லூரியிலிருந்து 18, 20, 23 வயது கீழ் பிரிவினர் பங்கேற்ற கோலூன்றி பாய்தல் விளையாட்டில் மூன்று முதலிடங்களையும் 23 வயது கீழ் பிரிவினர் பங்கேற்ற கோலூன்றி பாய்தல் விளையாட்டில் மூன்றாம் இடத்தையும் பெற்ற மாணவிகளின் பெயர் விபரத்தினை பாடசாலை அதிபர் நா.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் வெற்றியீட்டிய மாணவிகளின் பெயர் விபரம் வருமாறு, 18 வயது பிரிவு - கு.டிலக்சனா, 20 வயது கீழ் பெண்கள் பிரிவு - அ.பவித்திரா , 23 வயது கீழ் பெண்கள் பிரிவு - ச.தனுஷா, 23 வயது கீழ் பெண்கள் பிரிவு இ.காவேரி (மூன் றாம் இடம்)

(அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 200 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 50 | 50 |
| தக்காளி | 100 | 110 | 120 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 10 | 30 |
| கோவா | 30 | 30 | 30 | 40 |
| கரட் | 40 | 40 | 50 | 60 |
| பூசணி | 25-30 | 20 | 25 | 40 |
| புடோல் | 45 | 40 | 45 | 60 |
| வாழைக்காய் | 15-20 | 20 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 40-70 | 40-90 | 70 | 50-80 |
| பெரிய வெங்காயம் | 65 | 80 | 75 | 70 |
| பாகற்காய் | 90 | 90 | 55 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 70 | 30 | 70 | 30 |
| லீக்ஸ் | 100 | 90 | 90 | 140 |
| பீற்றூட் | - | 60 | - | 60 |
| கறிமிளகாய் | 40 | 60 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 160 | 250 | 200 | 200-250 |
| போஞ்சி | 40 | 140 | - | 160 |
| கத்தரிதம்புள்ள | - | 100 | 150 | - |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 100 | 110 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 25 | 25 | 15-18 |

# இராசி பலன்

*11.05.2012*
*(சித்திரை 29, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு*
*சஷ்டி முன்னிரவு 9.57 மணிவரை*
*உத்தராடம் முன்னிரவு 11.12 மணிவரை*
*இராகுகாலம் 10.24-11.54 மணிவரை*
*சுபநேரம் 5.54-7.24 மணிவரை*

**மேடம்** புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம்,வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீகள்.

**இடபம்** கடின உழைப்பால் உயர்வடைவீர்கள், ஆன்றோர்களின் ஆசி கிடைக்கலாம், குடும்பத்தில் நிலவி வந்த மனச்சஞ்சலங்கள் அகலும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள்.

**மிதுனம்** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

**கடகம்** நட்பால் காரியமொன்று நடைபெறும் நாள், தொழிலில் உயரதிகாரிகளின் ஆதரவை பெறுவீர்கள், புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**சிங்கம்** தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் பணிபுரியும் நாள், எதிரிகள் விலகுவர், சிக்கனத்தை கடைப்பிக்கும் எண்ணம் உருவாகும், தொழில் முன்னேற்றமுண்டு.

**கன்னி** நீண்ட நாளாக தள்ளிப்போட்ட காரியமொன்றை இன்று திடீரென செய்து முடிப்பீர்கள், வியாபார விருத்தியுண்டு, மனநிறைவு கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தொழில் முன்னேற்றமுண்டு, பயணங்களால் பலனுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர், சுவாரஸ்யமான நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**தனுசு** எதிர்பாராத வகையில் பண வரவுகள் ஏற்படலாம், செய்தொழிலில் முன்னேற்றமுண்டு,கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், நாவன்மையால் நல்ல பெயரெடுக்கம் நாள்.

**மகரம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உடல் நலனில் அதிக அக்கறை ஏற்படும், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தை கொடுக்கலாம்.

**கும்பம்** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணை புரிவர், உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், சயன சுகக்குறைவான நாள்.

**மீனம்** அதிஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், போசன சுகமுண்டு, பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும்.

வளவன்

# உயிர் மீண்ட காளை மாடு 4

'மனுநீதிச்சோழமன்னன் மாட்டிற்கு வழங்கிய நீதி தமிழர் ஆட்சியில் 'மாடு' பெற்றிருந்த பெருமையைக் காட்டி நிற்கின்றது.

'கோ' பூசை செய்து வழிபாடாற்றும் சைவத்தமிழர் பண்பாட்டில் பசுக்களையும் எருதுகளையும் பராமரித்த வரலாற்றை அறிவது யாழ்ப்பாண மண்ணில் மாடுகள் வெட்டப்படுவதைத் தடுப்பதற்கான வழி யெனலாம்.

சிவபூமி என்று போற்றப்பட்ட ஈழத்தில் மாடு வெட்டப்படுவதென்பது மகாபாவம்.

சைவமக்கள் மட்டுமல்ல கத்தோலிக்கர்கள், இஸ்லாமியர்கள், பௌத்தர்கள் என அனைத்து மக்களும் மாடு வெட்டப்படுவதை- இறைச்சி விற்கப்படுவதை- மாட்டிறைச்சி உண்பதை தவிர்க்கவும் தடுக்கவும் வேண்டும்.


பெற்ற தாய்க்கு அடுத்தபடியாகப் பால் தரும் பசுவையும் அதனோடு இணைந்த காளை மாடுகளையும் கொன்று புலால் தின்பது கொடும்பாவம் என்பதை மக்கள் மறந்துபோய் இருப்பது வேதனையிலும் வேதனை. ஒரு காலத்தில் எங்கள் மண்ணில் வாழ்ந்தவர்கள் தங்கள் வீட்டுக்கு வெளியில் தொட்டிகட்டி அந்தத் தொட்டிக்கு நீர் இறைத்து வீதியால் செல்கின்ற பசுக்களும் காளைகளும் தண்ணீர் பருகித்தாகம் தீர்க்க வழிசெய்தனர். இவை தாங்கள் வளர்க்கின்ற மாடுகளுக்கானது அல்ல. யாருடைய மாடுகளாக இருந்தாலும் அவை தண்ணீர் பருகவேண்டும் என்ற உயர் நோக்கத்திற்காகவே இப்படி ஒரு ஏற்பாடு.

அந்தணர்களை நிந்தை செய்தால் அது எங்ஙனம் பிரம்மகத்திதோஷத்தை தருமோ அதுபோல மாடுகளுக்கு உணவுகொடுக்காமை, அவற்றைத் தாகத்தோடு அலைய விடுதல், அவற்றை அடித்துத் துன்புறுத்துவது என மாடுகளுக்குச் செய்யும் நிந்தைகளும் தோஷத்திற்குரியவையே.

**அம்மா என்றழைக்கும் உயிர்**

'அம்மா' என்ற சொல்லின் பெருமையை இவ்விடத்தில் எடுத்தியம்பித்தான் நீங்கள் அறியவேண்டும் என்பதில்லை. தமிழில் அகரமாக அமைவது 'அம்மா'. அம்மா என்ற சொற்பதத்திற்குள் இருக்கக்கூடிய தெய்வீகம் அற்புதமானது. 'அம்மா' என்ற உயர் பதத்தை மனிதர்கள் தவிர்ந்த உலகுவாழ் ஜீவராசிகள் ஏதேனும் உச்சாடனம் செய்கின்றனவா எனில் 'மாடுகள்' மட்டுமே அம்மா என்று அழைக்கின்றன என்பதை அறியமுடியும்.


உலகில் உள்ள அத்தனை ஐந்தறிவு ஜீவ ராசிகளிலும் 'மாடு' மட்டுமே அம்மா என்று அழைக்கின்ற தெனில் மாடுகளில் இருக்கக் கூடிய அற்புதத்தை அதன் தெய்வீகத் தன்மையை நாம் கருத்திற்கொள்ளாமல் விடுவது நியாயமன்று.



'அம்மா' என்ற அகரம் தெய்வீகத் தன்மைபொருந்திய மாடுகளாலும் எழுப்பப்படும் போது அதன் உறவுமுறைப்பண்பாடு கூர்ந்து கவனிக்கத்தக்கது.

**ஐந்தறிவு ஜீவராசிகளில் 'அம்மா' என்றழைக்கும் தெய்வீகசக்தி மாடுகளுக்கு மட்டுமே உண்டு**

பசிக்கும் போது, தாகத்தால் தவிக்கும் போது 'அம்மா' என்று தன் எஜமானை- எஜமாட்டியை மாடு அழைக்கின்றது. இது தன்னிலைப்பட்டது. ஒரு பிள்ளை 'அம்மா' பசியாயிருக்கு என்று முறையிடுவது போல இது அமையும்.



அதாவது, மாடு தன் எஜமானை பால் வேறுபாடின்றி அம்மா என்று அழைக்கின்றது. தனக்கு உணவு தருகின்றவரை அம்மா என்று அழைக்கும் அற்புதத்தை வேறு எங்குதான் பார்க்க முடியும். இது தன்னிலைப் பட்டது.

மறுபுறத்தில் தன் கன்று தன்னை விட்டுத் துள்ளிக் குதித்து ஓடித்திரிகின்றது. துள்ளித்திரியும் கன்று தன்னை விட்டு எட்டிய தூரத்திற்குச் செல்வதை அல்லது தன் கண்ணிலிருந்து மறைந்து போவதை உணர்ந்த பசு 'அம்மா' என்று கத்துகின்றது. இதற்கு இரண்டு பொருள் உண்டு. அதில் ஒன்று தன் கன்றை தன் அருகில் அழைப்பது. மற்றையது 'அம்மா' என்று தன் எஜமானை அல்லது எஜமாட்டியை அழைத்து என் பிள்ளை (உன் பிள்ளை) துள்ளித்திரிகிறான் அவனை என்னருகில் கொண்டு வந்துசேருங்கள் என்று முறையிடுகின்றது.

தாய் தன் பிள்ளைக்குப் பாலைக்கொடுக்கின்றாள். ஆனால் பசுவோ தன் பிள்ளைக்கு மட்டுமல்ல உலகெங்குமுள்ள மனிதர்களுக்கும் பாலைக்கொடுக்கின்றது. இதன் காரணமாகவே உலகமாதா என்று பசுவை போற்றுகின்றோம்.

இங்குதான் தோடுடைய செவியன் விடையேறியோன்... என்ற தேவாரத் திருமுறைக்குப் பொருள் கிடைக்கின்றது. அதாவது அம்மையே அப்பா என்று அழுத குழந்தைக்குப் பால் கொடுக்க பார்வதி பரமேஸ்வரனுடன் அம்மா என்ற சொற்பதத்தை விளங்கிக்கொண்ட எருதுவும் பார்வதி பரமேஸ்வரனுடன் சீர்காழிக்கு வந்தது. எருதுவின் வருகைக்குக் காரணம் உண்டு.

(வளரும்)

**விதுரன்**

**அன்புப்பெரியோர்களே!**

கீரிமலை நகுலேஸ்வரத்தில் பராமரிக்கப் பட்டு வரும் காளைமாட்டுக்கு உங்களால் இயன்றளவில் புல், வைக்கோல், மாஸ் என்பவற்றை வழங்கி உதவுங்கள்.

இடபத்திற்கு உணவு வழங்குதல் கோடி புண்ணியம் -பாவவிமோசனம்.

# பாலியல் கல்வி மாணவர்களுக்கு போதிக்கப்படுவது அவசியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் இளவயதுக் கர்ப்பம், பாலியல் துஷ்பிரயோகம் என்பவற்றை கட்டுப்படுத்த பாலியல் தொடர்பான கல்வி மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியமானது என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் மலேரியா டெங்கு போன்ற தொற்று நோய்களின் தாக்கம் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதோடு தொற்றா நோய்களினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் கலாசார சீர்கேடுகள் தொடர்பாக பல முறைப்பாடுகளும் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக இளவயது கர்ப்பம், சிறுவர் துஷ்பிரயோகம் போன்றன அதிகரித்து வருகின்றன.

இவற்றை கட்டுப்படுத்த பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளுக்கு பாலியல் தொடர்பான கல்வி போதிக்கப்பட வேண்டியது அவசியமானதாகவுள்ளது.

பாடசாலை புத்தகங்களில் இக்கல்வி தொடர்பான பாடப்பரப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ள போதும் அதனைக் கற்பிக்க ஆசிரியர்கள் தயக்கம் காட்டுவதுடன் பரீட்சைகளில் இக்கல்வி தொடர்பான வினாக்கள் உள்ளடக்கப்படா தன் காரணமாக ஆசிரியர்கள் அதனைக் கற்பிப்பதற்கு அக்கறை எடுப்பதில்லை.

இது தொடர்பாக கல்வி அதிகாரிகளுடன் சுகாதார திணைக்களம் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது.

விஞ்ஞான ரீதியாக இக்கல்வி போதிக்கப்படும் போது பாலியல் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்த முடியும். மாணவர்கள் மட்டத்தில் பாலியல் தொடர்பான கல்வி போதிக்கப்படும் போதுதான் இளவயதுக் கர்ப்பம், சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற்றை கட்டுப்படுத்த முடியும்.

இக்கல்வியை தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தி வருகின்றோம். அத்தோடு யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு வலயத்திலும் நடைமுறைக்கு வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-6)

# பல்கலை. மாணவர்களுக்கான இரண்டாவது தலைமைத்துவ பயிற்சி 27 ஆம் திகதி ஆரம்பம்

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களுக்கான இரண்டாவது தலைமைத்துவப் பயிற்சி எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாவதாக உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பி.ஜி.ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களின் தலைமைத்துவ மற்றும் ஆளுமைத் திறன்களை மேம்படுத்தும் நோக்கிலான இப் பயிற்சிநெறி எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 15ஆம் திகதி வரை 24 பயிற்சி நிலையங்களில் நடைபெறும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இப் பயிற்சியில் முதற்கட்டமாக பத்தாயிரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இப் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மாணவர்கள் மே மாதம் 27ஆம் திகதி மாலை 6 மணிக்குள் தங்களது பயிற்சி நிலையங்களுக்கு வருகை தர வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இலங்கையின் எதிர்காலம் உலகளாவிய மாற்றம், வாழ்க்கையைத் திட்டமிடல், நீண்ட கால நோக்கினை அண்மித்தல், உடற்பயிற்சி, முதலுதவி, தலைமைத்துவ பண்புகள், தலைமைத்துவம் உளநலம், சாதாரண சட்டங்கள், சமூக பழக்கவழக்கங்கள் உட்பட பல விடயங்கள் இப் பயிற்சி நெறியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மாணவ, மாணவியருக்கு அடுத்த வாரத்திற்குள் அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ-2)


## பதவி வெற்றிடம்

**யாழ்ப்பாணத்தில்**

**26 வருட டெலிகொம் சேவை அனுபவம் கொண்டதும் ISO 9001:2008 OMSதகைமையும் கொண்ட நமது கம்பனிக்கு**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ரெலிகொம் வேலைத்திட்ட அலுவலகத் திற்கு அனுபவமும் ஆர்வமும் கொண்ட நபர்களிடமிருந்து கீழ்க்கண்ட வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ தொழில்நுட்ப அலுவலர்(Technical Officer)

தகைமைகள்:- தேசிய தொழில் நுட்பச்சான்றிதல் (NCT) அல்லது நிகரான தகைமையுடன் தொழில்நுட்ப வேலை மேற்பார்வையாளர் அனுபவம். டெலிகொம் OSP அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

★ தொழில் நுட்ப உதவியாளர்(Technician)

தகைமைகள்:- க.பொ.த (சா/த) சித்தியுடன் மின் இணைப்பு அனுபவம்.

தகுந்த மாதவேதனம் வழங்கப்படும். தயவு செய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு E.mail மூலமாகவோ அல்லது Fax மூலமாகவோ 10 நாட்களுக்குள் தங்களது சுயவிபரக் கோவையை அனுப்பிவைக்கவும்.

**GROUP MANAGER (HRD &Admin)**
**Luminex (PVT)Ltd,**
**No-24, New Galle Road,**
**Moratuva.**

Fax:-0112642999 E.mail :-Luminex@slt.lk

(8433)


# அபிவிருத்தி திட்டங்கள் மக்களை பாதிப்பவையாக இருக்கக் கூடாது

## அனல் மின் நிலையம் குறித்து சம்பந்தன்

(கொழும்பு)

சம்பூரில் அமைக்கப்படவுள்ள அனல் மின் நிலையத் திட்டத்தை நாம் எதிர்க்கவில்லை. என்றாலும் அந்தப் பிரதேசத்திலிரு ந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்களை வெகுவிரைவில் மீளக் குடியமர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி தெரிவித்தார்.

சம்பூர் அனல் மின் நிலையத்திற்கு வரிச்சலுகை தொடர்பான கட்டளைச் சட்டம் மீதான விவாதம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் சம்பூரில் அனல் மின் நிலையம் அமைப்பதை நாம் எதிர்க்கவில்லை.

நாட்டின் அபிவிருத்திக்காக இதுபோன்ற திட்டங்கள் தேவைதான். அதற்காக அந்தப் பிரதேசத்திலுள்ள மக்கள் பாதிக்கக்கூடாது. சம்பூரின் அனல் மின் நிலையம் அமைக்கப்படவுள்ள பிரதேசத்தை தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலாவது அந்தப் பிரதேச மக்களை குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுமார் ஐந்து வருடங்களுக்கு மேலாக இந்த மக்கள் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். அந்த மக்கள் வெகுவிரைவில் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட வேண்டும். அதே போன்று இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணப் பொருட்கள் தற்பொழுது வழங்கப்படுவதில்லை.

அந்த மக்களுக்கான உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வெகுவிரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றோம்.

சம்பூர் மக்களை வெகுவிரைவில் மீள்குடியமர்த்த அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்றும் சம்பந்தன் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

(அ-2)

# தரம் 5 முன்னோடி பரீட்சை நாளை

(பூந்தோட்டம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை நாளை சனிக்கிழமை உரிய பாடசாலைகளில் நடைபெறும் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை கடந்த சனிக்கிழமை நடத்த திட்டமிடப்பட்டு பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ-3-266)


## மலேரியா அற்ற இலங்கை - 2014

மலேரியா விழிப்புணர்வு நடைப்பேரணி
11.05.2012 காலை 9.30 மணி
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

செய்தி

இலங்கையிலிருந்து மலேரியாவை ஒழித்துக் கட்டுவதற்கு
நாங்களும் பங்கேற்போம்

மலேரியா விழிப்புணர்வு கண்காட்சி
11.05.2012 காலை 10.30 மணி யா/இந்துக் கல்லூரி

## சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மகேஷ் எழுதிய தாரணி ஓர் ஆச்சரியக்குறி சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆறுதல் நிர்வாகப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் கலந்து கொள்வார்.

நூல் வெளியீட்டுரையினை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன், நூல் ஆய்வுரையினை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் த.லலீசன், எழுத்தாளர் தாட்ஷாயினி ஆகியோர் ஆற்றவுள்ளனர். (அ-9)




## கோண்டாவில் தில்லையம்பதி மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய 37 ஆவது ஆண்டு வைகாசி மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா 12 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் அதனைத் தொடர்ந்து மாலை 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் இடம்பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறும். எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு பூங்காவனம் இடம்பெறும். (அ-2)

## கூட்டம்

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் கட்டைவேலி உப அலுவலக நூலகத்தின் ஆலோசனைக்குழு தெரிவுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-3-24)

# 14 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)

நிறுவல் அளவைத் திணைக்களத்தினால் 14 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட நிறுவல் அளவைத் திணைக்களப் பொறுப்பதிகாரி வி.கிருஷ்ணதாசன் தெரிவித்தார்.

நுகர்வோரினால் கொடுக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது அங்கீகரிக்கப்படாத நிறுவல் அளவைக்கருவிகளைப் பயன்படுத்திய 14 வர்த்தகர்களுக்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதியிலுள்ள வர்த்தகர்களுக்கு எதிராகவே இந்த வழக்குகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அங்கீகரிக்கப்படாத நிறுவல் அளவைக் கருவிகளைப் பயன்படுத்தும் வர்த்தகர்களுக்கு எதிராகத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# அரச சாராயம் வைத்திருந்தவருக்கு 27ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்தில் தமது வீடுகளில் அளவுக்கு அதிகமான அரச சாராயம் வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட 9 பேருக்கு 27 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

தமது வீடுகளில் அளவுக்கு அதிகமான அரச சாராயத்தை வைத்திருந்த வேளை மதுவரி திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட தேடுதலின் போது குறித்த 9 நபர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம். குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளிகளாகக் கண்டு 9 நபர்களுக்கும் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த உத்தரவிட்டார். (அ-3-24)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென் மராட்சிப்பிரதேசம், ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## வில்லூன்றிப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வில்லூன்றிவீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

அத்தோடு புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

மகோற்சவ காலத்தில் தினமும் காலை 7.30 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் வசந்தமண்டபப்பூசையும் நடைபெறும் என தர்மபரிபாலன சபைத் தலைவர் இ.குமாரவடிவேல் அறிவித்துள்ளார். (அ-9)

## புத்தக அன்பளிப்பு செயற்றிட்டம்

(சாவகச்சேரி)

புத்தக தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினர் பொதுமக்களிடம் இருந்து புத்தகங்களை அன்பளிப்பாக பெறும் செயற்றிட்டத்தை இவ்வாரம் ஆரம்பிதுள்ளனர்.

எனவே பொதுமக்கள் இவ்வாரத்தில் வீட்டுக்கு ஒரு புத்தகம்ாவது தந்து நூலகத்தின் மேம்பாட்டுக்கு ஆதரவு தருமாறு நூலகரும் நூலக அபிவிருத்தி ஆலோசனை சபையினரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-29)

# மன்நிலை பாதிப்புக்கு உள்ளான பெண்ணுக்கு நீதிமன்றம் விடுதலை

இலங்கை முப்படையின் யுத்த நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகளினை பாதுகாக்கும் பொருட்டு அளம்பில் பிரதேசத்தில் யுத்த நடவடிக்கையில் ஈடுபட்டார் என குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு 4 வருடங்களாக பூசா முகாமிலும் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த இளம் பெண்ணுக்கு மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு யாழ். மேல் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இராமநாதபுரம் வட்டக்கச்சியினை சேர்ந்த குறித்த பெண் 26.11.2008 ஆம் ஆண்டு குமுழமுனை பூநகரியில் சூட்டுக்காயங்களுடன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட இவர் மீது ஏகே. 47 துப்பாக்கி மூலம் குறிபார்த்து சுடும் பயிற்சி பெற்றார் என்றும் யுத்த தந்திரோபாயங்கள் தொடர்பான பயிற்சி பெற்றார் என்றும் முப்படையினருக்கு எதிராக தாக்குதல் நடத்தினார் எனவும் குற்றம் சாட்டப்பட்டு 2010 ஆம் ஆண்டு ஆடி மாதம் 6 ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைகளின் போது குறித்த பெண் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தமையினால் நீண்ட காலமாக வழக்கு மன்றில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை உளநல மருத்துவ நிபுணர் எஸ். சிவயோகனின் அறிக்கையின் பின்னர் குறித்த வழக்கு நேற்று முன்தினம் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது அரச சட்டத்தரணி திருக்குமரன் குறித்த வழக்கினை தொடர்ந்தும் நடத்திச் செல்லும் எண்ணம் சட்டமா அதிபருக்கு இல்லை எனக்கூறி வழக்கினை வாபஸ் பெறுவதாக தெரிவித்ததை அடுத்து குறித்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.


குறித்த வழக்கில் சந்தேக நபரான பெண் சார்பில் சட்டத்தரணி எம்.றெமீடியஸ் ஆஜராகி இருந்தார். (அ-4)





யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 17 வயது பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப்போட்டி நேற்று முன்தினம் இமையாணன் மத்திய விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் சம்பியனான சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியினரையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ். செல்வதீபன்)

# அன்பை கொண்டாடுதல்



ஆன்மீகம் 51

## பிரச்சினைகள்

ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மிகச்சிறந்த வழி அந்தப்பிரச்சினை "ஒரு பிரச்சினையே அல்ல" என்று கொள்வதே ஆகும். அதற்கு அடுத்த சிறந்த வழியாதெனில் அதை ஒரு சவாலாக மனமுவந்து ஏற்றுக் கொள்ளுதலாகும். மூன்றாவது வழி யாதெனில் அது நம்மைத் தூக்கத்தில் பயமுறுத்தும் ஒரு பயங்கர ஜந்துவேயன்றி, உண்மையில்லை என்று அறிவதும் ஆகும்.

இறுதியான வழி என்னவெனில், ஒரு பிரச்சினை நமக்குவரும் முன்னே இயற்கை நமக்கு அதற்கான வழி அல்லது தீர்வையும் அளித்து விடுகிறது. குளிர்காலத்தில் நுண்ணுயிர்கள் இருப்பதே இல்லை. ஏனெனில், அதனால் வரும் நோயை குணமாக்கத் தேவையான மூலிகைகள் அப்பொழுது வளருவதில்லை. வசந்தகாலத்தில் அதாவது இளவேனில்காலத்தில் மூலிகைகள் முதலில் மளமளவென வளர்ந்து விடுகின்றன. பிறகு பூச்சிகள் தோன்றுகின்றன. கோடைகாலத்தில் முதலில் மரங்கள் நிழல் தர ஆரம்பித்த பிறகே வெப்பம் தீவிரமாகிறது. எனவே, இயற்கை நம்மை நன்று கவனித்துக்கொள்கிறது.

**கேள்வி:** பேரவா அல்லது விருப்பம் கொள்ளவதே பிரச்சினையாயிருந்தால் என்ன வழி?

ஆவல் அல்லது விருப்பம் உங்களை முதிர்ச்சி அடையச் செய்து பக்குவப்படுத்துகிறது. எல்லாப் பிரச்சினைகளையும் உடனே தீர்த்து விடவேண்டும் என்று முயலாதீர்கள்.



ஏதாவது ஒன்றையாவது தீர்க்காமல் வைத்திருங்கள். பலவாயில்லை, சில சமயம் கொறிப்பதற்கு ஏதேனும் வேண்டியிருப்பதுபோல், வாழ்க்கையில் ஒரு பிரச்சினையுடனே நகரந்து கொண்டே செல்லாம்.

எப்பொழுது பிரச்சினை வந்தாலும், நீங்கள் அதெல்லாம் ஒரு பிரச்சினை இல்லை என்று சொல்லி விடுவீர்கள். அல்லது உட்கார்ந்து அதை எப்படித் தீர்ப்பது என்று அதை ஒரு பெரிய பாடாக நினைத்து அலசிக் கொண்டிருப்பீர்கள். இந்த இரண்டுமே சரியாக உதவப்போவதில்லை. அந்தப் பிரச்சினையை மறுப்பதாலோ அல்லது அதையே நினைத்துக் கொண்டிருப்பதாலோ பிரச்சினை தானே மறைந்துவிடாது.

ஒரு பிரச்சினையைத் தீர்க்க, பின்வரும் 5 படிகள் உள்ளன.

முதலில் அதை நம்முடைய பிரச்சினையாக இது இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுங்கள்.

அதை ஒரு சிறிய பிரச்சினையாகவே பாருங்கள். அது மிகப் பெரிய பிரச்சினை என்று கூறாதீர்கள்.

பிரச்சினை சில நபர்களோடு சம்பந்தப்பட்டதெனில், அவர்களோடு தொடர்புடையவராக இருங்கள்; அவர்களைத் தவிர்க்க முயலாதீர்கள்.

குறைவாக அதைப்பற்றிப் பேசி, காலத்திற்கு அவகாசங் கொடுங்கள்.

கூடிமகிழ்ந்து கொண்டாடுங்கள். பிரச்சினையை சற்றுப் பின்னுக்குத் தள்ளி, நீங்கள் குதூகலமாக இருங்கள். சரியான கால அவகாசத்திற்குள் அந்த பிரச்சினை தீர்க்கப் பட்டுவதைக் காணலாம்!

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உட்கார்ந்து யோசிக்கும் முறையைத் தவிர்ப்பது அறிவார்ந்த செயலாகும். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக நடத்தப்படும் பல கூட்டங்கள் பெரும்பாலும் விபரீதமாகத்தான் முடியும். உங்களுக்குப் பிரச்சினையே இல்லாவிடில்கூட, நீங்களே உண்டு பண்ணிக் கொள்ளுவீர்கள். அல்லது நீங்களே ஒரு பிரச்சினையாகி விடுவீர்கள். உங்களிடம் ஒரு சிறு பிரச்சினை இருந்தால் பரவாயில்லை, அது உங்கள்

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

மனதை குவியச்செய்ய வாவது பயன்படும்.

ஒரு பிரச்சினை உங்களுக்கு இருப்பது எவ்வளவோ பரவாயில்லை; நீங்களே ஒரு பிரச்சினையாக இல்லாமலிருத்தல்தான் முக்கியம்.

(தொடரும்)


# உங்கள் கைரேகை பலன்கள் 51


## புத்தி இரேகையின் குற்றங்குறைகள்

**சக்தி**

முதலாவது ஏற்றத் தாழ்வான இரேகையைக் கணிப்போம். புத்தி இரேகை ஆரம்பத்தில் மெல்லியதாயும், பிறகு சற்றுத் தடித்தும் அமைவதுண்டு.

1. புத்தி இரேகை ஒன்றேயாயினும் இரண்டு மூன்று விதமாய் மெலிந்தும் தடித்தும் காணப் படுவதால் மனோ தர்மம் சிறுது காலம் திடமாயும், பிறகு பலவீனமாயுமிருந்து வருவதைக் குறிக்கும். இவை கால அளவுக்குட்பட்டிருக்கும். இரேகை நன்கு பதிந்துள்ள காலளவில் ஆழந்த புத்தியைக் குறிக்கும். இதற்குத் தக்கவாறு மூளையும் பலமுடையதாயிருக்குமென்பதில் ஐயமில்லை.





ஏற்றத்தாழ்வு தொடர்ந்திருக்குமாயின் ஊக்கம், உன்மத்த நிலை கலந்திருப்பதால் மனோ தர்மம் சம்பந்தமின்றியே மாறிக்கொண்டிருக்கும். சிறிது பெரிதாயுள்ள இரேகையில் நக்ஷத்திரக்குறி, கிராஸ் அல்லது புள்ளியிருந்தாலும் பக்கவாதம் அல்லது சித்த பேதத்தைக் குறிக்கும். இத்தகையோருக்குப் போதுமான நித்திரையும், எதையுங்கண்டு ஆச்சரியப் படாதிருந்தாலும் நல்ல பாதுகாப்பாகும்.

2. புத்தி இரேகையில் சிலும்பலான சிறு பிளவுற்ற இரேகை பொதுவாய் நல்ல அறிகுறியாகும். இத்தகையோர் பல வழிகளிலும் முயன்று முன்னேற்றமடைவதைக் குறிக்கும். இந்தச் சிறு இரேகைக் கிளைகள் எல்லாக் கிரகச் சார்புகளையும் நாடி நிற்கின்றன. இதனால் எப்பொழுதும் பலனுள்ள பிரவிருத்தியிலிருந்து வருவதைக்குறிக்கும்.

3. புத்தி இரேகையிலுள்ள சிலும்பக் குறிகள் படத்தில் காணப் படுவதுபோல் சற்று நீளமாகக் காணப்படில், பல வழிகளில் நாட்டம் வைத்துச் சலன புத்தியால் ஒன்றிலும் சித்தி பெறாத நிலையைக் குறிக்கும். மேலும் ஆழ்ந்த சிந்தனையிராது. புத்தி இரேகை சந்திர மேட்டிலிறங்கியிருக்குமாயின், அதிகமான மனோ அலைச்சலையும் பகற் கனவையும் குறிக்கும்.

4. புத்தி இரேகையின் சிலும்பக் குறி கீழ் நோக்கியிருந்தால், அதில் சீக்கிரம் அதைரியப்படுத்துவர். வாழ்வின் முட்டுக்கட்டைகளை எதிர்த்துப் போராடக்கூடிய திடசித்தமிராது. மேலும் தான் துரதிர்ஷ்டசாலி என்று சொல்லிக் கொள்ள நேரிடும். எந்தத் தொழிலையும் சுலபமாகச்செய்து விடுவதாகச் சென்று நஷ்டமடைவர். இது பொதுவாய்ப் பிரவிருத்தியில் ஏமாற்றத்தையும் மனக்கஷ்டத்தையும் குறிப்பதாகும். இத்தகையோருக்கு நிதானித்துத் தன்னடக்கமாயிருக்கும்படி நன்மதி கூறுதல் நலமாகும்.

5. புத்தி இரேகையில் கிளை குரு மேட்டை நோக்கியிருக்குமாயின், பெரிய எண்ணங்களோடு கௌரவத்தையும் சௌரியத்தையும் தேடுபவரென்பதைக் குறிக்கும். கீர்த்தியையும் புகழையும் நாடியிருப்பர். குருமேடு பெருமிதமாகக் காணப்படில், கர்வத்தோடு அபிலாசை கொண்டவர்.


6. புத்தி இரேகையின் கிளை சனிமேட்டை நோக்கிச் சென்றிருந்தால் சனி ஆதிக்கத்துக்குள்ள பெருங்குணங்களும் நல்ல பலன்களும் உண்டாகும். ஞானம், அடக்கம், அதிஜாக்கிரதை இவைகளையும் குறிக்கும். புத்தி ஒரு கிரக பலத்தைத் தன்வசப்படுத்துவதாகும்.

இவ்வாறு புத்தி இரேகையின் கிளை மேல்நோக்கி எந்தக் கிரகத்தை ஆச்ரயித்தாலும் அதன் நற்குணமெல்லாம் புத்தியின் வழியாகப் பலிதமாகும்.

(தொடரும்)

# அமெரிக்கா செல்லும் பீரிஸ் அரசின் நிலையை காட்டிக் கொடுக்கக் கூடாது

## அமைச்சர் சம்பிக்க வலியுறுத்து



(கொழும்பு)

**அமெரிக்க இராஜாங்க செயலர் ஹிலாரி கிளின்டனை வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சந்திப்பதில் எவ்விதமான தவறும் கிடையாது. ஆனால், நிலைப்பாட்டை விட்டுக் கொடுத்துவிடக் கூடாது என அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

ஜெனீவாவில் அமெரிக்கா இலங்கைக்கு செய்த துரோகத்தனத்தை எளிதில் மறந்து விட முடியாது. அதேபோன்று நாட்டின் அரசியலமைப்பு மற்றும் தேசிய தீர்வுத் திட்டங்களை மாற்றியமைக்கத் தனி மனிதர்களுக்கு உரிமையோ அதிகாரமோ கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் அமெரிக்க விஜயம் குறித்து உள் நாட் டில் பல்வேறு கருத்துக்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன. அரசியல் தீர்வு குறித்தோ நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்தோ எவ்விதமான தகவல்களையும் அமெரிக்காவிற்கு வழங்க வேண்டியதும் இல்லை. ஏனென்றால் ஜெனீவாவில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக செய்த துரோகத்தனத்தை மறக்கவோ மன்னிக்கவோ முடியாது.

எனவே, அமெரிக்கா செல்லவிருக்கும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதுவரையில் பாதுகாக்கப்பட்ட நிலைப்பாடுகளை காட்டிக் கொடுத்து விடக்கூடாது. இராஜதந்திர ரீதியில் செயற்பட்டு உறுதியான நிலைப்பாடுகளை தெளிவுபடுத்த வேண்டும். ஹிலாரி கிளின்டனின் விருப்பத்திற்கு ஏற்றவாறு உள்நாட்டின் அரசியலமைப்பை மாற்றிவிட முடியாது. அதே போன்று ஜனாதிபதிக்கு கூட அவ்வதிகாரம் கிடையாது. மக்களால் தெரிவு செய்யப்ப டும் பாராளுமன்றத்திலேயே தீர்மானங்களை மேற்கொண்டு நிறைவேற்ற முடியும்.

இந்திய விஜயத்தின் போது அமெரிக்க இராஜாங்க செயலர் ஹிலாரி கிளின்டன் இலங்கையின் அரசியல் தீர்வு குறித்து கருத்துக்களை வெளியிட்டிருந்தார். இதனை வன்மையாக நாங்கள் கண்டிக்கின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

# மாவட்ட தெரிவிற்கான விளையாட்டுப் போட்டி

(மாங்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் மாவட்ட மட்ட அணியை தெரிவு செய்வதற்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதனடிப்படையில் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை ஒட்டுசுட்டானில் நடைபெறவுள்ளது.

எனவே, விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வெற்றியீட்டிய அணிகளுக்கு எதிர்வரும் 19,20 ஆம் திகதிகளில் கொழும்பு மகரகம தேசிய சேவைகள் மன்றத்தின் தலைமைக் காரியாலய வளாகத்தில் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தலைவர் அறிவித்துள்ளார்.

(அ-2-261)

# பரிந்துரைகளை அமுல்படுத்த இடைக்கால குழு அவசியம்

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்த இடைக்கால குழு ஒன்றை அமைக்க வேண்டுமென சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பரிந்துரைகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு அறிக்கையை அமுல்படுத்த பாராளுமன்றத்தின் அனுமதியோ அல்லது அரசியல் சாசன ஒப்புதலோ அவசியமற்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பரிந்துரைகளை அமுல்படுத்த இடைக் கால குழு ஒன்றை அமைக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அமைச்சர் எழுத்து மூலம் கோரியுள்ளார்.

(அ-2)

# 2000 மருத்துவ மாதுகளை சேவையில் இணைக்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்க சுகாதார சேவையில் புதிதாக இரண்டாயிரம் பேரை மருத்துவ மாதுகளாகச் சேர்த்துக் கொள்வதற்கு சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

சுகாதார அமைச்சின் இம்முடிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அமைச்சரவையின் இந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் மருத்துவ மாதுகளைச் சேர்த்துக் கொள்வதற்கு விரைவில் விண்ணப்பம் கோரப்படும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, இத்திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படும் 2 ஆயிரம் மருத்துவ மாதுக்களுக்கும் முதலில் மூன்று வருட பயிற்சி அளிக்க ப்படும்.கிராமிய சுகாதார சேவையை மேம்படுத்துவதற்கு மருத்துவமாதுகள் பாரிய பங்களிப்பு செய்து வருவதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். (அ-2)

# டென்மார்க் இளையோரின் பேஸ்புக் கவனயீர்ப்பு போராட்டம்

டென்மார்க் திசைகள் இளையோர் அமைப்பினரால் பேஸ்புக் ஊடாக டென்மார்க் வாழ் அனைத்து மக்களுக்கும் எமது தாயக தேசத்தில் என்ன நடந்தது என்பதனைத் தெரியப்படத்தும் நோக்கத்துடன் இலங்கைத் தீவில் நடத்தப்படும் தமிழர் மீதான இனப்படுகொலையை நாம் கண்டிக்கின்றோம் என்னும் கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டின் முதல் 5 மாதங்களிலும் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பல கொடூரமான குற்றங்களில் சிலவற்றையே சுட்டிக்காட்டி இக் கவனயீர்ப்புப் போராட்டம் தொடரப்படவுள்ளது.

தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள், தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கைதுகள் மற்றும் சித்திரவதைகள், சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், பசி, மனிதாபிமானமற்ற வாழ்க்கைச் சூழ்நிலை மற்றும் பொதுமக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டு வீச்சுக்கள் ஆகிய குற்றங்களே இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றன.

டென்மார்க் வாழ் அனைத்து மக்களுக்கும் கடந்த 2009 ஆம் ஆண்டு தமிழர் மீது தொடுக்கப்பட்ட இனப்படுகொலை பற்றித் தெரியப்படுத்தி நினைவுபடுத்தும் முகமாக திசைகள் இளையோர் அமைப்பு உறுப்பினர்களால் இக் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

(2-7)

# அரசின் வீண் விரயத்தால் மக்களுக்கே பாதிப்பு

## அனுரகுமார எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் வீண் விரயங்களினால் நாட்டு மக்களே பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி.கட்சி அறிவித்துள்ளது.

அளவுக்கு அதிகமான முறையில் அரசாங்கம் வீண் விரயமாக செலவுகளை மேற்கொண்டு வருவதாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பொருட்கள் சேவைகளுக்கான விலைகள் வானளவு உயர்வடைந்த போதிலும் அரசாங்கத்தின் வீண் விரயச் செலவுகள் குறைவடைந்தபாடில்லை என அவர் வருத்தம் வெளியிட்டுள்ளார். அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமன்றி ஏனைய பொருட்களின் விலைகளும் உயர்வடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)






யா/நவாலி சென் பீற்றஸ் றோ. க.த.க. பாடசாலையில் தரம்-1 மாணவர்களுக்கான மாதிரிப் புத்தாண்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது மாணவி ஒருவருக்கு சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கைவிசேடம் வழங்குவதனையும் மாணவி ஒருவர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 127



யுக்கோஸ்லாவியாவில் சோவியத் துருப்புகள்



யுக்கோஸ்லாவியாவில் ஹிட்லரும் அதிகாரிகளும்

அக்டோபர் 12 ஆம் திகதி மொராவா ஆற்றின் எல்லையிலிருந்து 4-வது கார்டு இயந்திரப்படை கோர்பஸ் பிளவின் உள்ளே அனுப்பப்பட்டது. வெற்றிகரமாக முன்னேறிய இக் கோர்பஸ் அக்ரோபர் 14 ஆம் திகதி பெல்கிரேட்டின் எல்லைப் பகுதிகளை அடைந்து அதைப் பிடிப்பதற்கான சண்டைகளில் இறங்கியது.

அக்ரோபர் 20 ஆம் திகதி பெல்கிரேட் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டது. இதற்காக நடந்த சண்டைகளில் சோவியத் துருப்புகளைத் தவிர 1-வது புரோலித் தார்ஸ்கி மற்றும் 12-வது கோர்பஸ்களைச் சேர்ந்த 8 யுகோஸ்லாவிய டிவிஷன்களும் கலந்து கொண்டன.

பெல்கிரேட் நடவடிக்கையில் சோவியத்துருப்புகள் ஆற்றிய பங்கை யுக்கோஸ்லாவிய மக்கள் உயர்வாக மதிப்பிட்டனர். 1944 ஆம் ஆண்டு அக்ரோபர் 21 ஆம் திகதி மார்ஷல் பி.டிட்டோ 3-வது உக்ரேனிய சேனையின் தளபதிக்குப் பின்வருமாறு எழுதினார். "யுக்கோஸ்லாவிய மக்கள் விடுதலை இராணுவப் படைப்பிரிவுகளோடு கூட்டாகச் சேர்ந்த எங்களுடைய தலைநகராகிய பெல்கிரேட்டை விடுவித்த செஞ்சேனையின் போர்வீரர்கள் இராணுவ அதிகாரிகள், ஜெனரல்களுக்கு எங்கள் நன்றியை பெல்கிரேட் திசையில் இயங்கும், உங்கள் பொறுப்பிலுள்ள துருப்புகளுக்கு எங்கள் சார்பாகச் சொல்லுங்கள்."

பெல்கிரேட்டை விடுவிப்பதற்காக நடைபெற்ற கடும் சண்டைகளில் நீங்கள் வெளிப்படுத்திய வீரத்தையும் உறுதியையும் யுக்கோஸ்லாவிய மக்கள் செஞ்சேனைத் துருப்புகளின் மறக்கவியலா வீரமாக என்றென்றும் நினைவில் வைத்திருப்பார்கள். பொது விரோதிக்கு எதிரான கூட்டுப்போராட்டத்தில் சிந்தப்பட்ட உங்களுடைய இரத்தமும் யுக்கோஸ்லாவிய மக்கள் விடுதலை இராணுவ வீரர்களின் இரத்தமும் யுக்கோஸ்லாவிய மக்களுக்கு சோவியத் மக்களுடன் உள்ள சோதர பந்தத்தை ஆண்டாண்டுகளுக்குமாக உறுதிப்படுத்தும்.

பெல்கிரேட்டை விடுவித்தபின் சோவியத் துருப்பு தொடர்ந்து முன்னேறி அக்ரோபர் இறுதியில் கிரால்ஜெவா, குருஷேவிட்ஸ் எல்லையை அடைந்தன. பல்கேரியத் துருப்புகள் அக்ரோபர் 14-ஆம் திகதி நீஷ் நகரை கைப்பற்றி தெற்கு



யுக்கோஸ்லாவியாவின் தலைநகர் பெல்கிரேட் விமானக் குண்டுவீச்சுக்குள்ளானபோது

மொராவா ஆற்றுப்படுக்கையை அடைந்தன.

பெல்கிரேட் நடவடிக்கையின் பயனாய் சேர்பியா ஆர்மித்தொகுதி

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

முறியடிக்கப்பட்டது. ஈ- படைத் தொகுதிக்கு பெருத்த சேதம் ஏற்பட்டது. யுக்கோஸ்லாவியாவின் தலைநகரமாகிய பெல்கிரேட் விடுவிக்கப்பட்டது நாடு முழுவதையும் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப் பாளர்களிடமிருந்து விடுவித்த நிலவரத்தை மேற்கொண்டு ஜனநாயக சக்திகளுக்கு மாற்ற அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

சோவியத் துருப்புகள் யுக்கோஸ்லாவியப்பூமியில் சுமார் 8ஆயிரம் போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் பறிகொடுத்தன.

யுக்கோஸ்லாவியாவை விடுவிப்பதில் சோவியத் மற்றும் பல்கேரிய துருப்புகள் பங்கேற்றதை யுக்கோஸ்லாவிய மக்கள் உயர்வாக மதிப்பிட்டனர். "செஞ்சேனையின் உதவியோடு பெல்கிரேடும் சேர்பியாவும் விரைவாக விடுவிக்கப்பட்டன, பல்கேரிய இராணுவத்தின் உதவியோடு மாசிடோனியா விடுவிக்கப்பட்டது" என்று பி.டிட்டோ குறிப்பிட்டார்.

பெல்கிரேட் நடவடிக்கை இரண்டாவது உலக யுத்த ஆண்டுகளில் 3 மக்கள் இராணுவங்களின் வீரஞ்செறிந்த சோதர ஒத்துழைப்புக்கும் நெருங்கிய பரஸ்பர செயலாக்கத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதன் சிறப்பு அம்சம் என்னவெனில் மலைப்பாங்கான பிரதேசங்களில் இராணுவ நடவடிக்கைகள் தனித்தனி திசைகளில் யுனிட்டுகளால் நடத்தப்பட்டதாகும். சோவியத் விமானப்படை, தரைப்படைத் துருப்புகளுக்கு பெரும் ஆதரவு அளித்தது. இது, 4 ஆயிரத்து 678 விமானப் பறத்தல்களை நடத்தி எதிரிக்கு பேரிழப்புகளை ஏற்படுத்தியது. துனாய் இராணுவ ப்ளீட் தரையிறக்குப் படையினரை இறக்கியும் பீரங்கிகளால் சுட்டும் 200 இற்கும் மேற்பட்ட போக்குவரத்துக் கப்பல்களை துனாய் ஆற்றின் வழியாக இட்டுச் சென்றும் தரைப்படைகளுக்கு உதவியது. 70 ஆயிரத்துக்கும் கூடுதலான சோவியத் போர்வீரர்கள், ஏராளமான டாங்கிகள், பீரங்கிகள், வாகனங்கள் சுமார்8 ஆயிரம் டன் எடையுள்ள பல்வேறு விதமான சரக்குகள் ஆகியவற்றை ஏற்றிச் சென்றது.

◆ ◆ ◆ ◆ ◆



யுக்கோஸ்லாவியாவில் தரையிறங்கிய சோவியத் விமானியை அந்நாட்டு மக்கள்தூக்கிக் கொண்டாடுகின்றனர்

பால்கனில் சோவியத் இராணுவம் அடைந்த அற்புதமான வெற்றிகளின் பயனாய் அல்பேனிய தேசிய விடுதலை இராணுவத்தின் தாக்குதலுக்கு அனுகூலமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. அக்டோபர் இறுதியில் இது திரானாவில் சுமார்3 ஆயிரம் பாசிஸ்டுகளைச் சுற்றி வளைத்து நவம்பர் 17 இல் அல்பேனியாவின் தலைநகரத்தை விடுவித்தது. நவம்பர் இறுதிவாக்கில் நாடுமுழுவதிலுமிருந்த பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

அல்பேனியாவை ஹிட்லரின் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிப்பதில் சோவியத்யூனியன் ஆற்றிய தீர்மானகரமான பங்கை அல்பேனிய மக்கள் உயர்வாக மதிப்பிட்டனர். அல்பேனிய உழைப்புக்கட்சி மத்திய கமிட்டியின் முதல் செயலாளர் ஹோஜா .1950-இல் பின்வருமாறு எழுதினார். " தான் வாழ்ந்து வருவதற்கு அல்பேனிய மக்கள் குடியரசு சோவியத் யூனியனுக்கும் சோவியத் இராணுவத்திற்கும் கடமைப்பட்டுள்ளது. இவை ஹிட்லரிச பாசிசத்தின் மீது அடைந்த மிகப்பெரும் வெற்றியின் பயனாய் பல்வேறு நாடுகளின் ஏகாதிபத்திய வாதிகளாலும் இரத்த வெறி பிடித்த நிலப்பிரபுக்களாலும் சுமத்தப்பட்ட கடுமையான அடிமைத்தனத்திலிருந்தும் ஜேர்மனிய நாஜிஇசம் மற்றும் இத்தாலிய பாசிசத்தின் கொடுங் கோன்மையிலிருந்தும் அல்பேனிய மக்களை விடுவித்தன."

(தொடரும்)

## அதிசய உலகம்...

# தலை முடிகளினால் உருவாக்கப்பட்ட ஆடை



பிரித்தானியாவின் ஆடை வடிவமைப்பாளர் ஒருவர் முற்றிலும் வித்தியாசமான முறையில் ஆடையை வடிவமைத்து பிரபல்யமடைந்துள்ளார்.

பிரித்தானியாவைச் சேர்ந்த தெல்மா என்ற ஆடை வடிவமைப்பாளர் காண்பவரை வியக்கவைக்கும் வகையில் தலைமுடியினை மட்டுமே பயன்படுத்தி முழுமையான ஆடை ஒன்றை வடிவமைத்துள்ளார்.மேலும் 250 மீற்றார் நீளமுள்ள 75 பவுண்ட் எடை கொண்ட இவ்வாறான ஆடையை வடிவமைக்க சுமார் 300 மணித்தியாலங்கள் செலவாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நடுவானில் பறந்தபடி திருமணம் செய்து சீன தம்பதிகள் சாதனை



பொதுவாக மண்டபங்கள்,உணவு விடுதிகள் மற்றும் கோவில்களில் திருமணம் நடைபெறுவது வழக்கம். இதிலும் புதுமை செய்ய விரும்புவர்கள் கடலுக்கு அடியில் தண்ணீருக்குள் திருமணம் செய்துள்ளனர். தற்போது அதையும் தாண்டி புதுவிதமாக ஹெலிகொப்டரில் பறந்த படியே நடுவானில் சீனாவைச் சேர்ந்த தம்பதி திருமணம் செய்துள்ளனர்.இதற்காக தலைநகர் பீஜிங்கில் உள்ள விமான நிறுவனமொன்று விசேட ஹெலிகொப்டரை இந்த தம்பதிக்கு தயார் செய்து கொடுத்தது.

அதில் பறந்தபடியே நடுவானில் இவர்களின் திருமணம் நடந்தது. அந்த ஹெலிகொப்டரில் மருத்துவ வசதி மற்றும் பாதுகாப்பு வசதி போன்ற வையும் செய்யப்பட்டிருந்தது. நடுவானில் திருமணம் செய்ய விரும்புபவர் கள் இனி இந்த நிறுவனத்திற்கு ஹெலிகொப்டர்களை பயன்படுத்தி கொள் ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கைத்தொலைபேசியாக மாறிவரும் கையுறைகள்



தொலைத் துறையானது கடிதம், தொலைபேசி என வளர்ந்து இன்று கைத்தொலைபேசியாக வடிவெடுத்து நிற்கின்றது. இருந்தும் அதன் தொழில்நுட்ப பரிமாணவளர்ச்சி நின்றபாடில்லை.

தற்போது கைகளில் அணியும் கையுறை வடிவத்தில் கைத்தொலைபேசிகளை கண்டுபிடித்துள்ளார்கள். பல புதிய அம்சங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ள இந்தக் கைத்தொலைபேசிகள் பெரும் பயனுள்ளதாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# நீதிமன்றத்தால் அபராதம்

(கரவெட்டி)

அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்ற நபர் ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. வடமராட்சி நவிண்டில் பகுதியில் சம்பவதினம் அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்றதாக குற்றம் சாட்டப்பட்ட குறித்த நபருக்கு எதிராக நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறை பொலிஸாரால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மேற்படி அபராதத்தினை விதித்து தீர்ப்பளித்தார்.

---

வல்வெட்டித்துறை பிரதேசத்தில் வீதிப்போக்குவரத்தை மீறிய ஐவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. வல்வெட்டித்துறை வீதிப்போக்குவரத்து பொலிஸாரால் 4 நபர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியதாகவும் மற்றும் ஒருநபர் மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது கையடக்கத் தொலைபேசியில் உரையாடியதாகவும் குற்றம் சாட்டப்பட்டு நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்ட மை யால் 5 நபர்களுக்கும் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (அ-3-24)

---

(கிளிநொச்சி)

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற நபர் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேற்குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நபர் ஒருவரை கைது செய்த கிளிநொச்சி பொலிஸார் நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் பெ. சிவகுமார் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் மேற்படி அபராதத்தை விதித்ததுடன் செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

---

(கிளிநொச்சி)

அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார் . (அ-3)

# மரண தண்டனை விதிக்கப்பட்ட றிஷானாவின் பரிதாபநிலை

சவுதி அரேபியாவில் இஸ்லாமிய ஷாரியா சட்டத்தின் கீழ் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கை பணிப்பெண் றிஷானா நபீக்கிற்கு மன்னிப்பு பெறுவதற்கான முயற்சியை மேற்கொண்ட இலங்கை நாடாளுமன்றக்குழுவொன்று றிஷானாவினால் கொல்லப்பட்டதாக கூறப்படும் குழந்தையின் பாட்டன், பாட்டியை அண்மையில் சந்தித்ததாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா கூறியுள்ளார்.

குழந்தைக்கு பாலூட்டும் போது அதனை நெரித்துக் கொன்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட றிஷானாவுக்கு 2005 ஆம் ஆண்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கமைய றிஷானா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சவுதி அரேபிய சட்டப்படி நீதிமன்றத்தின் தீர்ப்பு இரண்டு அல்லது மூன்று வருடங்களின் பின்னர் நிறைவேற்றப்படும் . ஆயினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சவுதி மன்னரிடம் விடுத்த வேண்டுகோள் காரணமாக றிஷானாவுக்கான தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனாலேயே றிஷானாவுக்கான மரண தண்டனை இன்னமும் நிறைவேற்றப்படாமல் உள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

அந்நாட்டு சட்டப்படி றிஷானாவுக்கு மன்னிப்பு அளிப்பதாயின் பாதிக்கப்பட்ட பிள்ளையின் பெற்றோர் சம்மதிக்க வேண்டும். நாம் சவுதி அரேபியாவில் பிள்ளையின் பெற்றோர் வாழும் கிராமத்துக்கு சென்றோம். இருப்பினும் நாம் பிள்ளையின் பாட்டன், பாட்டியை மட்டுமே சந்தித்தோம் என அமைச்சர் கூறினார்.

மத்திய கிழக்கில் உள்ள ஷாரியா சட்டம் பற்றி அங்கு வேலைக்கு செல்வோருக்கு விடுக்கப்பட வேண்டிய அறிவுறுத்தல்கள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் டிலான் பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஷாரியா சட்டம், சவுதியின் புனிதமான சட்டமாக உள்ளது. இந்த சட்டத்தை எதிர்ப்பின் அது அவர்களின் சமய உணர்ச்சியை தாக்குவதாக அமையும். அந்நாட்டு மக்கள் மன்னிப்புக்கு எதிரானவர்களாக ஆகிவிடுவர் என அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ-2)

# வாகன மோசடியில் ஈடுபட்ட நபர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பாரியளவில் வாகன மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் முன்னாள் தமிழர் புனர்வாழ்வு கழக உறுப்பினர் என குறிப்பிடப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் பயன்படுத்தப்பட்ட வாகன இலக்கங்களைப் பயன்படுத்தி இந்த வாகன மோசடி இடம்பெற்றது.

மோசடியான முறையில் பாரியளவில் வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது படையினரால் அழிக்கப்பட்ட புலிகளின் வாகன இலக்கங்களைப் பயன்படுத்தி மோசடி இடம் பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (அ-2)

# குருப் பெயர்ச்சி பலன்கள்

## 17.05.2012 - 28.05.2013

## குருபகவான் பன்னிரெண்டில் சஞ்சரிப்பதால் பூமியுடன் வீடுமனை வாங்கும் யோகமுண்டாகும்

**மிருகசீரிடம் 3, 4 பாதங்கள்**
**திருவாதிரை, புனர்பூசம்**
**1, 2, 3 பாதங்கள்**

**சுப விரயங்கள் ஏற்படும்!**

**சாமர்த்தியமாகப் பேசி சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற மிதுன இராசி நேயர்களே!**

எடுத்த முடிவை திடீரென மாற்றிக் கொள்பவர்கள் நீங்கள். உங்கள் சிந்தனை ஜெட் வேகத்தில் இருக்கும். செயலாக்குவதிலும் கெட்டிக் காரர்கள். பொதுத் தொண்டில் உங்கள் நாட்டம் அதிகமாகவே இருக்கும். அதனால்தான் உங்களைத் தேடி ஏதேனும் ஒரு பதவி தானாகவே வந்து சேருகிறது.

ஒரு வேலையைத் தொடங்கி விட்டு, அதை பாதியிலேயே விட்டு விலகுவீர்கள். அதன் பிறகு வேறொரு காரியத்தில் உங்கள் கவனத்தை செலுத்துவீர்கள். இதுதான் உங்கள் இராசிக்குரிய இயற்கை குணம். இந்தக் குணத்தை மட்டும் நீங்கள் மாற்றிக்கொண்டால், உங்கள் முன்னேற்றத்தில் ஏற்பட்ட முட்டுக் கட்டைகள் அகலும்.

சகல விடயங்களையும் நீங்கள் அறிந்திருந்தாலும், அதை மற்றவர்கள் சொல்கின்றபொழுது, தெரியாததைப்போல கேட்டிக்கொள்வீர்கள். பிறகு, எனக்கு முன்பே இதெல்லாம் தெரியும் என்று சொல்வீர்கள்.

பெற்றோரைக் காட்டிலும் மற்றவர்களையே நீங்கள் அதிகம் நேசிப்பீர்கள். உங்கள் வெற்றிக்குப் பின்னால் யார் யாரை எல்லாம் வைத்திருக்கிறீர்கள். என்பதை வெளிப்படையாக சொல்ல மாட்டீர்கள். இரகசியமாக வைத்திருப்பீர்கள்.

**வந்தது குருப்பெயர்ச்சி**

இத்தனை மகத்துவம் வாய்ந்த உங்கள் இராசிக்கு பதினோராமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான்

## மிதுனம்



17-05-2012 முதல் பன்னிரெண்டாம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். இலாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குரு விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்க போகிறதே என்று கவலைப்பட வேண்டாம். உங்கள் இராசிக்கு 7,10 க்கு அதிபதியானவர் குரு. கேந்திராதிபத்ய தோஷம்பெற்ற கிரகம் பன்னிரெண்டில் மறையும் பொழுது, மிகுந்த நன்மைகளை அள்ளி வழங்கும் என்பது நியதி.

களத்திர ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான குருபகவான் கேந்திராதிபத்ய தோஷம்பெற்ற கிரகமாக விளங்குவதால்தான், இந்த இராசிக்காரர்களுக்கு தொழிலிலும் ஏற்ற இறக்கமாக இருக்கிறது.

வாழ்க்கைத்துணை வழியிலும் பொருத்தம் பார்க்காமல் செய்த திருமணம் வருத்தத்தை உண்டாக்கி இருக்கின்றது. பொருத்தம் பார்த்து செய்த திருமணம் கூட கேந்திராதிபத்ய தோஷ அடிப்படையில் உங்கள் கிரகம் என்பதால் சண்டையும், சமானதானமும் மாறி மாறி வரும் குடும்பமாக இந்த இராசிக்காரர்களுக்கு அடைகிறது.

பண விரயம், வெளிநாட்டுப் பயணம், தியாக வாழ்க்கை, கடன் தீருதல், சுகபோகம், மனப் போராட்டம், இடமாற்றம், பணி நீக்கம், மூதாதையர் சொத்துப் பிரச்சினை, பகைவர்கள் பயம், பாத நோய், விலங்கு வளர்ப்புகள் இவற்றையெல்லாம் தெரிந்துகொள்ள உதவும் பன்னிரெண்டாமிடத்தில் இப்பொழுது குரு சஞ்சரிக்கப் போவ தால், அந்த இடங்களுக்கு உள்ள காரகத்துவங்களை எல்லாம் நல்ல விதமாக முடித்து வைப்பர்.

கோச்சாரம் எப்படி இருந்தாலும், உங்களுக்காகக் கணிக்கப்பட்டிருக்கும் சுயஜாதகமும், அதற்கு ஏற்ற விதத்தில் தெசாபுத்திகளை நடத்தவேண்டும். அப்பொழுதுதான், உங்களைத் தேடி வரும் பலன்கள் உன்னதமான பலன்களாக இருக்கும். ஒருவரிடம் கைமாற்று வாங்கச் சென்றால்கூட, அவரிடம் பணமிருக்கும் பொழுது கேட்டால்தான் கிடைக்கும். அதே போல ஒரு காரியத்தை செயற்படுத்த கோச்சாரமும் சுயஜாதகமும் சேர்ந்து ஒத்துழைப்புச்செய்யவேண்டும்.

பன்னிரெண்டாமிடத்தில் வரும் குரு பாதகத்தைச் செய்யாமல், சாகத்தைச் செய்ய வேண்டுமானால் வரும் குருவை வரவேற்க முன்னதாகவே நீங்கள் சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். ஞாயிறும், அவிட்டமும் கூடும் நந்நாளில் நடைபெறும் ஹோமங்களில் கலந்து கொள்வதோடு, இதுபோன்ற நாள், நட்சத்திரங்கள் இணையும் நேரத்தில் குரு பரிகாரம் செய்வதன் மூலமும் கொற்றவர்களும், மற்றவர்களும் பாராட்டும் விதத்தில் வாழ்க்கையை நடத்த முடியும். குரு தெட்சணாமூர்த்தி சந்நிதியில் மஞ்சள் வஸ்திரம் சாற்றி, முல்லைப்பூமாலை அணிவத்து, சுண்டல் நைவேத்தியம் கொடுத்து, குரு கவசமும் பாடி வழிபட்டால் குழப்பங்களிலிருந்து விடுபட இயலும்.

**வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!**

எல்லா கிரகங்களைக் காட்டிலும் குருவிற்கு ஒரு பெருமை உண்டு. மற்ற கிரகங்கள் பார்த்தால், பார்க்கிறது என்றுதான் சொல்வோம். ஆனால், குரு பார்த்தால் மட்டும் கோடி தோஷ நிவர்த்தி என்று சொல்வோம். அப்படிப்பட்ட குரு உங்கள் ஜாதகத்தைப் பொறுத்தவரை எப்படிப்பட்டவராக இருந்தாலும், பார்க்குமிடம் புனிதமடைகிறது என்பதால்தான் உங்களுக்கு ஒரு சில வழிகளில் நன்மைகள் கிடைக்கிறது.

**இடமது பன்னிரெண்டில்**
**இயல்பாகக் குருவும் வந்தால்,**
**கடமையில் கவனம் தேவை!**
**காசுகள் விரயமாகும்!**
**உடமையாய் சொத்து சேரும்!**
**உடல்நலம் அச்சுறுத்தும்**
**தடம் புரளாமல் வாழத்**
**தைரியம் கை கொடுக்கும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, விரயங்களை சுப விரயமாக ஆக்கலாம். வீடுமாற்றம், இடமாற்றம், வேற்றுமொழி பேசுபவர்களின் தொடர்பு அனைத்தையும் உருவாக்கும். உடல்நலத்தில் மட்டும் அச்சுறுத்தல் வந்தால் உடனுக்குடன் கவனித்துக் கொள்வது நல்லது. மூதாதையரின் சொத்துக்கள் கைக்கு வந்து சேரும்.

கால் வலிகள் வந்து அகலும். அந்நிய தேசத்துக்காக செய்த முயற்சிகள் இதுவரை அமைதியாக இருக்கிறதே என்று நீங்கள் நினைத்திருக்கலாம். இனி பயணத்திற்கான அறிகுறிகள் தோன்றும்.


**புனிதமடையும் இடங்கள்!**

குருவின் பார்வை பலத்தால் 4, 6, 8ஆகிய இடங்கள் புனிதமடைந்து அந்தந்த இடங்களுக்குரிய செயற்பாடுகளை தீவிரப்படுவதோடு, தித்திப்பான பலனையும் உங்களுக்கு வழங்கப் போகிறது.

பொதுவாக, பொன்னவன் பன்னிரண்டில் சஞ்சரித்தால் பூமியுடன் வீட்டுமனையும் வாங்கும் யோகம் மின்னலென வந்திடுமாம் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. நான்காமிடத்தில் பதியும் குருவின் பார்வை பலத்தால் மனை கட்டும் யோகம் இந்த குருப்பொயர்ச்சியால் உங்களுக்கு செயற்படப்போகிறது. அவ்வாறு வீடு கட்டும் பொழுது உங்கள் குடும்பத்தில் யாருடைய ஜாதகத்தில் செவ்வாய் பலம்பெற்றிருக்கிறதோ அதற்கேற்ற குபேர திசை பார்த்து வாயில்கள் அமைத்துக் கொண்டால் வசதிகள் பெருகும். வருமானம் அதிகரிக்கும்.

பன்னிரெண்டாமிடத்தில் விரய ஸ்தானம் என்பதால், எந்தெந்த வழிகளில் எல்லாம் விரயம் செய்ய விருப்பப்படுகிறீர்களோ, அந்தந்த வழிகளில் எல்லாம் நீங்கள் விரயம் செய்யத்தயாராக இருக்கவேண்டும். உத்தியோகத்தில் உடனிருப்பர்களால் தொல்லைகள் அகலும். மேலதிகாரிகள் அனுகூலமாக நடந்துகொள்வதோடு உங்கள் குரலுக்கும் செவி சாய்ப்பார்கள். தொழில் மாற்றம், ஊர் மாற்றம் செய்ய நினைத்தவர்களுக்கு அது கைகூடலாம்.

உத்தியோகத்தில் விருப்பஓய்வு பெற நினைப்பவர்களின் விருப்பம் நிறைவேறலாம். ஒரு கடனை அடைக்க



மற்றொரு கடனை வாங்கி சங்கிலிப் பின்னல்போல தொடர்ந்த கடன் சுமையைக் குறைக்க ஒரு முக்கிய முடிவெடுப்பீர்கள். நண்பர்கள் சேர்க்கையில் நல்லவர் யார்? கெட்டவர் யார்? என்று அறிந்துகொண்டு செயற்படுவீர்கள்.

இப்படிப்பட்ட குரு, இந்தமுறை பெயர்ச்சியாகும்போது பகைக் கிரகமான சுக்கிரன் வீட்டில் சஞ்சரிப்பதாலும் கேதுவுடன் கூடியிருப்பதாலும் சர்ப்ப சாந்தியை செய்து கொள்வது நல்லது. எந்த வழிபாடும் யோக பலம்பெற்ற நாளில் செய்வது யோகம் தரும். குறிப்பாக வியாழன், சுக்கிரன், இராகு, கேது ஆகியவற்றின் திசை மற்றும் புத்தி நடப்பவர்கள் பரிகாரங்களை செய்துகொள்வது பலன்களை நற்பலன்களாக மாற்றிக்கொடுக்கும்.

**வாட்டத்தைப் போக்குமா வக்ர குரு**

இடப இராசிக்குள் சஞ்சரிக்கும் குரு 12-10-2012 முதல் 06-02-2013 வரை வக்ர கதியில் இயங்கிறார். உங்கள் இராசியை பொறுத்துவரை 7-10 க்கு அதிபதியாக இருப்பதால் நன்மையையே கொடுக்கும். கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற குரு, தனது வக்ர கால்த்தில் அதிர்ஷ்ட வாய்ப்புகள் பலவற்றையும் வரவழைத்துக் கொடுப்பார். மேலும் விலகிச்சென்ற வரன்கள் மீண்டும் வரும். வெளியேறிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும்.

தொகை வருவதிலிருந்த தடை அகலும். அரசு வழியில் எதிர்பார்த்த கடன் உதவிகள் கிடைத்து, புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். எதிர்காலத்திற்காக தீட்டிய திட்டம் இப்பொழுது வெற்றிபெற்றது என்று நண்பர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். பொதுவாக, தொழில் முயற்சிகளில் இதுவரை இருந்த குறுக்கீடுகள் அகலும்.

இந்த குருப்பெயர்ச்சியால் உடல் நிலை சரியாகி உற்சாகத்தோடு பணிபுரிய போகிறீர்கள். கடன் சுமைகள் படிப்படியாக குறையும். கௌரவம், புகழ்கூடும். குருவின் பார்வை பலத்தால் சென்ற குருப்பெயர்ச்சியில் பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடரப் போகிறீர்கள். கணவன்-மனைவிக்குள் கனவு கூடும். இனி வரும் காலம் இனிய காலமாக மாற உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உயர் புதவிகள் கிடைக்கும். குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள் அதோடு, நாக சாந்தியும் செய்வது நல்லது.

**சிவல்புரி சிங்காரம்**

**வளர்ச்சி தரும் வழிபாடு**


விர்யஸ்தான குருவால் விரயங்கள் ஏற்பட புதன்கிழமை தோறும் விரதமிருந்து முருகன், விஷ்ணு, இலக்குமி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். தெட்சணாமூர்த்தியையும் வழிபட்டு வாருங்கள்.

(தொடரும்)

# ஐ.நா. தீர்மானத்தை அரசு ஏற்க மறுத்தால் மக்களை அணிதிரட்டி அகிம்சை போராட்டம்

## பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா எச்சரிக்கை

**ஐ.நா.வின் தீர்மானத்தையும் தமிழ் கூட்டமைப்பின் ஜனநாயக ரீதியிலான கோரிக்கைகளையும் அரசாங்கம் ஏற்க மறுத்தால் எமது மக்களை அணிதிரட்டி சாத்வீக போராட்டத்தை ஆரம்பிக்கும் கட்டம் உருவாகும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

30 வருட ஆயுதப்போராட்டம் முடிவுக்கு வந்து மூன்று வருடங்கள் ஆகியுள்ள நிலையிலும் இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாத நிலையில் உள்ளனர்.

ஐ.நா. சபையின் அறிக்கையின் பிரகாரம் இன்னும் 6 ஆயிரம் பேரே மீள்குடியேற்றப்படவிருப்பதாக கூறப்படுகின்றது. இது உண்மைக்கு புறம்பானதாகும். முற்றிலும் தவறானதுமான தகவலாகும். எமது தகவலின்படி இடம்பெயர்ந்த நிலையில் மீள்குடியேற்றப்படுவதற்காக இன்னும் மூன்று இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் இருக்கின்றனர் என்பதே உண்மையாகும்.

எமது மக்களுக்கு சொந்தமான காணிகள், விவசாய நிலங்கள் அனைத்தும் சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்புக்கும் இராணுவ ஆக்கிரமிப்புக்கும் உள்ளாகி வருகின்றன.

எமது கடற்பரப்புகளுக்கு செல்ல எமது மக்கள் மறுக்கப்படுகின்றனர். அதேவேளை தெற்கிலிருந்த சிங்களவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு அங்கு குடியேற்றப்பட்டு மீன்பிடித்தொழிலில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டிருக்கின்றது.

இது இவ்வாறிருக்க வடக்கில் ஒவ்வொரு வீட்டின் முன்னும் இராணுவம் நிற்கின்றது. அங்கு புத்தர் சிலைகளை நிறுவுவதற்கு பாதுகாப்பாகவும் நிற்கின்றனர்.

முல்லைத்தீவில் 2 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பு இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இங்கு இராணுவக் கட்டமைப்புகளும் இராணுவக் குடியேற்றங்களும் இடம்பெற்றுள்ளன.

தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதேசங்களில் பௌத்தத்தை திணிப்பதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

சிறுபான்மை பகுதிகளில் சிங்கள மக்களை குடியேற்றி பௌத்த மதத்தை திணித்து ஆக்கிரமிப்பை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் திட்டம் என்பது புலப்படுகின்றது. இவ்வாறு இடம்பெறும் செயற்பாடுகள் மூலம் தேசிய நல்லிணக்கம் ஏற்படப்போகின்றதா?

எமது மக்களின் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கும் ஐக்கிய இலங்கைக்குள் ஓர் அரசியல் தீர்வினை எட்டுவதற்கும் என அரசாங்கத்துடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். அரசாங்கம் எமது நல்லெண்ணத்தை பயன்படுத்திக கொள்ள வேண்டும்.

ஆயுதப்போராட்டத்தில் தோற்கடிக்கப்பட்ட எமது மக்கள் இன்று ஜனநாயக ரீதியில் எழுந்து நிற்கின்றனர். எனவே நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் தீர்மானத்தையும் தமிழ் மக்களுடனான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஜனநாயக கோரிக்கைகளை ஏற்று அரசாங்கம் நியாயமானதோர் அரசியல் தீர்வுக்கும் இதற்கு முன்பதாக எமது மக்களின் அவசரத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

இதிலிருந்து அரசாங்கம் தவறும் பட்சத்தில் தந்தை செல்வா காட்டிய வழியில் நமது மக்களை அணி திரட்டி சாத்வீகப் போராட்டத்துக்கு தயாராக வேண்டிய நிலை உருவாகும் என்றார். (அ-2)

# தேசிய சேமிப்பு வங்கி தலைவர் பதவி விலக வேண்டும்-ஐ.தே.க

(கொழும்பு)

இலங்கையின் அரச வங்கியான தேசிய சேமிப்பு வங்கி, ரி.எப்.சி நிதி நிறுவனத்தின் பங்குகளை கொள்வனவு செய்தமை தொடர்பில் நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன. இந்த நிதி நிறுவனத்தின் 65 வீதப் பங்குகளை அதிகவிலையில் தேசிய சேமிப்பு வங்கி கொள்வனவு செய்துள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் இந்தப்பங்குக்கொள்வனவு தொடர்பான தீர்மானம் கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி திறைசேரியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தரவுக்கு அறிவிக்கப்பட்டதாகவும் அவர் பொது மக்களின் நம்பிக்கையைத் தகர்க்கும் வகையில் எவ்வித செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தியதாகவும் வங்கியின் பணிப்பாளர் சபை குறிப்பிட்டுள்ளது.

எனினும் ஏன் இந்தப் பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டன என்பதற்கு வங்கி உரிய காரணங்களை வெளியிடவில்லை. இந்நிலையில் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் பிரதீப் காரியவசம் பதவிவிலக வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

தேசிய சேமிப்பு வங்கி நாட்டின் 20 மில்லியன் மக்களுக்கான வங்கியாகும். அத்துடன் 16.7 மில்லியன் கணக்குகளை அது கொண்டுள்ளது.

இந்நிலையில் இந்த விடயத்தில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத்தவறினால் மீண்டும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பைத் தடுக்கமுடியாது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார். (2-7)



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நவலோகா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைகளை பெறுவதற்கு ஐந்து நீதிபதிகளை கொண்ட உயர் நீதிமன்ற குழு மனு மீதான விசாரணைகளை நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் இடம்பெற்ற போது திருமதி அனோமா பொன்சேகா, ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்களான சஜித் பிரேமதாச, கரு ஜயசூரிய , பாலித ரங்கே பண்டார உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு வெளியேறுவதை படத்தில் காணலாம்.

# கணித அறிவு வினாடிவினா போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளின் தரம் -6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களிடையே தமிழ் மொழி மூலம் நடத்தப்பட்ட கணித அறிவு வினாடி வினாப் போட்டி முடிவுகள் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் 3 இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**தரம் -6**

ச. சர்மிகா (இறம்பைக்குளம் மகளிர் ம.வி), ச. பிரதீகா ( சைவப்பிரகாச மகளிர் கல்லூரி). வெ. டிலான் (வவுனியா தமிழ் மத்திய ம.வி)

**தரம்-7**

பே. மயூரி (இறம்பைக்குளம் மகளிர் ம.வி), செ. றிசோபிகா (இறம்பைக்குளம் மகளிர். ம.வி), சி.சுகீர்மன் (வவுனியா தமிழ் மத்திய ம.வி)

**தரம்-8**

வ. மயூரங்கி ( சைவப்பிரகாச மகளிர் கல்லூரி). ர. தவதின்ஜா (இறம்பைக்குளம் மகளிர். ம.வி), ந.குமரன் (வவுனியா தமிழ் மத்திய ம.வி)

**தரம்-9**

ப.சுபாங்கி (இறம்பைக்குளம் மகளிர் ம.வி), பு.தேசினி (இறம்பைக்குளம் மகளிர் ம.வி), ம. அஜன்ராஜ் ( முதலியார் குளம் றோ.க. த.க பாடசாலை)

**தரம்-10**

ச.தேனுசன் ( நெளுக்குளம் கலைமகள் ம.வி), ஜெ. ஜெகனிரூபன்(வவுனியா தமிழ் மத்திய ம.வி), ப. அமிர்தீசசர்மா (வவுனியா தமிழ் மத்திய ம.வி)

**தரம்-11**

ஜெ. ஜெனுதா (இறம்பைக்குளம் மகளிர் ம.வி), பி.ஹேமகுமார் (வவுனியா தமிழ் ம.மகா வித்தி), பா. சுகன்யா(சைவப் பிரகாச மகளிர் கல்லூரி). (2-266)

# தனியார் எரிபொருள் நிறுவன பௌசர்களில் மோசடி

இலங்கையின் தனியார் எரிபொருள் நிறுவனமொன்றிற்கு சொந்தமான பௌசர்களில் எரிபொருள் மோசடியில் ஈடுபடுவது தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஹபரண பிரதேசத்தில் இவ்வாறு எரிபொருள் மோசடியில் ஈடுபட்ட 8பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித்ரோஹன குறிப்பிடுகின்றார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இரண்டு எரிபொருள் பௌசர்கள் மற்றும் எரிபொருள் பீப்பாய்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித்ரோஹன தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (2-7)

# கஞ்சா பயன்படுத்திய இளைஞர்களுக்கு அபராதம்

(கொழும்பு)

காலி முகத்திடல் பகுதியில் கஞ்சா போதைப்பொருள் பயன்படுத்திக்கொண்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் எட்டுப்பேருக்கும் தலா 5ஆயிரம் ரூபா வீதம் 40ஆயிரம் ரூபா அபராதம் விதித்து கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.


வெசாக் பௌர்ணமி தினத்தன்று மேற்படி இளைஞர்கள் 8 பேரும் கொழும்பு கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போதே அவர்களுக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (2-7)


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# ஓசோன் படலமும் அதனை பாதுகாத்தலின் முக்கியத்துவமும்

### ஓசோன் படலத்தின் அழிவு

மனிதனால் உற்பத்தி செய்யப்படும் சிற்சில ஹேலோன் (Halon) வகைகளினால் ஓசோன் படலம் சிதைவுற்று வருகின்றது. தற்பொழுது கிடைக்கப் பெற்றுள்ள விஞ்ஞான ரீதியிலான தகவல்களின் அடிப்படையில் ஓசோன் படலம் மண்டல சிதைவுகளுக்கு அதிகளவு பொறுப்புக்கூற வேண்டிய இரசாயனப் பொருட்களாவன குளோரோ புளோரோகாபன் (CFC),ஹேலோன் (Halon), மீதையில் புரோமைட்டு ($CH_3Br$), காபன்டெற்றா குளோரைட்டு (CTC), மீதையில் குளோறோபோம் (MC) போன்றனவாகும். இவற்றின் அழிவுகளின் மூலம் குளோரின் புரோமின் பிரிவொன்று உருவாகும். கீழ் வளிமண்டலத்தில் இப்பொருட்கள் எமது சுற்றாடலிற்கு எவ்விதத் தாக்கங்களையும் ஏற்படுத்தாது.




எனவே கைத்தொழில்களுக்காக இவற்றின் பாவிப்பு அதிகளவாகக் காணப்படும் என்றும் இவை சுற்றாடலில் கல்ந்ததன் பிண்பு கீழ் வளிமண்டலத்தில் உள்ள ஏனைய வாயுக்களும் தாக்கங்களை ஏற்படுத்தாது.

படிப்படியாக மேல் வளி மண்டலம் வரை இந்த வாயு அதிகளவான சக்தியினை சூரிய ஒளிக்கதிர்கள் UV உடன் ஒன்றிணைந்து குளோரின் அல்லது புரோமின் வாயு உற்பத்தியாகும். இங்ஙனமாக அந்த சக்தி வாய்ந்த ஹேலயிட் ஓசோனுடன் செயற்பட்டு குளோரின் அல்லது புரோமின்மொனொசைட்டினை (Monoxide ) உற்பத்தி செய்யும்.

இங்ஙனமாக உற்பத்தியாகும் அணுக்கள் மீண்டும் சிதறி ஹேலயிட் அணுவினை அழிக்கும். இவ்வகையான செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெறுவதனால் ஓசோன் அணுக்களில் தாக்கங்கள் தொடர்ச்சியாக நடைபெறும்.

இதன்மூலம் தொடர்ச்சியாக ஓசோன் அணுக்கள் அழிக்கப்படும் என விஞ்ஞானிகள் ஆய்வுகளின் பிரகாரம் தெரிவித்துள்ளனர். குளோரின் அணுவிற்கு ஒரு மில்லியன் ஓசோன் அணுக்களை அழிக்க முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இங்ஙனமாக ஓசோன் படலத்தின் தடிப்பு குறையும். இவ்வாறு ஓசோன் படலத்தின் தடிப்புக்குறைவதை ஓசோன் துவாரம் என அழைப்பார்கள். ஓசோன் படலத்தின் தடிப்பு அதிகளவு காணப்படுவது மேற்பகுதியிலேயேயாகும். எனவே ஓசோன் பாதிப்பு அதிகளவு ஏற்படுவதும் அப்பிரதேசத்திலேயேயாகும்.

மேற்குறிப்பிட்ட ஓசோன் படலத்திற்கு தாக்கத்தினை ஏற்படுத்தும் பொருட்களை மக்கள் கடந்த 80 வருட குறுகிய காலத்தில் பாவனையில் கொண்டுள்ளனர். இருப்பினும் இதுவரை ஓசோன் படலத்தின் தாக்கம் உச்சக் கட்டத்திற்கு வந்துள்ளது. இதன் பிரதிபலனாக அண்டாட்டிக்காவிற்கு மேல் உள்ள ஓசோன் துவாரம் 230 இலட்சம் சதுரமைல்களுக்குக் கிட்டியதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றார்கள்.

### ஓசோன் படலத்திற்குப் பாதிப்பினை ஏற்படுத்தும் பொருட்கள் சுற்றாடலுடன் இணையும் விதம்

❖ CFC குளிரூட்டியினை வாயுவாக பாவித்தல் (தற்போது இதன் பாவனை குறைந்து வருகிறது. தற்போது CFC விலக்கப்பட்ட குளிரூட்டிப் பாவனையில் உள்ளது.

❖ வாசனைத் திரவியங்கள், வர்ணப்பூச்சுக்கள் கிருமிநாசினிகளின் பிரயோகங்களில் CFC பாவிக்கப்படுகின்றமை.

❖ விவசாயத்தின்போது கிருமி நாசினியாக மீதையில் புரோமைட்டு (Methylbromide) மண்ணிற்கு பாவிக்கப்படுகின்றது. தேயிலை உற்பத்தியின்போது மண்ணில் உள்ள ஈரலிப்புத் தன்மையினைப் போக்க இது பாவிக்கப்படுகிறது.

❖ காபன் டெட்ரா குளோரைட்டு (CTC) மீதையில் குளோரோபோம் (Methyl chloroform) என்பன பொருள் சுத்தப்படுத்தும் பொருளாக (Cleaning Agent) பாவிக்கப்படுகின்றது. இலங்கையில் இவை அதிகளவில் ஆடை உற்பத்தித் தொழிலில் நேரடியாக பாவிக்கப்பட்டு வருகின்றது.

❖ தீயணைப்பு உபகரணங்களுக்காக பயன்படுத்தப்படும் பொருளாக ஹேலோன் (Halon)உபயோகப்படுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலாக எரிபொருள் எரிவின் போது நைட்ரஸ் ஒக்சைட்டு (NO) மேல் வளி மண்டிலத்தினை குறிப்பாக ஓசோனை அழிக்கின்றது.

### ஓசோன் அழிவடைவதால் ஏற்படும் தாக்கங்கள்

ஓசோன் அழிவுகளின் காரணமாக அதிசக்தி வாய்ந்த குறுகிய வான் அலைகளுடான UV ஒளிக்கீற்றுக்கள் பூமிக்குவரும் முழுமையான ஓசோன் படலத்தின் 10% குறைவாகவே உள்ளதன் காரணமாக பூமிக்கு கிடைக்கும் ஒளிக்கதிர்களின் அளவு 20 % அதிகமாவதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இங்ஙகனமாக அதிகமாக பெறப்படும் சூரிய ஒளியின் மூலம் கீழ்க்குறிப்பிடப்படும் சமூக சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படும்.

❖ தோலில் புற்றுநோய் ஏற்படுதல்.

❖ கண்களில் வெள்ளை உண்டாகுதல் அதன் மூலம் கண்பார்வை அற்றுப் போதல்

❖ தாவரங்களின் வளர்ச்சி குன்றுதல், அவற்றின் பலாபலன்கள் குறைதல்

❖ பிளாஸ்டிக் , இறப்பர் போன்றவை கூடிய விரைவில் அழிக்கப்படுதல்.

(தொடரும்)

**து.பிரதீபன்**
இரசாயனவியல் ஆசிரியர்,
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.
(பதிப்பாசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 63

**பிரதியெடுக்கும் இயந்திரத்தில் பிரதியெடுக்கும் தகட்டில் காணப்படும் மூலகம் எது?**

விடைகளை 23.05.2012 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**சி. கேதீஸ்வரன்**
(ஆசிரியர்-யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A)
நூலகம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

புதிர் 62 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி — வெல்லப்படவில்லை

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 63

சரியான விடை:-..........................................................

முழுப்பெயர்:-..........................................................

முகவரி:-..........................................................

தொ.பே. இல:..........................................................

கையொப்பம்:..........................................................



# சிறுவர் அரங்கம்


97

## பிரிந்தவர் இணைந்தனர்



நடு இரவில் தெருவில் நாய் குலைக்கும் சத்தம் கேட்டு ஜானகிராமன் தூக்கத்தில் இருந்து விழித்து கொண்டார். நாய் தொடர்ந்து குலைக்கவே அதன் காரணம் அறிய அவர் கதவைத் திறந்து வெளியே வந்தார். வந்தவர் தன் வீட்டுத் திண்ணையில் சரிந்து கிடந்த ஒரு மனிதனைப் பார்த்து திடுக்கிட்டார்.

யாரப்பா நீ? என்று குரல் கொடுக்க, அந்த ஆள் பதில் சொல்லாமல் கண்களை மூடியபடியே இருந்தான். தூங்குகிறானோ என்று எண்ணி அவனை அவர் எழுப்பிய போது, அவன் உடல்



நெருப்பாய் கொதித்ததைப் பார்த்து திடுக்கிட்டார்.

அடடே! இவனுக்கு பயங்கர காய்ச்சல் அடிக்கிறதே! என்று கூறிக்கொண்டே அவனை எழுப்பிச் சென்று உள்ளே படுக்க வைத்தார்.

மறுநாள் காலை கதவு தட்டும் ஒலி கேட்டு ஜானகிராமன் கதவை திறந்த போது அவருடைய மனைவி ரத்னா நின்று கொண்டிருப்பதை பார்த்தாள். முந்தைய தினம் உறவினர் வீட்டுத் திருமணத்திற்காகப் பக்கத்து கிராமம் சென்றிருந்தவள் அப்போதுதான் வீடு திரும்பியிருந்தாள்.



உள்ளே நுழைந்த ரத்னா யாரோ ஒரு ஆள் அறையினுள் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து, யார் இவர்! என்று கேட்க ஜானகிராமன் நடந்ததை விவரித்தார். அடப்பாவமே! இரவு முழுவதும் காலி வயிற்றுடன் காய்ச்சலோடு படுத்து இருக்கிறாரே! அவருக்கு கஞ்சி போட்டுத் தருகிறேன் என்று சொல்லி விட்டு உள்ளே சென்றாள்.

கஞ்சி தயாரானதும் ஜானகிராமன் அவரை எழுப்ப முயல அந்த ஆள் உடல் சில்லிட்டு இருந்ததைக்கண்டு தூக்கிவாரிப்போட்டது. ஐயோ! ரத்னா! இந்த ஆள் இறந்து விட்டான்! என்று கூற அங்கு ஓடி வந்த ரத்னா; அடக்கஷ்டகாலமே இப்படி நம் வீட்டில் வந்து இறந்து போனாரே! என்று புலம்பினாள்.

உடனே அவருடைய உடைமைகளை ஜானகிராமன் சோதனையிட ஒரு பெரிய பையில் கட்டுக்கட்டாக நோட்டுக்கள் தெரிந்தன. அவற்றுடன் ஒரு கடிதமும் இருந்தது. உடனே அவர் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படித்தார். அதில் கீழ்க்காணும் வாசகங்கள் இருந்தன.

மகனே, நாராயணா! உனக்குக் கடுமையான காய்ச்சல் அடிப்பதாக நான் நமது கிராமத்து ஆள் ஒருவர் மூலம் தெரிந்து கொண்டேன். இப்போது எப்படி இருக்கிறாய்? இங்கு உன் தம்பி பெரிய சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறான். அவனுடைய மகளுக்குத் திருமணம் நிச்சயம் செய்துள்ளது உனக்குத் தெரிந்ததே! அதன் பொருட்டு முப்பதாயிரம் ரூபா அவசரமாகத் தேவைப்படுகிறது.

இந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் அண்ணனான நீதான் உதவி செய்ய வேண்டும். தம்பியுடன் உனக்கு ஏற்பட்ட விரோதத்தை மறந்து அவனுக்கு இப்போது கை கொடுத்து உதவு! இந்தக் கடிதம் கிடைத்தவுடன் நீ உடனே முப்பதாயிரம் ரூபா பணத்துடன் வா! நாங்கள் இப்போது வேறு வீட்டில் இருக்கிறோம். அதன் முகவரி கீழே உள்ளது.

கடிதத்தைப் படித்து முடித்தவுடன் ஜானகிராமனுக்கு விடயம் புரிந்தது. தன் மனைவியை நோக்கி, ஐயோ பாவம்! இவர் தன் தம்பி பெண்ணின் திருமணத்திற்காகப் பணம் எடுத்து வந்திருக்கிறார். தம்பியின் வீட்டை அடையுமுன் வழியிலேயே இறந்து விட்டார்! என்றவர் தொடர்ந்து ரத்னா! நடந்தது நடந்து விட்டது. நான் இந்தப் பணத்தை இவர் தம்பியிடம் கொடுத்து விட்டு இவர் நம் வீட்டில் காலஞ் சென்றதையும் சொல்லிவிட்டு வருகிறேன்! என்று சொல்லி விட்டுக் புறப்பட்டார்.

வீட்டை அடைந்தவர் உள்ளே நுழைய முயன்றபோது வீட்டில் உள்ளவர்களின் உரையாடல் காதில் விழுந்தது. அம்மா! பிள்ளையின் பெற்றோரிடம் நம் இயலாமையைக் கூறி விட்டு திருமணத்தை நிறுத்தி விடுகிறேன் என்று ஒரு குரல் கேட்டது. அதுதான் இறந்து போன நாராயணனின் தம்பி என்று ஜானகிராமன் புரிந்து கொண்டார்.

என்ன சொல்கிறாய் நீ? அதற்காக இவ்வளவு நல்ல வரனை வேண்டாம் என்று சொல்லிவிட முடியுமா? நான் உன் அண்ணனுக்கு கடிதம் எழுதி இருக்கிறேன். அவன் கட்டாயம் பணத்துடன் வருவான் என்று தாய் கூறினாள்.

என்னம்மா இது? என்னிடம் கேட்காமல் அண்ணனுக்கு ஏன் கடிதம் எழுதினாய்? என்றார் தம்பி. மகனே! சிறிய விடயத்திற்காக உங்களிருவருக்கும் இடையில் எப்போதோ ஏற்பட்ட விரோதத்தை இன்னுமா நினைவில் வைத்து இருப்பது? உன் மகள் ராதாவின் திருமணத்துடன் உங்கள் விரோதம் மறைந்து விட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்! என்றாள் தாய்!

அதற்கு மேலும் தாமதிக்காமல், ஜானகிராமன் கதவைத் தட்ட ஒரு நடுத்தர வயது மனிதர் கதவைத் திறந்து அவரை வரவேற்றார்.

நீங்கள் தான் நாராயணனின் தம்பியா? என்று கேட்க, அவர் ஆச்சரியத்

## அம்புலி மாமா கதைகள்

துடன் தலையை ஆட்டினார். அவரிடம் தான் கொண்டு வந்த கடிதத்தை காட்டிய ஜானகிராமன், இது உங்கள் அம்மா உங்கள் அண்ணனுக்கு எழுதியது என்று நினைக்கிறேன் என்று சொல்ல தம்பி அதைப் படித்தார்.


இதோ, உங்கள் அண்ணன் உங்களுக்கு அனுப்பிய பணம்! என்று இறந்தவரின் பையிலுள்ள பணத்தை அப்படியே ஜானகிராமன் நீட்ட, தம்பி, தயவுசெய்து இதை என்னிடம் தர வேண்டாம்! அண்ணனுடைய உதவி எனக்குத் தேவையில்லை! என்றார்.

உயிரோடு இருந்த போது தான் விரோதம் பாராட்டினீர்கள்! ஆனால் அவருடைய சாவிற்குப் பிறகாவது விரோதத்தை விட்டு விடுங்கள் என்று கூறி நடந்த விடயத்தை ஜானகிராமன் விளக்கியதும், தாய் கதறியழுதாள். தம்பியும், அண்ணா என்னை மன்னித்து விடு! என்று அழுதான். இப்போது அழுது என்ன பயன்? அவர் உடனிருந்தவரை அவரை நீங்கள் பார்க்கக் கூட விரும்பவில்லை.

ஆனால் அவர் உங்களுக்கு உதவி செய்ய வரும் போது இந்த அசம்பாவிதம் நடந்து விட்டது என்று அவர் கூறி முடிக்கும் முன்னே அங்கே ஒருவர் நுழைந்தார். அவரைப் பார்த்ததும் தாயும், மகனும் பேய் அடித்தவர்கள் போல் உறைந்து நின்றனர்.

சிறிது நேரத்தில் அதிர்ச்சியிலிருந்து மீண்ட தாய், மகனே! என்று அவரைக் கட்டித் தழுவ, தம்பி, அண்ணா! என்று அவர் காலில் விழ, ஜானகிராமனுக்குத் தலை சுற்றியது.

அப்புறம்தான் அவருக்குப் புரிந்தது! அப்போது உள்ளே நுழைந்தவர் தான் நாராயணன் என்று! தன் வீட்டில் வந்து இறந்து போனது மற்றொருவன்! நடந்ததைக் கேட்டு நாராயணன் சிரித்து விட்டு, நான் நேற்று முன்தினமே பணத்துடன் வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டேன். வரும் வழியில் ராதாவிற்காக ஒரு புடைவை வாங்கலாம் என்று ஒரு ஜவுளிக் கடைக்குள் நுழைந்தேன். அங்கே என் அருகில் சந்தேகப்படுமளவில் ஒரு ஆள் நின்று கொண்டிருந்தான். பணப்பையைக் கீழே வைத்து விட்டு புடைவைகளை நான் பார்த்துக் கொண்டிருக்கையில் திடீரென அதைக் காணவில்லை. அந்த ஆள் அதைத் திருடிக்கொண்டு சென்று விட்டான் என்று தெரிந்தது. பின்னர் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்த பின் நான் மீண்டும் பணத்திற்கு ஏற்பாடு செய்து நேற்று புறப்பட்டேன். உங்களுடைய வீட்டில் வந்து தங்கி உயிரை விட்டவன்




அந்தத் திருடனாகத் தான் இருப்பான் என்றார்.

போனால் போகட்டும்! அந்தத் திருடன் இறந்து நமக்கு நன்மை தான் செய்திருக்கிறான். இழந்த பணமும் திரும்பக் கிடைத்தது. பிரிந்த சகோதரர்கள் நீங்கள் இருவரும் ஒன்று கூடினர்! என்றாள் தாய் மகிழ்ச்சியுடன்!

நான் வரட்டுமா? என்று ஜானகிராமன் விடைபெற முயல, எத்தனை பொறுப்புடன் பணத்தைக் கொண்டு வந்து வீடு தேடிக் கொடுத்து இருக்கிறீர்கள்! இன்று தங்கி விட்டுச் செல்லுங்கள்! திருமணத்திற்குக் கட்டாயம் குடும்பத்துடன் வந்து சேருங்கள்! என்றனர் இருசகோதரர்களும்.

# விபரங்களை அறிந்து கொள்ள ஒரு வழிமுறை




கணனி என்பது இப்பொழுது அனைவருக்கும் இன்றியமையாத ஒரு சாதனமாக ஆகிவிட்டது. சிறு பிள்ளைகள் என்றால் விளையாடவும், கல்லூரி மாணவர்கள் படிப்பு சம்பந்தமாகவும் மற்றும் பிடித்தவர்களுடன் பேஸ்புக்கிலும், டுவிட்டரிலும் அரட்டை அடிக்கவும், பெரியவர்களுக்கு அலுவலக வேலைகளை சுலபமாக்குவதற்கு என்று எல்லோருக்கும் தற்பொழுது கணனி ஒரு முக்கிய பொருளாகிவிட்டது. கணனி உபயோகிக்கும் பலருக்கு அந்த கணனியின் சில அடிப்படை விடயங்கள் கூட தெரியாது என்பது உண்மையாகும்.

ஆகவே, நம் கணனி பழுதானால் Service engineer என்ன சொன்னாலும் அதுக்கு தலையை ஆட்டிவிடுகிறோம். ஆகவே, இன்றைய சூழ்நிலையில் கணனியைப்பற்றி சில அடிப்படை விடயங்களையாவது தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இவைகள் எல்லாவற்றையும் ஒரே இடத்தில் சுலபமாக அறிந்துகொள்ள ஒரு இலவச மென்பொருள் உள்ளது.

**மென்பொருளின் பயன்கள்:**

இந்த மென்பொருளினால் கணனியைப் பற்றி அதிக தகவல்களை ஒரே இடத்தில் அறிந்து கொள்ளலாம்.

இந்த மென்பொருளில் உள்ள இன்னொரு வசதி இந்த விபரங்களை Picture, HTML பைல்களாக உங்கள் கணனியில் சேமித்து கொள்ளலாம்.

பிரிண்ட் எடுத்தல், ஈமெயில் அனுப்புதல் போன்ற முக்கியமான வசதிகளும் இதில் உள்ளன.

இந்த மென்பொருளை உங்கள் கணனியில் இன்ஸ்டோல் செய்யாமல் நேரடியாக இயக்கலாம்.

இதில் நம்முடைய கீ போர்டில் Numlock, Capslock, Scroll Lock போன்ற கீகள் செயலில் இருக்கிறதா இல்லையா என்று கூடத் தெரியும்.

இந்த மென்பொருள் 1.04 MB அளவே உடைய ஒரு இலவச் மென்பொருளாகும்.

**உபயோகிக்கும் முறை:**

இந்த மென்பொருளை கீழே உள்ள Link இல் சென்று SimpleSysInfo 2.9 உங்கள் கணனியில் டவுன்லோட் செய்து கொள்ளுங்கள்.


டவுன்லோட் முடிந்ததும் இந்த மென்பொருளை நேரடியாக இயக்குங்கள்.

உங்களுக்கு வரும் விண்டோவில் உங்கள் கணனியின் அனைத்து விபரங்களும் வரும்.

இந்த விண்டோவில் சுமார் 10 இற்கும் மேற்பட்ட Tab கள் இருக்கும். அதில் ஒவ்வொன்றாக click செய்து உங்களுடைய கணனியின் விபரங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.

Link- http://wieldraaijer.nl/

# ஹார்ட் டிஸ்க் சிக்கலா??!! தீர்விற்கு வழி



Chkdsk.exe என்னும் பைலை பயன்படுத்தி ஹார்ட் டிஸ்க்கில் (hard disk) ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைகளை அறியலாம். இது ஒரு DOS புரோகிராம் ஆகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட டிரைவில் (drive) அல்லது முழு டிஸ்க்கை இந்த பைல் சோதனை செய்து பிரச்சினைகள் இருந்தால் அவற்றைச் சரி செய்திடும்.

எனவே, கணனி பயன்படுத்தும் ஒவ்வொருவரும் மாதம் ஒரு முறையேனும் இந்த பைலை இயக்கிப் பார்த்தல் நல்லது. இந்த பைலை இயக்க ஸ்டார்ட் அழுத்தி கிடைக்கும் ரன் விண்டோவில் command அல்லது cmd என டைப் செய்து என்டர் செய்தால் கிடைக்கும் விண்டோவில் கீழ்க்காணும் கட்டளையை இயக்கவும்.

c:\> chkdsk e: இது ஹார்ட்டிஸ்க்கின் e டிரைவை சோதனை செய்யும்.

c:\>chkdsa e:/f/r

/f என்னும் கட்டளை டிஸ்க்கினை சோதனை செய்கையில் ஏதேனும் பிழைகளைக் கண்டால் தானாகவே சரி செய்து விடும்.

/r என்னும் கட்டளை பழுதாகிப்போன மீண்டும் பயன்படுத்த முடியாத டிஸ்க்கின் பகுதிகளை (Bad sectors) கண்டறிந்து அதிலுள்ள தகவல்களை மீட்டுத்தர முயற்சிக்கும். இந்த செக்டிஸ்க் கட்டளை கொடுத்தபின் கணனியை ரீ-ஸ்டார்ட் செய்யவும். பூட் ஆகும் போது செக்டிஸ்க் தானாக இயங்கி விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்ரம் திரைக்கு வந்து விடும்.

*குறிப்பு:-* இந்த பைலை இயக்க ஒரு கணனிக்குள் நீங்கள் அட்மினாக (admin) நுழைந்திருக்க வேண்டும். ஹார்ட் டிஸ்க்கில் உள்ள தவறுகளை இந்த கட்டளை திருத்த வேண்டுமென்றால் நீங்கள் கணனியில் உள்ள எந்த பைலையும் திறந்து வைத்திருக்கக் கூடாது.

# பி.எஃப் கணக்கு தகவல்- ஒன்லைனில்

பி.எஃப்.(PF- Provident Fund) கணக்குதாரர்கள் அவர்கள் கணக்கில் இருக்கும் இருப்பு தொகையை இணையத் தளத்தில் பார்க்க முடியும். இதற்கு கீழே உள்ள பி.எஃப். அமைப்பின் இணையத்தள இணைப்பை கிளிக் செய்யவும்.

**http;// epfoservices.in/epfo/member balance/ member balance office select.php**

அதன் அடியில் Click Here to know the balance என்கிற பகுதியை சொடுக்கினால் இன்னொரு பக்கம் தோன்றும். அதில் உங்களின் மாநிலம் நகரத்தை தேர்வு செய்ய வேண்டும்.

அதன் பின்னர் உங்கள் பி.எஃப். எண் மற்றும் உங்களின் பெயர் (பி.எஃப். கணக்கில் இருப்பது போல்) உங்களின் செல்போன் நம்பர் ஆகியவற்றைக் கொடுத்தால் எஸ்.எம்.எஸ். மூலம் உங்களுக்குத் தகவல் வந்து சேரும்.




# கணனியை முறையாக இயக்கி உலக வெப்பமயமாவதை தடுப்போம்

இன்றைய சுற்றுப்புறச் சூழல் ஆய்வாளர்கள் அனைவரும் உலக வெப்பமயமாவதைத் தடுக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றனர். இதில் கணனி பயன்படுத்துபவர்களும் ஆற்ற வேண்டிய கடமை உள்ளது. இது குறித்து ஆய்வு செய்த டப்ட்ஸ்(Tufts)பல்கலைக்கழகம் சில அறிவுரைகளை வழங்கியுள்ளது. இவற்றைப் பின்பற்றுவதால் ஏற்கனவே நாம் புவி வெப்பமயமாதலில் ஏற்படுத்திய அழிவைச் சரி செய்ய முடியாது என்றாலும் சீதோஷ்ண நிலை மாறிவருவதனை ஓரளவிற்குத் தடுக்கலாம்.

15 நிமிடங்கள் அல்லது அதற்கும் மேலாக (உணவு சாப்பிடுதல், வெகுநேரம் தொலைபேசியில் பேசுதல், மேலதிகாரி அறைக்கு வேலை நிமித்தம் செல்லுதல் போன்றவைகளுக்காக) கணனியைப் பயன்படுத்தப் போவதில்லை என்றால் மொனிட்டரை ஒப் செய்துவிடுங்கள்.

ஒரு மணி நேரத்திற்கு மேல் கணனியைப் பயன்படுத்தப் போவதில்லை என்றால் கணனியை நிறுத்திவிடுங்கள். இது கொப்பி எடுக்கும் சாதனம். பிரிண்டர், ஸ்கானர் மற்றும் பேக்ஸ் சாதனங்களுக்கும் பொருந்தும். கணனி ஒன்றை 24 மணி நேரம் தொடர்ந்து இயக்குவதால் ஓராண்டில் அது 1500 பவுண்ட் காபன்டை ஒக்ஸைடை வெளியே அனுப்புகிறது. மரம் ஒன்று ஒவ்வொரு ஆண்டும் 3 முதல் 15 பவுண்ட் கார்பன்டை ஒக்ஸைடை உறிஞ்சுகிறது. அப்படியானால் ஒரு கணனி விடும் கெட்ட காற்றை நீக்கிச் சுத்தப்படுத்த 100 முதல் 500 மரங்கள் வரை தேவையாயிருக்கும். நீங்கள் புது கணனி வாங்குவதாக இருந்தால் லப்டொப் கணனியை வாங்குங்கள். லப்பொப் டெஸ்க்டாப் கணனியைக் காட்டிலும் கால்பங்கு மின்சக்தியே பயன்படுத்துகிறது. மொனிட்டர் வாங்குவதாக இருந்தால் எல்.சி.டி. மொனிட்டர்களையே வாங்கவும். அவை சி.ஆர்.டி. மொனிட்டரைக் காட்டிலும் மூன்றில் ஒரு பங்கு சக்தியையே பயன்படுத்துகின்றன.

உங்கள் கணனியில் உள்ள பவர் மனேஜ்மெண்ட் வசதியை அவசியம் பயன்படுத்தவும். கணனியை ஸ்ராண்ட்பை மோடில் வைத்திட வேண்டாம். ஏனென்றால் அந்நிலையிலும் மின்சக்தியை கணனி பயன்படுத்திக் கொண்டுதான் இருக்கும். ஸ்விட்ச் ஒப் செய்தால்தான் இது முற்றிலும் நிறுத்தப்படும்.

மொனிட்டரை ஒப் செய்து பின் மீண்டும் அதனை இயக்குவது சிலருக்கு வரக் கூடிய பழக்கமாக இருக்காது. இவர்களுக்கு உதவிட ஒரு சிறிய அப்ளிக்கேஷன் புரோகிராம் உள்ளது. இதனை இன்ஸ்டோல் செய்து செட் செய்திட வேண்டியதில்லை. ஜஸ்ட் டவுண்லோட் செய்து இயக்கினால் போதும். இந்த புரோகிராமின் பெயர் MonitorES (Monitor Energy Saver) இதனை http://monitores.googlecode.com/files/ monitorES _05.exe என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து இலவசமாகப் பெறலாம்.

# வடக்கின் மேதின நிகழ்வுகளும் மேற்குலகின் புதிய நகர்வுகளும்

கூட்டமைப்பின் தலைமை யிலேயே மே தினக்கூட்டம் நடை பெறுவதாக முதலில் செய்தி வந்தது.


அரச ஒடுக்குமுறைக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்பதன் அடிப்படை யில், ஐக்கிய தேசியக்கட்சி, நவச மசமாஜக்கட்சி, மனோ கணே சனின் ஜனநாயக தேசிய முன்னணி போன்றவை கலந்து கொள்வதாக கூட்டமைப்பு தெரி வித்தது.

ஆனால், வெளிவந்த காணொ ளிகளைப் பார்க்கும்போது, ஐக்கிய தேசியக்கட்சியின் தலை மையில் ஏனைய கட்சிகள் இணை ந்தது போன்றதான தோற்றப் பாட்டை அந்நிகழ்வு உருவாக்கி யுள்ளது.

கூட்டமைப்போடு சேர்ந்து மேதின நிகழ்வினை நடத்துவதால் சிங்கள மக்களின் வாக்கு வங்கி யில் சேதம் ஏற்படும் என்கிற அபாயத்தை உணர்த்தும், ஐ.தே.க. இந்த விஷப் பரீட்சையில் ஏன் ஈடுபட்டது என்கிற கேள்வியும் எழுகிறது.

விடுதலைப் புலிகளை இரா ணுவ ரீதியில் அரசு வெற்றி கொண்டாலும், தமிழ் மக்கள் அரசோடு இல்லை என்பதையும், சகல இன மக்களும் இணைந்த மாற்று அரசியலுக்குத் தலைமை தாங்கும் வல்லமை, தம்மிடம் இருப்பதாகவும் சர்வதேசத்திற்குக் காட்டிக்கொள்ளவே ரணில் முயற்சி செய்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் அரசியல் கோரிக்கைகளை கூட்டமைப்பு முன்வைக்கிறது என்கிற அரசின் பரப்புரையை முறியடிக்கக்கூடிய வகையில், சில அதிரடியான மாற்று நகர்வுகளையும் இம் மேதின நிகழ்வில், திட்டமிட்ட



வகையில் ரணில் மேற்கொண்டுள் ளார்.

இதில் ஊர்வலம், மேடை என்கிற இரண்டு பகுதிகளையும் மிகச் சாதுரியமாக மாற்றியமைத்த ரணில், தமிழ் தேசியம் என்கிற இறுக்கமான நிலைப்பாட்டில் கூட்டமைப்பு தற்போது இல்லை யென்பதைக் காட்டும் முயற்சியில் வெற்றியடைந்துள்ளார்போல் உள்ளது.

இந்த மேதின ஊர்வலத்தில் எங்கும் பச்சைத்தலைகள். ஊர்வலத் தை பச்சை நிறப்பதாகைகள் நிரப்பியிருந்தன. *எக்சத் ஜாதிக பக்சயட ஜயவேவா- ஒன்ன பபோ அலி எனவா- கணவா கணவா ரட்ட கணவா -அபட ஒன ஆண்டுவ-* என்கிற முழக்கங்கள் வானைப் பிளந்தன.

தமிழில் கூறுவதானால் *ஐக்கிய தேசியக் கட்சி வாழ்க- இதோ யானை வருகிறது -நாட்டை விழுங்குகிறார்கள் -எங்களுக்கு ஆட்சி வேண்டும்* -என்பதுதான் அந்த ஊர்வலத்தில் பல்லாயிரக் கணக்கில் கலந்துகொண்ட தென் னிலங்கை பச்சைத்தலைகள் எழுப் பிய கோஷங்கள்.

ஆகவே, ஐக்கிய தேசியக்



கட்சிக்கு தேவைப்படும் ஆட்சிய திகாரத்திற்கு தேசிய இனங்களின் ஆதரவு வேண்டும் என்பதாக இந்நிகழ்வினைக் கொள்ளலாம். ஆனாலும், ஆட்சி மாற்றம் என் பதை அடுத்துவரும் தேர்தல்களே தீர்மானிக்கும் என்று மஹிந்த ராஜ பக்ஷ சொல்வதையும் கவனிக்க வேண்டும்.

ஊர்வலத்திற்கு அப்பால், மே தின மேடை நிகழ்வினை நோக்கி னால், அங்கும் ரணிலின் கபடத்தன மாக காய் நகர்த்தலைக் காணலாம்.

மேடையில் எதிரணித் தலைவர் கள் நின்றிருக்க, ரகுபதிராகவ ராஜாராம் என்கின்ற பாடல் காற்றை நிரப்ப, ரணிலும் சம்பந்த னும் இலங்கை தேசியக் கொடியை அசைத்தவாறு மக்களுக்கு காட்சி யளித்தார்கள்.

அது என்ன கொடி என்று கூட நிமிர்ந்து பார்க்காமல், கூட்டமைப் பின் தலைவர் அதனை அசைத்துக் கொண்டிருந்தார். கூட்டமைப்பு சிவப்பு மஞ்சள் வர்ணக் கொடிகள் சோகத்தில் ஒளித்துக் கொண்டன.

ஐ.தே.க. வின் பச்சை நிறமும், கூட்டமைப்பின் சிவப்பு மஞ்சள் நிறமும் இணைந்ததால், அங்கு தமிழரசுக்கட்சியின் பச்சை, மஞ் சள், சிவப்பு வர்ணங்கள் பட் டொளி வீசிப்பறந்ததாகவும் சிலர் வியாக்கியானம் அளிக்க முன்வர லாம்.

தனக்குச் சாதகமில்லாத களத் தை, எவ்வாறு கையாண்டு வெற்றி கொள்வது என்பதனை ரணிலி டமிருந்து கற்றுக்கொள்ள வேண் டும்.

இவை தவிர தாயகம், தேசியம், என்கிற சொல்லாடல்களை சிங் களம் விரும்பாது என்பதனால், இவைகளை தவிர்த்து வருகி றோம் என அண்மைய தொலைக் காட்சி நேர்காணல் ஒன்றில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் களிலொருவர் கூறியிருந்தார்.

இதுமட்டமல்லாது சம்பந்தன் தேசியத் தலைவர் என்றும் குறிப் பிட்டார்.

இருப்பினும் ஒன்றுபட்ட இலங் கைக்குள் தீர்வினைத் தேடுகி றோம். துண்டாடப்பட்ட தாயகத்து மாகாண சபைகளில் போட்டி யிடுகின்றோம். தாயகக்கோட்பாடு பற்றி பேசாமல் விடுகிறோம். கொடியையும் பிடிக்கின்றோம் என்று எவ்வளவுதான் இறங்கி வந்தாலும், பெருந்தேசிய இன வாதத்தின் நிலைப்பாடு மாறப் போவதில்லை என்பதை வரலாறு கள் உணர்த்துகின்றன. மே தினத் தன்று திருகோணமலையிலும், ஒரு சிறு கூட்டம் நடந்தது.

இதில் ஆயிரக்கணக்கில் மக் களும் கலந்து கெள்ளவில்லை. பச்சைத்தொப்பிகளும் கலந்து கொள்ளவில்லை. அக்கூட்டத்தில் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன்,

1946 இல் தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, திரு மலை மணிக்கூட்டுக் கோபுர உச்சியில் பறந்த சிலோன் கொடி யை தியாகி நடராஜன் இறக்க முற்பட்ட வேளையில் பொலி ஸாரால் அவர் சுட்டுக்கொல் லப்பட்ட சம்பவத்தையும்,



தாயகத்தின் தலைநகர் இதுவென தந்தை செல்வாவினால் போற்றப் பட்ட விடயத்தையும் மிகத் தெளிவாக முன்வைத்தார்.

மேலும் அவர், மாகாண சபைத் தேர்தல் குறித்துப் பேசுகையில், தாயக பூமியைக் காப்பாற்ற மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவோம். நில அபகரிப் பைத் தடுப்பதற்கு இடைக்கால தீர்வாக இந்த மாகாண சபைத் தேர்தலை கூட்டமைப்பு கருது கிறது என்பதோடு, மாகாணசபை அதிகாரங்களை கூட்டமைப்பு கைப்பற்றினால், ஓரளவிற்காவது எமது தாயக நிலத்தை பாதுகாக்க முடியும் என்றார்.

ஆயினும், காணி, காவல் துறைக் கான அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு பகிர்ந் தளிக்க மாட்டோமென பேரின வாதிகள் உறுதிபடத் தெரிவிக்கும்

**நன்றி: இணையம்**

நிலையில், மாகாண சபையைக் கைப்பற்றி எவ்வாறு தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலங்களைக்



காப்பாற்ற முடியும் என்பதை அவர் மக்களுக்கு விளக்க வேண் டும். (தொடரும்)

# சம்பூர் மக்களின் நலனில் அக்கறை எடுப்போம்

## அமைச்சர் சம்பிக்க உறுதி

(கொழும்பு)

அனல் மின் நிலையத்துக்கு மிகவும் உகந்த இடம் என்பதாலே சம்பூரில் அனல் மின் நிலையம் நிர்மாணிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் இலங்கை மின் பாவனையாளர்களே நன்மையடைவரென மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் பே ாதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்பூர் அனல் மின் நிலையம் நிர்மாணிக்கப்படுவதினூடாக மின் அலகிற்கான செலவு குறைந்து மக்கள் அதன் பலனைப் பெறவுள்ளனர்.

சம்பூர் அனல்மின் நிலைய திட்டத்திற்கான சாத்தியக்கூற்று அறிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு விடயங்களை ஆராய்ந்த பின்னரே சம்பூர் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டது. இதில் வேறு நோக்கம் கிடையாது. இப்பகுதி மக்களின் பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கம் எதுவும் கிடையாது. இந்தத் திட்டத்தினூடாக சம்பூர் பகுதி பொருளாதாரம் நன்மைகளை அடையும்.

500 மெகா வோர்ட் மின்சாரம் உற்பத்தி செய்யும் இந்தத்திட்டத்திற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும். இந்த திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பாக அடுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். வரிச்சலுகை பெறவே இந்த சட்ட மூலம் முன்வைக்கப்பட்டது.

அனல் மின் நிலையத்திற்காக 50 ஏக்கர் காணி பெறப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்படும் மக்களுக்கு நட்டஈடு வழங்கப்படும். தேவையான காணிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. பாதிக்கப்படும் மக்களின் எதிர்காலம் குறித்து நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

ஒரு அலகு மின் உற்பத்திக்கு 60 முதல் 70 ரூபா வரை எரிபொருளுக்கு செலவாகிறது. இந்தத் தொகை அனல் மின் உற்பத்தி நிலையத்தினூடாக பத்தில் ஒரு பங்காக குறையும் என்றார்.

(அ-2)

# தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டால் கூட்டமைப்பால் அரசியல் செய்ய முடியாது

## சபையில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென ஈ.பி.டி.பி.தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மீள்குடியேற்றம் தொடர்பாக இடம்பெற்ற பாராளுமன்ற ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சர் மேலும் கூறியதாவது, தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ந்தால் தமக்கு அரசியல் செய்ய எதுவும் இருக்காது என தமிழத்தேசிய கூட்டமைப்பு கருதுகிறது. அதனால் பொய்யான குற்றச்சாட்டுக்களை சபையில் முன்வைக்கிறது.

பிரச்சினையை தீர்க்கவே நாம் அரசாங்கத்துடன் இணைந்துள்ளோம். பிரச்சினைகளை நாம் தீர்த்து வருகிறோம். எனக்கு எதிராக கொலை வழக்கு எதுவும் கிடையாது. ஆயுதம் வைத்திருந்தது தொடர்பிலே எனக்கு இந்தியாவில் வழக்கு உள்ளது. அதனை முகம் கொடுக்க நான் தயாராகவே உள்ளேன்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களின் குடும்பத்தவர்கள் வெளிநாட்டில் உள்ளனர். ஆனால், இங்கு முதலைக்கண்ணீர் வடிக்கின்றனர். பிரச்சினைக்கு தீர்வு காண முழு முயற்சி செய்து வருகிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பு கிடைக்கிற சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும்.

தனது இடத்துக்கு செல்ல இராணுவம் இடமளிப்பதில்லை எனவும் தான் இன்னும் அகதியாக உள்ளதாகவும் மாவை சேனாதிராஜா எம்.பி.சபையில் கூறினார். ஆனால் அவரின் மாவிட்டபுர இடத்தை அவர் ஏற்கனவே விற்றுவிட்டார்.

(அ-2)

# விதாதாவள நிலையத்தில் கணனிப் பயிற்சிநெறி

நல்லூர் பிரதேச செயலகத்தின் விதாதாவள நிலையத்தில் கணனி பயிற்சிநெறியானது (Ms.Office) இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளதாக நல்லூர் பிரரேதச செயலாளர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கும் நேர்முகத்தேர்வுக்கு சுயவிபரக்கோவை, சான்றிதழ், பங்கீட்டு அட்டையுடன் இல 36, செல்லர் வீதி, நல்லூர் இல் அமைந்துள்ள விதாதா வள நிலையத்திற்கு (யாழ்.வலயக்கல்வித் திணைக்களத்திற்கு அருகாமையில்) மேலதிக விபரங்களை 021 222 1034 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

(அ)

# கிளி. மாவட்டத்தில் 23 ஆயிரம் பேருக்கு தேசிய அடையாள அட்டை இல்லை

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

போர் நடைபெற்ற பிரதேசமாகிய கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளவர்களில் 23 ஆயிரம் பேரிடம் தேசிய அடையாள அட்டை இல்லை என்பது கண்டறியப்பட்டிருக்கின்றது.

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அதன் ஊடாக வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டவர்கள் எதுவிதமான தடைகளுமின்றி தமது தேசிய அடையாள அட்டையின் மூலம் தம்மை அடையாளப்படுத்தி இலகுவாக வாக்களிப்பதற்கு வழி செய்வதற்குமாகவே தேசிய அடையாள அட்டைக்கான நடமாடும் சேவையை கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்துகின்றோம் என்று நீதியும் சுதந்திரமுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பாகிய பவ்ரல் அமைப்பின் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் சபாநாயகம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்த சூழல் காரணமாகவும் இடப்பெயர்வு காரணமாகவும் அத்துடன் வேறு பல காரணங்களினாலும் பலர் தமது தேசிய அடையாள அட்டையை இழந்திருக்கின்றார்கள். பலருடைய அடையாள அட்டைகள் பழுதடைந்திருக்கின்றன.

சிலருடைய பிறப்பு உரிய முறையில் பதிவு செய்யப்படாத காரணத்தினாலும் பிறப்புச் சான்றிதழ்களை தொலைத்துவிட்டு அதன் இணைப்பிரதியைப் பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தினாலும் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பம் செய்யாதவர்களாக காணப்படுகின்றார்கள்.

தேசிய அடையாள அட்டைகள் இல்லாதவர்கள் குறிப்பாக பின்தங்கிய கிராமப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். புனர்வாழ்வு நடவடிகக்கைகள், வாழ்வாதாரச் செயற்பாடுகள் என்பவற்றில் அவர்கள் தமக்குரிய உதவிகளை தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாவும் தேர்தல் காலங்களில் வாக்களிப்பதற்கு தம்மை அடையாளப்படுத்துவதற்காக வேறு அடையாள அட்டைகளுக்காக அலைய் வேண்டியவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இத்தகைய நிலைமையை முற்றுமுழுதாக மாற்ற முடியாவிட்டாலும் முடிந்த அளவில் அதனை மாற்றியமைப்பதற்கான முயற்சிகளில் நாங்கள் ஈடுபட்டிருக்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ-7)

# வடக்கு,கிழக்கு தமிழரின் தாயகம் என்பது அப்பட்டமான பொய்

## எல்லாவல மேதானந்த தேரர் கூறுகிறார்

பௌத்த விகாரைகள் அழிக்கப்பட்டே இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு தமிழரின் தாயகம் என்பது அப்பட்டமான பொய் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழரின் தாயகம் என்பது அப்பட்டமான பொய். இப்பிரதேசங்களில் வாழ்ந்து வந்த சிங்களவர்கள் இன்று ஏதுமற்றவர்களாக இருக்கின்றனர். வட இலங்கையின் எந்தவொரு பகுதியையும் உங்களின் தாயகம் என்று கூற முடியாது. தமிழர்கள் இந்த நாட்டில் வாழ்பவர்கள்.

வடக்கு, கிழக்கில் கோவிலை உடைத்துக் கட்டப்பட்ட ஒரு பௌத்த விகாரையைக் கூற முடியுமா? தமிழர் பகுதிகள் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்பது அப்பட்டமான பொய்யாகும்.

நாம் அனைவரையும் ஒன்றாக மதிக்கிறோம். இந்துக் கோயிலைக் கட்டுவதற்கு நான் கூட நிதியுதவி வழங்கியுள்ளேன். தமிழ்க் கூட்டமைப்போ பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு அரசியல் இலாபம் தேடுவதற்கு முயற்சிக்கின்றது என்றார்.

(அ-7)

# கோட்டமட்ட சித்திரப் போட்டி

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலயத்தின் வவுனியா நகர கோட்டம், செட்டிகுளம் கோட்டம் ஆகிய இரு கோட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கான சித்திரப் போட்டி நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

வவுனியா நகர கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான போட்டி இலங்கை திருச்சபை தமிழ் மகா வித்தியாலயத்திலும் செட்டிகுளம் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான போட்டி நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்திலும் நடைபெறும் என வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அன்ரன் சோமராஜா தெரிவித்துள்ளார்.

(அ-3-266)

# பிம்பிலி இடைத்தங்கல் முகாமில் கனிஷ்ட பாடசாலை திறந்து வைப்பு

(முல்லைத்தீவு)

இராணுவத்தின் நிதியுதவியுடன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் கோம்பாவில் கிராமத்தில் உள்ள பிம்பிலி இடைத்தங்கல் முகாமில் முள்ளிவாய்க்கால் கனிஷ்ட வித்தியாலயம் நிர்மாணிக்கப்பட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை சமூக அமைப்பின் பிரதிநிதி ஐ.மாதவராஜாவின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இப்பாடசாலை கட்டடத்தை முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத்தளபதி எல்.பி.ஆர் மார்க் திறந்து வைத்தார். இக்கிராமத்தில் உள்ள புதுக்கடியிருப்பு மத்திய கல்லூரி உடையார்கட்டு மகா வித்தியாலயம் இரணைப்பாலை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே மேற்குறித்த இடைத்தங்கல் முகாமில் உள்ள மாணவர்கள் கல்விபயின்று வந்தனர்.


தற்போது இம்மாணவர்களின் நலன்கருதி முகாமிற்குள் இப்பாடசாலை நிர்மாணிக்கப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இப்பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் சி.ஜெயகாந்த் முல்லைத்தீவு கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் மா. ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(அ-3-267)

# தேசியக் கொடியை சம்பந்தன் ஏந்தியமை நல்லிணக்கத்திற்கான ஒரு அழைப்பு

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு



(கொழும்பு)

**பாராளுமன்ற தெரிவுக்குழுவே இன நெருக்கடியைப் பேசித் தீர்ப்பதற்கு உகந்த ஒரே இடம் என்று மீண்டும் தெரிவித்துள்ள அரசாங்கம் தெற்கின் இணக்கப்பாடு இன்றி எட்டப்படுவது நிரந்தரத் தீர்வாக இருக்காது என்றும் வலியுறுத்தி சுட்டிக்காட்டியுள்ளது என சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற சபை ஒத்தி வைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின் இறுதியில் அரசாங்கம் சார்பில் பதிலளித்துப் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இங்கு மேலும் உரை நிகழ்த்துகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தேசியக் கொடியை உயர்த்திப்பிடித்த போது என்னைப் போன்று சந்தோஷப்பட்ட வேறு யாரும் கிடையாது. இதன் மூலம் நல்லிணக்கம் தொடர்பில் சம்பந்தன் வழங்கிய செய்தி மிக முக்கியமானது.

பாராளுமன்ற தெரிவுக்குழு விடயத்தில் தற்போது பந்து சம்பந்தனின் கையிலேயே இருக்கின்றது. தமிழ்க் கூட்டமைப்பினர் இல்லை என்றால் தெரிவுக்குழுவை நடத்திப் பயனில்லை. கூட்டமைப்பினர் மீது அவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறோம். ஆகவே தமிழ்க் கூட்டமைப்பு அதன் உறுப்பினர்களது பெயர்களை தாமதிக்காமல் சபாநாயகருக்கு வழங்க வேண்டும்.

இணக்கப்பாடொன்று எட்டுவது பற்றி பேசுவதற்கு உகந்த இடம் தெரிவுக்குழுதான். தெற்கில் இணக்கம் காணாது தீர்வொன்றுக்கு செல்ல முடியாது. அப்படியான தீர்வு நிரந்தரத் தீர்வாகவும் இருக்காது.

ஆகவே பேச்சுக்களுக்கான கதவு இன்னும் திறந்தே இருக்கின்றது. நாம் நம்பிக்கையுடன் இருக்கின்றோம். ஜனாதிபதி விருப்பத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். மஹிந்த ராஜபக்ஷ போன்று தெற்கில் மக்கள் செல்வாக்கு உள்ள தலைவர் ஒருவர் இருக்கும் போது தான் இந்தப் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண முடியும். தமிழ்க் கூட்டமைப்பினர் இதற்கே நேர்மையுடன் முன்வர வேண்டும் என்றார். (2-7)

# இராணுவப் போர்க்குற்றவாளிகள் எவரும் பிரிட்டனில் இல்லை

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த போர்க்குற்றவாளிகள் எவரும் பிரித்தானியாவில் புகலிடம் தேடவில்லை என்று இலங்கையின் இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்ளிட்ட நாடுகளின் 200 இற்கும் அதிகமான போர்க்குற்றவாளிகள் பிரித்தானியாவில் புகலிடம் தேடியுள்ளதாக லண்டனில் இருந்து வெளியாகும் தி சன் நாளிதழ் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருந்தது.

இது தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பிய போது அதற்குப் பதிலளித்துள்ள இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய இந்த அறிக்கை தொடர்பாக இலங்கை இராணுவம் அறியவில்லை. இந்த எண்ணிக்கையில் இலங்கை இராணுவம் அடங்கவில்லை. ஏனைய குற்றவாளிகள் குறித்து நான் பேச முடியாது. ஆனால், இலங்கை இராணுவம் நிச்சயமாக இதில் அடங்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அவர் இலங்கை இராணுவம் போர்க்குற்றங்களைச் செய்யவில்லை என்றோ இலங்கை இராணுவப் போர்க்குற்றவாளிகள் யாரும் இல்லை என்றோ அவர் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (2-7)

# ஜீ.எல்.பீரிஸ் திட்டத்துடன்தான் ஹிலாரியை சந்திக்க வேண்டும்

## விக்டோரியா நுலன்ட் தெரிவிப்பு

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்டனை சந்திப்பதற்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஒரு திட்டத்துடன் முன்வரவேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்டோரியா நுலன்ட் தெரிவித்துள்ளார்.

வோஷிங்டனில் நேற்று முன்தினம் நடத்திய நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் இலங்கை விவகாரம் தொடர்பாக அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இலங்கை வெளிவிவகார அமைச்சர் அடுத்தவாரம் இங்கு வரப்போகிறார். அவரது நிகழ்ச்சி நிரல் என்னவாக இருக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா? என்ற கேள்விக்கு அவரது நிகழ்ச்சி நிரல் என்னவாக இருக்கப் போகிறது? அவரது நிகழ்ச்சி நிரல் என்னவென்று உங்களுக்கு அனுப்புகிறேன் என விக்டோரியா நுலன்ட் தெரிவித்துள்ளார்.

இராஜாங்கச் செயலரின் நிகழ்ச்சி நிரல் பற்றிய கேள்விக்கு நாங்கள் இலங்கையின் நல்லிணக்க விவகாரங்கள் குறித்து பேசி வருகிறோம். அவர்கள் அதுபற்றிய ஒரு திட்டத்துடன்முன்வரவேண்டியதேவை உள்ளது. நாங்கள் அவர்களுடன் பேசப் போகிறோம்.

பலதரப்பு விவகாரங்கள் மற்றும் பிராந்திய விவகாரங்கள் குறித்தும் பேசப்படும் என்று நான் அனுமானிக்கிறேன் என அவர் பதிலளித்துள்ளார். (7-2)

# கொள்வனவு செய்யப்பட்ட நெல்லுக்கு பணம் செலுத்துவதில் தாமதம்

விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட நெல்லுக்கு பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு குறிப்பிடுகின்றது.

அரசாங்கத்தின் ஆலோசனையின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கைத் தாண்டி நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதன் காரணமாகவே இந்தப் பிரச்சினை தோன்றியுள்ளதாக அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்தார்.

இறுதிக் கட்டமாக கொள்வனவு செய்யப்பட்ட நெல்லுக்கு ஒருவாரத்திற்குள் பணம் செலுத்துவதாக உறுதியளித்திருந்த போதிலும் அதன் பொருட்டு வங்கிகளில் பணவைப்பு செய்வதில் தாமதம் நிலவியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இன்றும் மற்றும் நாளையும் விவசாயிகளுக்கான நிலுவைப் பணத்தை வழங்க முடியும் என எதிர்பார்ப்பதாக அமைச்சின செயலாளர் கூறினார்.

இந்த நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு வருவதுடன் விவசாயிகளிடம் இருந்து மொத்த நெல்லையும் கொள்வன்வு செய்வதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுனில் சிறிசேன மேலும் தெரிவித்தார். (2-7)




★ 1502- கொலம்பஸ் தனது இறுதியும் கடைசியுமான கடற் பயணத்தை மேற்கிந்தியத் தீவுகளுக்கு ஆரம்பித்தார்.

★ 1812- லண்டன் நாடாளுமன்றத்தில் வைத்து பிரதமர் ஸ்பென்சர் பேர்சிவல் ஜோன் பெல்லிங்ஹம் என்பவனால் கொலை செய்யப்பட்டார்.

★ 1857-இந்திய கிளர்ச்சி, 1857 இந்தியப் புரட்சியாளர்கள் டில்லியை பிரித்தானியர்களிடமிருந்து கைப்பற்றினர்.

★ 1867- லக்சம்பேர்க் விடுதலை அடைந்தது.

★ 1891-ஜப்பானில் பயணம் மேற்கொண்டுள்ள ரஷ்ய மன்னர் இரண்டாம் நிக்கலாஸ் கொலை முயற்சி ஒன்றிலிருந்து தப்பினார்.

★ 1905- அல்பேர்ட் ஐன்ஸ்டீன் பிரௌனியன் இயக்கம் பற்றிய தனது விளக்கத்தை வெளியிட்டார்.

★ 1924-மெர்சிடிஸ்-பென்ஸ் நிறுவனம் காட்லீப்டைம்லர், கார்ல் பென்ஸ் ஆகியோரினால் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1943- இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் அலூசியன் தீவுகளின் எட்டு தீவைக் கைப்பற்றின.

★ 1949- சியாம் நாடு தாய்லாந்து எனப் பெயர் மாற்றம் பெற்றது.

★ 1949- ஐக்கிய நாடுகள் சபையில் இஸ்ரேல் இணைந்தது..

★ 1953- டெக்சாசில் இடம்பெற்ற சூறாவளியில் 114 பேர் உயிரிழந்தனர்.

★ 1960- முதலாவது கருத்தடை மாத் திரை அறிமுகமானது.

★ 1985- இங்கிலாந்தில் உதைபந்தாட் டப் போட்டி ஒன்றின் அரங் கில் ஏற்பட்ட தீ விபத்தினால் 56 பார்வையாளர்கள் உயிரிழந்தனர்.

★ 1987- முதலாவது இதய மாற்றுச் சத்திரசிகிச்சை மேரிலாந்தில் நடத்தப்பட்டது.

★ 1997- ஐ.பி.எம். இன் ஆழ்நீலக் கணனி முதன்முதலாக காரிகாஸ் பரவை சதுரங்க ஆட்டத்தில் தோற்கடித்தது.

★ 1998- இந்தியா பொக்ரானில் மூன்று அணுச் சோதனைகளை நடத்தியது.

**பிறப்புகள்**

★ 1895- ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி, இந்திய தத்துவஞானி (இ.1986)

★ 1897- ஜோர்ஜ் பீட்டர் மர்டாக், மானிடவியலாளர் (இ.1985)

**இறப்பு**


★ 1976- அல்வார் ஆல்ட்டோ, பின்லாந்து கட்டடக் கலைஞர்(பி.1898)



★ 1897-கவியோகி சுத்தானந்த பாரதியாரின் பிறந்த தினம் (இ.1990)

# வீரர்களுக்காக ஒரே மேடையில் தோன்றிய இன்றைய, நாளைய ஜனாதிபதிகள்





பிரான்சில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசியை தோற்கடித்து எதிர்கட்சி வேட்பாளர் ஹோலண்டே வெற்றி பெற்றார்.

உலகப் போரில் உயிர் நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக ஐரோப்பாவின் வெற்றி என்ற நாள் சிறப்பாக கொண்டாடப்படும். இந்த நாளை கொண்டாடுவதற்கு நிக்கோலஸ் சர்கோசியும் பிரா கோய்ஸ் ஹோலண்டேவும் ஒன்றாக இணைந்தனர். வீரர்கள் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து சர்கோசி மரியாதை செலுத்தினார்.

இன்றைய ஜனாதிபதியும் நாளைய ஜனாதிபதியும் ஒரே மேடையில் தோன்றியது அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. தேர்தல் முடிந்த நாளிலிருந்தே என்னுடைய நோக்கம் பிரான்சை சீர்செய்வது தான் என்று ஹோலண்டே தெரிவித்தார்.

பிரான்சில் சுமார் 3 சதவீத வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இரண்டாவது ஜனாதிபதி ஹோலண்டே என்பது குறிப்பிடத்தக்கது. (அ-7)

# லெபனான் - சிரியாவுக்கிடையில் ஆயுதக்கடத்தல்-ஐ.நா.தெரிவிப்பு

சிரியாவுக்கும் லெபனானுக்கும் இடையில் தொடர்ச்சியான ஆயுதக் கடத்தல் இடம்பெற்று வருவதாக ஐ.நா. சபை குறிப்பிட்டுள்ளது.

லெபனானில் இருந்து சிரியாவுக்கும் சிரியாவில் இருந்து லெபனானுக்கும் தொடர்ந்து ஆயுதக் கட்த்தல் இடம்பெறுவதை உறுதிப்படுத்த முடிகின்றது என மத்திய கிழக்கிற்கான ஐ.நா. விசேட தூதுவர் டெர்ஜெரொட் லார்சன் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தெரிவித்துள்ளார். இதில் லிபியாவில் இருந்து சிரியாவுக்கு கடத்தப்படும் ஆயுதங்களை லெப னான் இராணுவம் லெபனான் துறைமுகத்தில் வைத்து அண் மையில் கைப் பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆயுதங்கள் சிரிய அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவுக்காக கடத்தப்படுவதாகவும் உறுதிப்படுத்தப்பட்டது. (அ-7)

# பிரேசில் நடுவானில் ஹெலிகொப்டர் வெடித்து சிதறல்; எட்டுப் பேர் பலி



பிரேசில் நாட்டில் நடுவானில் இராணுவ பொலிஸ் ஹெலிகொப்டர் ஒன்று வெடித்து சிதறியதில் அதில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்தனர். பிரேசில் நாட்டில் டோவர்லேண்டியா நகரில் இருந்து கோயியாணியா நகருக்கு பிரேசில் இராணுவ பொலிஸ் ஹெலிகொப்டர் சென்று கொண்டிருந்தது.

சமீபத்தில் 7 பேரை கொலை செய்த ஒரு கொலையாளியை விசாரணைக்காக பொலிஸார் அழைத்துச் சென்று கொண்டிருந்த போது நடுவானில் அந்த ஹெலிகொப்டர் வெடித்துச் சிதறியதில் கொலையாளி உட்பட ஹெலிகொப்டரில் பயணம் செய்த 8 பேரும் பலியானார்கள். (அ-7)

# திருடனின் கைவிரலை கடித்து துண்டாக்கிய ஜப்பானிய பெண்

ஜப்பானிய பெண் ஒருவர் சைக்கிளில் வந்து பையை கொள்ளை அடித்துச் சென்ற திருடனின் விரலைக் கடித்து துண்டாக்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஜப்பானின் சப்போரோ நகரை சேர்ந்த 59 வயது பெண் கடைக்குச் சென்று விட்டு தன் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது சைக்கிளில் வந்த ஒரு கொள்ளையன் இவரது பையை பறித்துச் சென்று விட்டான். உடனடியாக தன் வீட்டுக்குச் சென்று டுவீலரை எடுத்துக்கொண்டு கொள்ளையனை துரத்திச்சென்று பிடித்து அவனிடமிருந்து பையை மீட்க முயன்றுள்ளார்.

ஆனால் கொள்ளையன் பையை கொடுக்காததால் ஆத்திரமுற்ற இந்தப்பெண் அவனது வலக்கையின் ஒரு விர்லை கடித்து துப்பினார்.

வலி பொறுக்கு முடியாத கொள்ளையன் பையை விட்டுவிட்டு ஓடிவிட்டான். ஜப்பானின் ஒரு சில பகுதிகளில் கொள்ளையர்களின் கை விரலை துண்டித்து தண்டனை கொடுப்பது ஒரு மரபாக இருந்தது. தற்போது இந்தப்பெண் இந்த தண்டனையை தற்செயலாக கத்தியின்றி நிறைவேற்றியுள்ளார். (அ-7)

# சிரியாவில் குண்டுத் தாக்குதல்; பாதுகாப்பு படையினர் மூவர் காயம்

சிரியாவில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஐ.நா. கண்காணிப்பாளரின் வாகனத்துக்குப் பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படைத்தரப்பினரின் வாகனம் ஒன்றை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிரியாவின் டெரா எனும் நகரில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இச்சம்பவத்தின் போது ஐ.நா.கண்காணிப்பாளர்கள் எவரும் காயமடையவில்லை எனக் கூறப்படுகின்றது. ஆயினும் இவர்களுக்கான பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த 3 சபியப்படைத் தரப்பினர் இதன்போது காயமடைந்துள்ளனர். இதன்போது ஐ.நா. கண்காணிப்புக்குழுவுக்குத் தலைமை தாங்கும் அதிகாரி மேஜர் ஜெனரல் றொபர்ட் மூட்டும் இருந்ததாகவும் சிரியாவின் போர் நிறுத்த நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக அங்கு சுமார் 30 ஐ.நா. கண்காணிப்பாளர்கள் அனுப்பப்பட்டுள்ள போதிலும் அங்கு இடம்பெறும் வன்முறைகளில் அவர்களின் பிரசன்னம் குறையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை சிரியாவில் தொடர்ந்து இடம்பெற்று வரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடனேயே ஆறு அம்ச சமாதானத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக ஐ.நா மற்றும் அரபுலீக்கின் சிறப்புத்தூதுவர் கோபி அனான் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையில் கருத்துத் தெரிவித்தபோது கூறியுள்ளார்.

அத்துடன் சிரியப் படைத்தரப்பினால் மக்களின் குடியிருப்புக்களை இலக்கு வைத்துத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2011ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து சிரிய ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கு எதிராக அங்கு கிளர்ச்சிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-7)


# இந்தோனேசியாவில் சிறைக்கைதிகள் தப்பியோட்டம்

(சுமாத்ரா)

இந்தோனேசியாவின் அசே மாகாணத்தில் மியூலாபோ நகர சிறையில் துப்புரவு தொழிலாளி குப்பைகளை வெளியே கொட்டு வதற்கு வசதியாக ஒரு வார்டன் சிறை கதவை திறந்து விட்டார்.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி 42 கைதிகள் தப்பி ஓடி விட்டனர். உடனடியாக இராணுவத்தினரும் பொலிஸாரும் சென்று ஆறு கைதிகளை மீண்டும் கைது செய்து அழைத்து வந்தனர். தப்பிஓடிய கற்பழிப்பு, கொலை குற்றங்களில் ஈடுபட்ட 36 கைதிகளை தேடும் பணி தீவிரப்படுத்தப் பட்டுள்ளது. (அ-7)

# ஒரே பாலின திருமணத்திற்கு ஆதரவு தெரிவித்த முதலாவது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா



ஒரே பாலினத்தவர்களை திருமணம் செய்து கொள்வதற்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஆதரவு தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் ஒரே பாலினத்தவர்கள் திருமணம் செய்வதற்கு ஆதரவு தெரிவித்த முதலாவது அமெரிக்க ஜனாதிபதியாக அவர் பதிவாகியுள்ளார். எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சி சார்பாக பெரும்பாலும் மிட் ரொம்னி பராக் ஒபாமாவை எதிர்த்து போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் ஒரே பாலினத்தவர்களின் திருமணத்துக்கு மிட்ரொம்னி எதிர்ப்பு வெளியிட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. அமெரிக்காவின் உப ஜனாதிபதி ஜோபைடன் மற்றும் சில அமைச்சரவை உறுப்பினர்கள் ஒரே பாலினத்தவர்கள் திருமணத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே ஒரே பாலினத்தவர்கள் திருமணம் செய்து கொள்வதற்கு 50 வீதமான அமெரிக்கர்கள் ஆதரவு தெரிவித்ததுடன் 48 வீதமானவர்கள் எதிர்ப்பு வெளியிடுவதாக கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டிருந்தது. இந்த விவகாரத்தில் தமது நிலைப்பாட்டை வெளியிடுவதற்கு பராக் ஒபாமா அழுத்தங்களை எதிர்நோக்கியதாகவும் அமெரிக்கத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (அ-7)

## உலக தரிசனம்

# சவுதிஉளவுத்துறையில் பணியாற்றிய அல்கொய்தா பயங்கரவாதி

## திடுக்கிடும் தகவல்

உள்ளாடைக்குள் வெடிகுண்டை மறைத்துவைத்து விமானத்தைத் தகர்க்கச் சதித்திட்டம் தீட்டிய நபர் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர் என தற்போது தெரியவந்துள்ளது. அல்கொய்தா பயங்கரவாத இயக்கத் தலைவர் பின்லேடனின் முதலாமாண்டு நினைவுதினத்தின் போது அமெரிக்க விமானத்தை குண்டுவைத்துத் தகர்க்க ஏமனில் இருந்து அல்கொய்தா தீவிரவாதி முயற்சித்தான்.

ஆனால் இந்தச் சதியை விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் முறியடித்தனர். இதன்போது தீவிரவாதியும் கைது செய்யப்பட்டான். அவன் தனது உள்ளாடைக்குள் வெடிகுண்டை மறைத்துவைத்து தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அமெரிக்க விமானத்தைத் தகர்க்க அல்கொய்தா இயக்கத்தால் அனுப்பப்பட்ட அந்தத் தற்கொலைப் படை தீவிரவாதி சவுதிஅரேபியாவில் உளவுத்துறையில் பணியாற்றியவன் என்ற திடுக்கிடும் தகவல் தற்போது தெரியவந்துள்ளது. ஆயினும் பெயர் உள்ளிட்ட விபரங்கள் வெளியிடப்படவில்லை. அந்தத் தீவிரவாதி சவுதி உளவுத்துறையில் பணியாற்றியவர் என்ற தகவலை அமெரிக்க உளவு அமைப்பான எப்.பி.ஐ. கண்டுபிடித்திருப்பதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

மேலும் விமானத்தை தகர்க்க முயன்ற தீவிரவாதி சவுதி அரேபியா உளவுத்துறையில் முன்பு பணியாற்றியுள்ளான். அதன்மூலம் அமெரிக்க விமானங்கள் , விமான நிலையங்களில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடைமுறைகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை எளிதாக தெரிந்து கொண்டுள்ளதாகவும் தாக்குதல் நடத்துவதற்காக கடந்த மாதம் அவன் ஏமனில் இருந்து புறப்பட்டுள்ளான். எளிதில் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு வடிவமைக்கப்பட்ட இரண்டு வெடிகுண்டுகளுடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வழியாக சென்றுள்ளான் என்று கூறப்பட்டிருந்தது. (அ-7)

# மேட்டூர் அனல் மின்நிலையத்தில் நள்ளிரவில் பயங்கர தீ விபத்து



மேட்டூர் அனல் மின் நிலையத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவில் பயங்கர தீவிபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் ஊழியர் ஒருவர் பலியானார். மேலும் பலர் காயமடைந்தனர்.

இங்கு 840 மெகாவோட் மின் சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு கன்வெயர் பெல்ட் மூலம் நிலக்கரி எடுத்து செல்லப்பட்டு மின் உற்பத்தி செய்ய 14 ஆயிரம் தொன் நிலக்கரி எடுத்து செல்லப்படுகிறது.

மின் உற்பத்திக்காக 4 மெயின் கன்வெயர் பெல்ட்களில் இந்த் நிலக்கரி கொண்டு செல்லப்படுகின்றது. இந்த பெல்ட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.45 மணியளவில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

சுழார் 200 அடி தூரத்திற்கு கன்வெயர் பெல்டில் தீப்பிடித்தது. இதனால் தீ மளமள என எரிந்து அங்கிருந்து ஒரு கோபுரத்தில் பற்றியதில் கோபுரம் சரிந்து கீழே விழுந்தது.

இந்த தீ பல இடங்களுக்கு பரவியது. இந்த தீ விபத்தில் மின் நிலைய ஊழியர் நல்லதம்பி (50) என்பவர் தீயில் கருகி பலியாகினார். மேலும் கோபால், செயற்பொறியாளர் ஒருவர் என இருவர் படுகாயமடைந்து மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

உடல் தீக்காயம் அதிகமாக இருந்ததால் இவர்கள் மேல் சிகிச்சைக்காக கோவை கொண்டு செல்லப்பட்டனர்.

தீயை அணைக்கும் பணியில் சேலம் மேட்டூர் அனல் மின் நிலைய தீயணைப்புத்துறை ஊழியர்கள் 40 இற்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர்.

இதில் மேலும் பலருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அனல் மின் நிலையத்தில் 500 ஊழியர்கள் பணியில் உள்ளனர். இவர்கள் எந்த நேரத்திலும் அனல் மின் நிலையத்தில் இருந்து வெளியே வர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் தீ விபத்தால் சேதமடைந்த பகுதிகளை சீர்செய்ய ஒரு மாதம் ஆகும் என்பதால் மின்வெட்டு அதிகரிக்கும் எனவும் கூறப்படுகிறது.


விபத்து ஏற்பட்டவுடன் மேட்டூர், இடைப்பாடி, பவானி, சேலம் உட்பட பல பகுதிகளிலிருந்து 8 தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு 50 வீரர்கள் தீயை அணைத்தனர்.

5 மணி நேரம் போராடி தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்தனர். மேலும் 800 மீற்றர் நீளமுள்ள கன்வெயர் பெல்ட் தீயில் கருகி சேதமடைந்தது. இருப்பினும் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது.

(அ-7)

# ஈழத்தை விதைத்த டெசோ அமைப்பின் கழுத்தை நெரித்துக் கொன்றவர் கருணாநிதி

## வைகோ ஆவேசம்



கூச்சம் இல்லாமல் பொய்கள் சொல்வதும் வெட்கம் இல்லாமல் வேடிக்கை காட்டுவதும் கலைஞர் கருணாநிதிக்குக் கைவந்த கலை. வசனம் எழுதி வாழ்க்கையைத் தொடங்கியவர் அதே வசனங்கள் இன்னமும் கை கொடுக்கும் என்று நினைக்கிறார். இவ்வாறு வைகோ விகடனுக்கு வழங்கிய பேட்டியில் ஆவேசமாக தெரிவித்தார்.

80 களின் தொடக்கக் காலத்தில் தமிழ்நாட்டு மக்களின் இதயங்களில் எல்லாம் ஈழம் என்ற சொல்லை விதைத்த டெசோ அமைப்பின் கழுத்தை நெரித்துக் கொன்றவரே கருணாநிதிதானே. 24 ஆண்டுகளுக்கு முன் அவராலேயே கொன்று புதைக்கப்பட்ட உடலை மீட்டெடுத்து பாடம் பண்ணி படம் காட்ட வருகிறார். இது டெசோ அல்ல வெறும் ஷோ.

யாழ். கோட்டையில் புலிக் கொடி பறந்தபோது வேடிக்கை பார்த்த அவர் வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் முக்கால் நிலப் பரப்பில் நிர்வாகத்தைத் தமிழீழ அரசாங்கம் நிர்வகித்தபோது கண்டு கொள்ளாமல் இருந்த அவர் தரைப் படை ,கப்பல் படை, விமானப் படை மூன்றும் பிரபாகரனுக்கு இருந்த போது வயிற்றெரிச்சல் பட்ட இவர் ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் களம் நின்ற காலத்தில் கண்டு கொள்ளாதவர்.

உலகம் பயன்படுத்தும் எல்லா



ஆயுதங்களையும் பயன்படுத்திப் போரிட்டு நின்ற காலத்தில் அதை ஒரு பொருட்டாகக் கருதாதவராவார்.

நான்காவது கட்ட ஈழப் போர் என்பது 2006-2009 கால கட்டத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவினால் நடத்தப்பட்ட இரத்த வெறியாட்டம் இன்றைக்கு டெசோவை உயிர்த்தெழ வைத்திருக்கும் கருணாநிதி அன்று தமிழன் சாகாமல் இருக்கச் செய்த காரியம் என்ன?

தமிழனுக்கு எதிராகப் பேசினார். தமிழீழக் கொள்கைக்குத் துரோகம் இழைத்தார். இலங்கை அரசோடு இணைந்து நாசகாரச் செயல்களுக்கு உடந்தையாக இருந்த மன்மோகன் – சோனியா கூட்டத்துக்கு ஆதரவாக இருந்தார். இந்தப் பாவத்துக்கு கருணாநிதியால் பரிகாரம் காணவே முடியாது. தமிழர்கள் கருணாநிதியின் டெசோவை சீரியஸாக எடுத்துக் கொள்ளவே இல்லை. அவர் ஆண்டுக்கு ஒருமுறை கதை வசனம் எழுதும் படங்களைப் போலவே ப்ளாப் ஆகும் படங்களில் இதுவும் ஒன்று எனவும் அவர் குறிப்பிட்டார்.


(அ-7)



மத்திய பிரதேச மாநில விவசாயிகளுக்கு கோதுமை பைகள் கிடைக்காததை கண்டித்து டில்லி பாராளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் மற்றும் மத்திய பிரதேச பா.ஜ. எம்.பிக்களைப் படத்தில் காணலாம்.

# ரஜினிகாந்த், ஜெயலலிதா வீடுகள் இருக்கும் போயஸ் தோட்டத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்





தமிழ்நாடு சென்னையில் போயஸ் தோட்டத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக வந்த மின்னஞ்சல் மிரட்டலால் பொலிஸார் உஷார் படுத்தப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு மகாராஷ்டிராவில் இருந்து இந்தத் தகவல் வந்ததாக சென்னை சிறப்புப் பாதுகாப்பு பிரிவு அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டது.

சென்னை போயஸ் தோட்டம், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திரிவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் ஆகியவற்றில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக மின்னஞ்சலில் மிரட்டல் விடப்பட்டிருந்தது.

இதையடுத்து பொலிஸார் உஷார்படுத்தப்பட்டனர். பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலமாக செய்யப்பட்டுள்ளன.

போயஸ் தோட்டத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா, சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த் போன்ற பிரபலங்கள் வசிக்கின்றனர் ஏன்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(அ-7)




# இந்தியா, மலேசியா நாடுகளிடையே இரட்டை வரிவிதிப்பு ஒப்பந்தம்

இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்தியா, மலேசியா இடையே இரட்டை வரி தவிர்ப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் இந்திய பிரதிநிதி விஜய் கோகலேயும், மலேசிய தரப்பில் நிதித்துறை பொதுச் செயலர் டாக்டர் வான் அப்துல் அஜீஸ் வான் அப்துல்லாவும் கையெழுத்திட்டனர்.

ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்: இரு நாட்டு நிறுவனங்களும் தொழில் மூலம் ஈட்டும் இலாபத்துக்கு இரு நாடுகளிலும் வரி செலுத்துவதைத் தவிர்க்க இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும். வரி செலுத்தாமல் தவிர்ப்பதையும் இதன் மூலம் கண்காணிக்க முடியும்.

அத்துடன் வரி விதிப்பு அளவைக் குறைப்பதற்கும் இந்த ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் மூலம் இரு நாடுகளிடையிலான வர்த்தகம் மேம்படுவதோடு முதலீடுகள் அதிகரிக்கவும் வழி ஏற்பட்டுள்ளது. சமூக கலாசார பரிவர்த்தனைகளுக்கும் இது வகைசெய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-7)

# சென்னை விமான நிலையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை விமான நிலையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதால் 7 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சென்னை விமான நிலைய உள்நாட்டு பன்னாட்டு முனையங்கள் மற்றும் விமான நிலையம் எதிரே உள்ள மேம்பாலம், கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆகியவற்றில் வெடிகுண்டுகள் வைத்து வரும் 12 ஆம் திகதிக்குள் வெடிக்க செய்வோம் என்று கல்பாக்கத்தில் உள்ள இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மைய இயக்குநருக்கு ஒரு மர்ம மிரட்டல் கடிதம் வந்துள்ளது.

இதையடுத்து நேற்று முன்தினம் இரவு முதல் சென்னை விமான நிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே இங்கு 4 அடுக்கு பாதுகாக்கு அமுலில் உள்ளது. அது 7 அடுக்காக உயர்த்தப்படுகிறது. மத்திய தொழில் பாதுகாப்பு படையினரும் விமான நிலைய பொலிஸாரும் தனித்தனியே இந்த பாதுகாப்பு பணிகளில் தீவிரமாக ஈடுபடுகின்றனர். மோப்ப நாய்களுடன் வெடிகுண்டு நிபுணர்களும் தொடர் சோதனை நடத்தி வருகின்றனர். குறிப்பாக கார் பார்க்கிங், போர்ட்டி கோ பகுதிகள் தீவிர கண்காணிப்பில் உள்ளது. விமான நிலையத்துக்கு வரும் வாகனங்கள் அனைத்தும் நுழைவு வாசலிலேயே நிறுத்தி சோதனைக்கு பின்னரே உள்ளே அனுமதிக்கின்றனர். தேவையில்லாமல் வாகனங்கள் உள்ளே நிறுத்துவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது. இந்நிலைமை நாளை மறுதினம் வரை நீடிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

(அ-7)

சுதந்திரமான மனிதன் என்றால் தான் சிந்தித்ததை செய்து முடிக்கும் வலிமையுடையவன் என்று பொருள். -வால்ட்டேர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அரசியல் கலவாத அரச நிர்வாகம் தேவை

யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கு அதிரடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றம் திருமதி இமெல்டா சுகுமாருக்கு திருப்தியாக இருக்கும் என்று கூறி விடமுடியாது.

அப்படியானால் இடமாற்றத்திற்குள் அரசியல் காரணமும் உண்டென்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

யாழ். அரச அதிபராக இருந்த கே.கணேஷ் அவர்கள் ஓய்வுபெற்றுச் செல்ல அவரின் இடத்திற்கு திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபருக்கு இலங்கையின் எந்த மாவட்டங்களிலும் இல்லாத கௌரவமும் தனி மதிப்பும் உண்டு.

வட பகுதிக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் யாழ்ப்பாணத்திற்கும் வருகை தருவார்கள்.

இலங்கைக்கான அவர்களின் விஜயம் முழுமை பெறவேண்டுமாயின் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வது கட்டாயமானதாகும். இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு வருபவர்கள் யாழ்ப்பாண அரச அதிபரை சந்திப்பார்கள்.

அந்த சந்திப்பையும் யாழ். அரச அதிபரிடம் இருந்து பெறப்பட்ட தரவுகளையும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உயர்ந்த பெறுமதியுடன் நோக்குவது உண்டு.

இதன் காரணமாக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் பதவி இலங்கையின் வேறெந்த மாவட்டத்திற்கும் இல்லாத மதிப்பைக் கொண்டுள்ளது.

இதற்கு மேலாக, உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்கள் வழங்குகின்ற முக்கியத்துவம் காரணமாகவும் யாழ். மாவட்ட அரச அதிபர் பதவி செல்வாக்குடையதாயிற்று.

ö ' > 'அரச அதிபர்' என்றால் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபராக இருந்தாக வேண்டும் என்ற நினைப்பு இலங்கை நிர்வாக சேவையில் இருப்பவர்களிடம் நிலைபேறடைந்தது.

எதுவாயினும் யாழ். அரச அதிபராக இருந்த கே.கணேஷ், அதனைத் தொடர்ந்து வருகை தந்த திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோருக்கு இடையில் ஆரோக்கியமான உறவு நிலை இருக்கவில்லை என்பதை இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

இவர்கள் இருவருக்கும் இடையில் ஆரோக்கியமான உறவு இருந்திருக்குமாயின் திருமதி இமெல்டா சுகுமார் அவர்களின் காலத்தில் இன்னும் அதிகமான நன்மைகளை தமிழ் மக்கள் பெற்றிருக்க முடியும்.

ஒரு பாடசாலையில் இருந்த அதிபரை வந்த அதிபர் விமர்சிக்கும் சின்னத்தனங்களால் எங்கள் பாடசாலைத் தரங்கள் எவ்வாறு வீழ்ச்சி கண்டதோ அதுபோன்றதொரு நிலை யாழ். மாவட்ட செயலகத்திலும் ஏற்பட்டிருந்தது.

யாழ். அரச அதிபராக இருந்த கே.கணேஷ் அவர்களுக்கு யாழ்ப்பாண மக்கள் ஒன்று சேர்ந்து மிகச் சிறப்பான முறையில் பாராட்டு விழா நடத்தியபோது, அதில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள் கலந்துகொள்ளவில்லை. அதுமட்டுமல்ல, யாழ். மாவட்டத்திற்கு உட்பட்ட முக்கிய பிரதேச செயலர்களும் அந்தப் பாராட்டு விழாவில் கலந்து கொள்ளவில்லை என்பதைப் பார்த்தபோது, சீ... இப்படியுமொரு கோழைத்தனமா என்று பலர் நினைத்ததுண்டு.

ஐயாவின் ஆள், அம்மாவின் ஆள் என்ற பிரிப்பு யாழ். மாவட்ட செயலகத்தைப் படாப்பாடுபடுத்தியதையும் மறந்துவிடக் கூடாது.

இதை இவ்விடத்தில் குறிப்பிடுவதன் நோக்கம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்ற புதிய அரச அதிபரின் நிர்வாகத்திலும் அம்மாவின் ஆள் ஐயாவின் ஆள் என்ற நிலைமை அறவே இருக்கக் கூடாது என்பதற்காகவே.

இதுதவிர யாழ். மாவட்ட செயலகத்தின் முதலாவது பெண் அரச அதிபர் என்ற பெருமையோடு யாழ்ப்பாண மக்களுக்கும் குறிப்பாக பெண்களுக்கும் கலாசாரக் கட்டுக்கோப்புக்குமாக துணிந்து பணி புரிந்த யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை யாழ்ப்பாண மக்கள் நிச்சயம் பாராட்டுவர்.

# மக்கள் விரும்பினால் அரசியலுக்கு வருவேன்

## மேர்வின் சில்வாவின் மகன் ஆசை

தற்போது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பில் தான் இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும் இருப்பினும் பொதுமக்களிடம் இருந்து வேண்டுகோள் ஏதும் விடுக்கப்படுமானால் அதனைத் தான் கவனத்திற் கொள்வேன் எனவும் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வா தெரிவித்துள்ளார்.

சமூக சேவைகளிலும் வர்த்தக நடவடிக்கைகளிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ள நான், அரசியலில் ஈடுபடுவது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை என அவர் கூறினார்.

பொது மக்களிடம் இருந்து வேண்டுகோள் ஏதும் விடுக்கப்படுமானால் அதனைத் தான் கவனத்திற்கொண்டு தனது தந்தையினதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினதும் முழு ஆசீர்வாதங்களுடன் அரசியலில் ஈடுபடுவேன் எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

மக்களின் நலன் கருதி சமூக சேவைகளிலும் தொண்டுப் பணிகளிலும் நான் ஈடுபட்டு வருகின்றேன். இருப்பினும் மக்கள் சக்தியை நான் உறுதியாக நம்புகின்றேன் என அவர் கூறினார். (அ-2)

## தப்பிய கைதிக்கு சிறைத் தண்டனை

(யாழ்ப்பாணம்)

பலாலி பண்ணையில் சிறைச்சாலை பாதுகாவலர்களின் பாதுகாப்பில் இருந்து தப்பியோடிய கைதிக்கு யாழ். நீதிமன்றம் 6 மாத சிறைத்தண்டனை விதித்துள்ளது.

6 வருடகாலமாக மஹரகம சிறைச்சாலையில் இருந்து பலாலி படைத்தலைமையகத்திற்கு வேலையாளாக அனுப்பப்பட்ட தென் பகுதியைச் சேர்ந்தவரான குறித்த நபர், கடந்த வருடம் இறுதிப் பகுதியில் வேலை செய்து கொண்டிருக்கும்போது தப்பித்துள்ளார்.

தப்பிய இவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதவான் மா.கணேசராஜா குறித்த நபருக்கு 6 மாத சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார். (எ-4)

## சேற்றில் புதையுண்ட நபர் உயிரிழப்பு

தாமரைக் குளமொன்றில் நீராடியவர் சேற்றில் புதையுண்டு உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் கச்சாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் மீசாலை மேற்கு மீசாலையைச் சேர்ந்த கைலாசப்பிள்ளை சிவகுமார் (வயது-32) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். கச்சாய் வீதி கொடிகாமத்தில் அமைந்துள்ள தாமரைக் குளமான கோண்டாமூலை என்ற தாமரைக்குளத்தில் குறித்த நபர் நீராடச் சென்றுள்ளார். குறித்த குளம் சேறும் சகதியுமாகக் காணப்பட்டமையால் சேற்றில் புதையுண்டு இறந்துள்ளார். சடலம் அயலர்களால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த குளத்தில் குளிக்கச்சென்ற சிறுவன் ஒருவன் சேற்றில் புதையுண்டு ஏற்கெனவே உயிரிழந்ததாக தெரியவருகிறது. (அ-4)

## நூலக வலுவூட்டல் நிகழ்வு இன்று

கோண்டாவில் பொது நூலகத்தினரால் நூலக வலுவூட்டல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.15 மணிக்கு கோண்டாவில் பொது நூலக மண்டபத்தில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் தா.தியாகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவத்தமிழ் வித்தகர் சி.மகாலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வின்போது இன்றைய காலத்தில் நமது பண்பாடு நம்மிடையே காணப்படுகின்றதா? என்னும் தலைப்பில் யாழ். சின்மயாமிஷன் ஜாக்ரத சைதன்ய சுவாமிஜி கருத்துரை வழங்கவுள்ளார். (அ-7)

## மலேரியா நோயில் இருந்து மக்களைக்காக்க உடை தயார்

மலேரியா காய்ச்சலுக்கு உலகில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 6 1/2 இலட்சம் பேர் வரையில் பலியாகின்றனர். மலேரியா காய்ச்சல் பரவுவதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தும் அதை கட்டுப்படுத்த இயலவில்லை. மலேரியாவை பரப்பும் கொசுக்களை ஒழிப்பது என்பதும் பெரும் சவாலான விடயமாக இருந்து வருகின்றது.

இந்த நிலையில் மலேரியாவை பரப்பும் கொசுக்கடியில் இருந்து தப்ப என்னென்ன செய்யலாம் என்று ஆய்வு நடந்து வருகின்றது. ஆபிரிக்க நாட்டை சேர்ந்த ஒரு ஆடை தயாரிப்பு நிறுவனமும் விஞ்ஞானிகள் குழுவும் சேர்ந்து புதிய வகை நவீன ஆடை ஒன்றை தயாரித்துள்ளனர்.

இந்த நவீன ஆடை சமீபத்தில் நடந்த உடை கண்காட்சியில் இடம்பெற்றது. இந்த ஆடை மலேரியா தாக்குதலில் இருந்து மக்களை காப்பாற்றும் என்ற தகவலால் பார்வையாளர்கள் மத்தியில் அதிக வரவேற்பை பெற்றது.

வழக்கமாக நாம் அணியும் உடையை விட்டு இந்த நவீன உடை 3 மடங்கு பாதுகாப்பு கொண்டது. மலேரியா பரப்பும் கொசுக்களால் இந்த உடைக்குள் ஊடுருவி கடிக்க இயலாது. 6 மாதம் வரை இந்த நவீன உடையை பயன்படுத்த முடியும். இந்த உடை விரைவில் உலகம் முழுவதும் விற்பனைக்கு வரவுள்ளது. (அ-2)




இன்ப வாழ்க்கை என்பது எல்லோராலும் பெரிதும் விரும்பப்படுவது. அதிலும் இந்திரனுடைய இன்ப வாழ்க்கையே மேலான இன்பம் என்ற கருத்து பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வின்பம் புரந்தராதி இன்பம் எனவும் பேசப்படுகிறது. இந்திரன் முதலிய தேவர்கள் அனுபவிக்கும் இன்பத்தை வெறுப்பவரும் இருந்துள்ளார். அவர் மணிவாசகர் ஆவார். சமய குரவர்களில் மணிவாசகர் வாழ்வியல் வேறுபட்டது. இறைவன் குருவடிவாக வந்து அவரை பக்தி நிலைக்கு ஆளாக்கினார். குருந்த மர நிழலில் குருவடிவாக வந்து மணிவாசகருக்கு நயன தீட்சையும் திருவடி தீட்சையும் கொடுத்தமை அவரைப் பெரிதும் மாற்றிவிட்டது. உண்மையான இன்பவாழ்வை அவர் உணர்ந்து கொண்டார். ஆனால் இறைவனைப் பிரிந்த பின்பு அந்தப் பக்தியனுபவத்தை மறந்துவிட்டார். மீண்டும் உலகியல் வாழ்வுக்குத் திரும்பிவிட்டார்.

இத்திருப்பம் அவருடைய புலனடக்கக் குறைவால் ஏற்பட்டது. ஆனால் மீண்டும் இறைவனால் பெற்ற இன்ப நிலையைப் பற்றிய எண்ணம் ஏற்பட்டபோது இறைவனிடம் வேண்டுதல் செய்து பாடல்கள் பாடுகிறார்.

ஞானசாரியனாக வந்த இறைவனிடம் தன்னிலையை எடுத்துக்கூறுகிறார். என்னுடைய பிரானே! ஏகனே! ஞானசாரியனே நான் உலகத்தோர் பெரிதும் விரும்பும் இந்திரன் முதலிய தேவர்களின் பதவிக்குரிய இன்பங்களை விரும்பவில்லை. உன்னுடைய இரண்டு அழகிய திருவடிகளை விட எனக்கு வேறு பற்றுக்கோடு எதுவுமே இல்லை. இவ்வாறு துணையற்று நிற்கும் நிலையில் அவர் இத்துன்ப நிலையிலிருந்து மீள்வதற்கு வழிபாட்டையே செய்வதாகக் கூறுகிறார். தன்னுடைய உள்ளம் விரிந்து நெகிழ்ந்து நிற்கிறார். இறுகிக் கிடந்த உள்ளத்தை இறைவழிபாடு செய்வதன்மூலம் இளக வைக்கலாம் என்பதே அவருடைய அனுபவமாகும். இன்னும் குவித்த கைகளைத் தலைமேல் வைத்து வழிபாடு செய்கிறார். கண்களிலிருந்து ஆறாகக் கண்ணீர் பெருக நிற்கிறார். இத்தகைய நிலையைக்கூட இறையருளால்தான் பெறமுடியும் என்பது அவருடைய நம்பிக்கை.

இறைவனை வணங்கும்போது அகம் நெகிழ்ந்து இறைஞ்சி நிற்கும் போது உடல் நடுங்கும். இந்த அனுபவத்தை மணிவாசகர் முன்னர் அனுபவித்து உள்ளார். அதையே மீண்டும் வேண்டிநிற்கிறார்.

குஞ்சி அஞ்சலிக்கண் ஆக எனப் பாடலிலே குறிப்பிட்டுள்ளார். குஞ்சி என்பது ஆண்களின் தலைமயிரைக் குறிக்கும் எனப் பிங்கலந்தை நிகண்டு என்னும் நூல் பதிவு செய்துள்ளது. எனினும் குஞ்சியென்பது நீண்ட தலைமுடியையே குறிக்கும். நாலடியார் பாடல் ஒன்று குஞ்சி பற்றிக் குறிப்பிட்டுள்ளது. அப்பாடலில் குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

அழகும் அழகல்ல எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கொடுந்தானையும் மஞ்சளும் பெண்களுக்குரியவை. எனவே குஞ்சியென்பது நீண்ட தலைமுடி எனப் பொருள்கொள்வதே பொருத்தமாகும். அஞ்சலி என்பது சிறப்பாக இரண்டு கையும் பதாகையாய் அகமொன்றுவது எனச் சிலப்பதிகாரத்திற்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லார் விளக்கம் தந்துள்ளார். வழிபாடு செய்யும் தோற்றம் எல்லோரையும் பக்தி நிலைக்கு அழைத்துச்செல்லும். இன்று வரையும் இந்நிலை தொடர்கிறது.

*போகம் வேண்டி வேண்டிலேன்*
*புரந்தராதி இன்பமும்*
*ஏக நின் கழலிணைய லாதிலே*
*னென் எம்பிரான்*
*ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி*
*அஞ்சலிக்கணே*
*ஆக என்கை கண்கள் தாரை ஆற*
*தாக ஐயனே*

# போர்க்களமாக மாறுமா கிழக்கு தேர்தல் களம்?

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணசபை ஜூன் மாதமளவில் கலைப்பது உறுதியாகிவிட்ட நிலையில் கிழக்குத் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. தமிழத்தேசியக் கூட்டமைப்பு கிழக்குத் தேர்தலில் குதிப்பதாலும் முஸ்லிம் காங்கிரஸ் அர்சுடன் இணைந்து போட்டியிடவிருப்பதாலும் கிழக்குத் தேர்தல்களம் போர்களமாகவே காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி அண்மையில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களைச் சந்தித்து சபை ஜுன் மாதம் கலைக்கப்படும் என உறுதியாக அறிவித்த மறுகணமே தத்தமது பிரதேசங்களுக்கு விரைந்த மாகாணசபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் முதல் தேர்தல் பணிகளை முடுக்கி விட்டுள்ளனர்.

மக்கள் சந்திப்புகளில் ஈடுபடத் தொடங்கியிருக்கும் இவர்கள் மீண்டும் மாகாண சபைக்குத் தெரிவாவதற்குரிய காய் நகீர்த்தல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர் என தெரிய வருகிறது.

கிழக்கு மாகாண சபையில் அரச தரப்பில் தற்போது அங்கம் வகிக்கும் சிலருக்கு மீண்டும் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்ற அறிவுறுத்தல் சம்பந்தப்பட்டோருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதால் அவ்வாறானவர்கள் மாற்றுக் கட்சிகளுடன் பேரப்பேச்சுகளில் இரகசியமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அதேவேளை, கிழக்கு மாகாண முதலமைச்சர் தமிழரா அல்லது முஸ்லிமா என்பது இதுவரை அரசால் உறுதிப்படுத்தப்படாத நிலையில் இப்பதவியில் நாட்டம் கொண்ட சிலர் அரச உயர்மட்டங்களைச் சந்தித்துப் பேசுவதிலும் தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

முஸ்லிம் அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் தனது கட்சிக்கே முதலமைச்சர் பதவியைத் தர வேண்டும் என்று ஜனாதிபதியை நேரடியாகத் சந்தித்துக் கேட்டுக் கொண்டுள்ளார். இதன்போது முதலமைச்சர் பதவி மீது நாட்டம் கொண்ட அக்கட்சியின் முன்னாள் அமைச்சரும் உடன் இருந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க கிழக்கத் தேர்தலில் பல இளம் புதிய முகங்களைக் களமிறக்க அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன. முஸ்லிம் கட்சியொன்று தனது கட்சிச் செயலாளர் நாயகத்தைக் களமிறக்க ஆலோசித்து வரும் அதேநேரம் மாற்றுக் கட்சியைச் சேர்ந்த ஒருவரைத் தமது பக்கம் இழுத்து தேர்தல் களத்தில் நிறுத்தவும் இரகசியப் பேச்சுகளில் ஈடுபட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## வவுனியாவில் ஆதரவற்றோர் இல்லங்களுக்கு நிதியுதவி

(வவுனியா)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வவுனியா மாவட்டத்தில் செயற்படுகின்ற 3 ஆதரவற்றோர் இல்லங்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது வவுனியா எல்லப்பர் மருதங்குளத்தில் அமைந்துள்ள சிவன் முதியோர் இல்லம் மற்றும் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரர் அருளகத்திற்கு ஒரு இலட்சம் ரூபாவும் வேப்பங்குளம் இந்து அன்பகத்திற்கு 60 ஆயிரம் ரூபாவும் பிரதேச செயலாளர் மூலமாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கியுள்ளது. (அ-2)

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்

### கிழக்கு சர்வமத ஒன்றியம் வலியுறுத்து

(மட்டக்களப்பு)

இலங்கைத் தேசத்தை மீளக்கட்டியெழுப்ப முன்னோக்கிச் செல்வோம் என்ற தொனிப் பொருளில் சர்வமத கலந்துரையாடல் வவுனியா நகர கிராமசேவகர் அலுவலக மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

நல்லிணக்கத்திற்கான வடக்கு, கிழக்கு சர்வமத ஒன்றியத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மதத் தலைவர்கள் கருத்து தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கத்தினால் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். பயங்கரவாதத்தை தோற்கடித்ததாக கூறிய அரசாங்கம் மதத்தலங்களையும் வழிபாட்டு இடங்களையும் அழித்து பயங்கரவாதத்தை வளர்த்து செல்கின்றது. வடக்கு கிழக்கில் நான்கு மதத்தலைவர்களும் ஒன்றிணைந்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றனர். (அ-2)

# டெங்கு ஒழிப்பு பிரச்சினைகளுக்கு அமைச்சரவை மூலம் தீர்வு காணப்படும்

### அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின் போது எதிர்கொள்ள நேரும் பிரச்சினைகளுக்கு அமைச்சரவை மூலம் தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

டெங்கு ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி அமர்வில் நேற்று முன்தினம் இது பற்றி தெரிவித்த அமைச்சர் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எழுத்து மூலம் ஜனாதிபதி செயலணிக்கு அனுப்பி வைக்க முடியும் எனவும் ஜனாதிபதியுடனும் அமைச்சரவையிலும் கலந்துரையாடி இவற்றுக்கு தீர்வு பெற முடியும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தற்போதைய காலநிலை காரணமாக மீண்டும் நுளம்பு அதிகரிப்பு இடம்பெற்றுள்ளதையடுத்து எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை ஒரு வார காலப்பகுதியை நுளம்பு ஒழிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தவுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், அரச, தனியார் நிறுவனங்கள் உட்பட இதற்குத் தமது பூரண ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் தொடரும் மோசமான காலநிலையினால் மீண்டும் டெங்கு பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. எனினும் டெங்கு நோய்த் தொற்று அதிகரித்துள்ள போதிலும் இதனால் ஏற்படும் மரணங்களைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது.

ஜனாதிபதி செயலணி மற்றும் சுகாதார அமைச்சு மேற்கொண்ட காத்திரமான நடவடிக்கைகள் மூலம் மரணங்களை குறைப்பதற்கு முடிந்துள்ளது.

நுளம்பு அதிகரித்த பின்போ அல்லது மழைக்காலம் வந்த பின்போ டெங்கு ஒழிப்பு குறித்து யோசிப்பதைவிட எல்லாக் காலங்களிலும் இது விடயத்தில் பொதுமக்கள் விழிப்பாக செயற்படுவது அவசியம். இது விடயத்தில் பலமுறைப்பாடுகளும் அமைச்சுக்கு கிடைத்துள்ளன.

சகல நிறுவனங்களிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கென ஒரு அதிகாரியை நியமிக்கவும் அதற்கென ஒரு பிரிவை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அதிகாரிகளைக் கேட்டுக் கொண்ட அமைச்சர் பாடசாலைகளில் முக்கிய கவனம் செலுத்துவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (அ-2)

# கொரியாவில் உயிரிழந்த மூவருக்கு நட்டஈடு பெறுவதற்கு முயற்சி

தென்கொரிய விடுதி விபத்தில் உயிரிழந்த இலங்கையர்களின் குடும்பங்களுக்கு அவர்கள் பணியாற்றிய நிறுவனங்களிடமிருந்து நஷ்டஈடு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் அமால் சேனாலங்காதிகார தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவின் சியோல் நகரிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த சனிக்கிழமை தென் கொரியாவின் பூசான் நகரிலுள்ள கரோக்கி விடுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் மூன்று இலங்கையர்கள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் சடலங்களை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கான சகல ஏற்பாடுகளும் தென்கொரியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை இவர்களின் சடலங்களை நாட்டுக்கு அனுப்பப்படுமென வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தீ விபத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை அந்நாட்டுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# சரத்தின் சம்பந்திக்கு நவம்பர் 5 இல் வழக்கு

வங்கியில் சட்டவிரோதமான முறையில் பணம் சேகரித்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவின் மருமகனான தனுன திலகரத்னவின் தாயார் அசோகா திலகரத்னவுக்கு எதிராக தொரடப்பட்ட வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி கொழு ம்பு உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

526 அமெரிக்க டொலர்கள் 100 ஸ்ரேலிங் பவுண்கள் மற்றும் 15 மில்லியன் ரூபா பணத்தை திம்பிரிகஸ்பாய பகுதியில் அமைந்துள்ள வங்கியொன்றில் சட்டவிரோதமான முறையில் வைப்பிலிட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அசோகா திலகரத்னவுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையின் போது சாட்சிகளை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு உயர் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ உத்தரவிட்டார். (அ-2-7)

# விபச்சாரத்தில் ஈடுபட்ட நால்வர் நாடு கடத்தல்

(கொழும்பு)

விபசாரத்தில் ஈடுபட்ட நான்கு வெளிநாட்டு பெண்களையும் இத்தொழிலை நடத்தி வந்த வெளிநாட்டு ஆண் ஒருவரையும் உடனடியாக நாடு கடந்த குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

உக்ரைன் நாட்டு பெண்கள் நால்வரும் லிதுவேனியா நாட்டின் பிரஜை ஒருவருமே இவ்வாறு நாடு கடத்தப்பட இருப்பதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்குக் கிடைத்த தகவலின் பேரில் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேராவின் பணிப்பின் பேரில் விசேட புலனாய்வுப் பிரிவினர் இந்த தேடுதலை மேற்கொண்டனர்.

கடந்த 08 ஆம் திகதி இரவு நடத்தப்பட்ட தேடுதலின் போது வெள்ளவத்தை பகுதியிலுள்ள விடுதி ஒன்றிலிருந்து இவர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் பெண்கள் பம்பலப்பிட்டி பகுதியில் வீடொன்றில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். விலைமாதர் தொழிலுக்காக இவர்கள் வெள்ளவத்தை பகுதிக்கு வந்துள்ளனர். இந்தத் தொழிலை சர்ஜி என்ற பெயருடைய லிதுவேனியப் பிரஜையே கடந்த எட்டு வருடங்களாக மேற்கொண்டு வந்துள்ளதாக பூர்வாங்க விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த விலை மாதர் தொழில் சிலரின் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. (அ-2)

# சிறிலங்கா பிரிமியர் லீக் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு




எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் இடம்பெறவுள்ள சிறிலங்கா பிறிமியர் லீக் (எஸ்.எல்.பி.எல்) தொடருக்கான உத்தியோகபூர்வ அறிவித்தலை இலங்கைக் கிரிக்கெட்சபை வெளியிட்டுள்ளது. முதன்முறையாக இடம்பெறவுள்ள இத்தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இடம்பெறவுள்ள போட்டிகள் அனைத்தும் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்திலும், பல்லேகல சர்வதேச விளையாட்டு மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. மேல் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு பஸ்னாகிர பியர்ஸ், மத்திய மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு கந்துரட்ட கைற்ஸ், கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு நகெனஹிர நாகாஸ், தென் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு றுகுண றைனோஸ், வடக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு உத்தர ஒரைசைஸ், ஊவா மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு ஊவா யுனிக்கோர்ண்ஸ் மற்றும் வடமேல் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு வயம்ப வோல்வ்ஸ் ஆகிய அணிகள் இத்தொடரில் பங்குபற்ற உள்ளன.

ஒவ்வொரு அணிக்குமான நட்சத்திர வீரராக ஒரு வீரர் தெரிவு செய்யப்படவுள்ளார். இந்த வீரர் இலங்கையின் தேசிய அணியில் இருந்து தெரிவு செய்யப்படவுள்ளதோடு அவ்வணியின் முக் கிய அங்கமாக விளங்குவார்.

அத்தோடு எல்லா அணிகளுக்குமான இலட்சனைகளும் அடையாளங்களும் அவ்வவ் மாகாணங்களுக்குரிய சிறப்பு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்படுமெனவும் இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஒவ்வொரு அணியிலும் ஆகக் கூடியதாக 6 வெளி நாட்டு வீரர்கள் தெரிவு செய்யப்பட அனுமதிக் கப்படும் அதேவேளை அவர்களில் 4 பேர் மாத்திரமே விளையாடும் பதினொருவரில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

அதைத் தவிர விளையாடும் ஒவ்வொரு போட்டியிலும் இலங்கையைச் சேர்ந்த 21 வயதுக்குட்பட்ட வீரர் ஒருவரை கட்டாயமாக இணைத்துக் கொள்ள வேண்டும் எனவும் இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்தியாவின் இந்தியன் பிறிமியர் லீக் போட்டிகளின் வெற்றியை அடுத்து அதே போன்று வெளிநாட்டு வீரர்களை உள்ளடக்கிய இருபது-20 தொடரொன்றை நடத்த இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்திருந்தது. இதன்படி சிங்கப்பூரை மையமாகக் கொண்ட சமர்செட் பொழுதுபோக்கு நிறுவனத்துடன் இது தொடர்பான ஒப்பந்தத்தை இலங்கை கிரிக்கெட் சபை மேற்கொண்டிருந்தது. கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து அது தொடர்பாக ஆராய்வதற்காக விளையாட்டுத் துறை அமைச்சரால் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

அதன்படி கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஐந்து வருட கால ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டு புதிய திருத்தப்பட்ட ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டதன் பின்னரே இவ்வாண்டுக்கான போட்டிகள் பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.


**வெளிநாட்டு வீரர்களை தேடுகிறது கிரிக்கெட் சபை**

சிறிலங்கா பிறிமியர் லீக் இருபது-20 தொடருக்காக வெளிநாட்டு வீரர்களை தேடுவதற்கான பணியை இலங்கை கிரிக்கெட் சபை ஆரம்பித்துள்ளது. இதற்காக வெளிநாட்டு கிரிக்கெட் சபைகளிடம் தங்களது பேச்சுவார்த்தைகளை இலங்கை கிரிக்கெட் சபை ஆரம்பித்துள்ளது.

உலகின் முன்னணி கிரிக்கெட் வீரர்களை இத் தொடரில் பங்குபற்ற வைப்பதற்கான முயற்சிகளை இலங்கை கிரிக்கெட் சபை ஏற்கெனவே ஆரம்பித்துள்ளதாகவும் இதற்காக வெளிநாட்டு கிரிக்கெட் சபைகளிடம் ஒப்புதலையும் ஆதரவையும் இலங்கை கிரிக்கெட் சபை வேண்டி நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த இலங்கை கிரிக்கெட் சபையின் அதிகாரி ஒருவர் வெளிநாட்டு கிரிக்கெட் சபைகளிடம் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மிகப் பிரபலமான கிரிக்கெட் வீரர்களை இத் தொடரில் இடம்பெறவைக்க எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

# வோர்னர் அதிரடி: டெக்கானை வீழ்த்தி டில்லி அபார வெற்றி



ஐ.பி.எல். தொடரின் டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கெதிரான நேற்றைய போட்டியில் டில்லி டேர்டேவில்ஸ் அணி 193 ஓட்டங்கள் எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

ஐந்தாவது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடரின் டெக்கான் சார்ஜர்ஸ், டில்லி டேர்டேவில்ஸ் அணிகள் ஹைதராபாத்திலுள்ள ராஜீவ்காந்தி சர்வதேச மைதானத்தில் நேற்று மாலை மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

தொடக்க வீரராக களமிறங்கிய டானியல் ஹரிஸ் 19 ஓட்டங்களும், அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் குமார் சங்கக்கார 4 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

மற்றொரு தொடக்க வீரரான ஷிகார் தவான் 49 பந்துகளில் 9 பவுண்டரிகள், 5சிக்சர்களுடன் 84 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய கமரூன் வைற் 65 ஓட்டங்கள் எடுத்தார்.

20 ஓவர்கள் முடிவில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 4 விக்கெட் இழப்பிற்கு 187 ஓட்டங்கள் எடுத்தது.

இதனையடுத்து 188 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டில்லி டேர்டேவில்ஸ் அணி துடுப்பெடுத்தாட தொடங்கியது.

தொடக்க வீரராக களமிறங்கிய அணித் தலைவர் வீரேந்திர சேவாக் 4ஓட்டங்கள் எடுத்த நிலையில் வைற்றிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


மற்றொரு தொடக்க வீரரான டேவிட் வோர்னர் அதிரடியாக விளையாடி 54 பந்துகளில் 10 பவுண்டரிகள், 7 சிக்சர்களுடன் சதத்தைக் கடந்து 109 ஓட்டங்களுடனும், அடுத்து களமிறங்கிய நாமன் ஓஜா 64 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

டில்லி டேர்டேவில்ஸ் அணி 16.4 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 193 ஓட்டங்கள் எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக டேவிட் வோர்னர் தெரிவானார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டி:**
இரவு 8 மணிக்கு புனேயில் நடைபெறும் போட்டியில் புனே வாரியர்ஸ் எதிர் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி மோதுகின்றது.

# சென்னை திரில் வெற்றி



ஐ.பி.எல். போட்டித் தொடரின் 56-வது லீக் ஆட்டம் நேற்றிரவு ஆரம்பமாகி இன்று அதிகாலை வரை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டிராவிட் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் ஜெய்ப்பூரில் மோதின.

கடந்த ஆட்டத்தில் சென்னை அணியில் விளையாடிய டு பிளிசிஸ், சுப்பிரமணியம் பத்திரிநாத் ஆகியோர் நீக்கப்பட்டு, அவர்களுக்கு பதிலாக மைக் ஹசி, அனிருதா சிறிகாந் ஆகியோர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

ராஜஸ்தான் அணியில் ஓவைஸ் ஷா நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக பிராட் ஹொட்ஜ் சேர்க்கப்பட்டிருந்தார்.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணி முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது.

அதன்படி ராஜஸ்தான் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக அஜன்கியா ரகானேயும் ராகுல் டிராவிட்டும் களமிறங்கினர். முதல் பந்தை டிராவிட் எதிர் கொண்டார்.

களமிறங்கிய சிறிது நேரத்திலேயே மழை பெய்யத்தொடங்கியதால் ஆட்டம் பாதிக்கப்பட்டது.

மழை நின்ற பின் ஆட்டம் மீண்டும் ஆரம்பமானது.

டிராவிட் 4 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வோட்சன் 5 ஓட்டங்களுடன் வெளியேறினார். மீண்டும் மழை குறுக்கிட்டது. பின்னர் ஆட்டம் தொடர்ந்தது.

சீரான இடைவெளியில் அணியின் விக்கெட்டுகள் சரிய இறுதியில் 126 ஓட்டங்களை பெற்றது ராஜஸ்தான் அணி.

இதனையடுத்து 127 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் சென்னை அணி பதிலெடுத்தாடக் களமிறங்கியது.

முதல் ஓவரிலேயே விஜய் ஒரு ஓட்டத்துடன் வெளியேறி அதிர்ச்சி அளித்தார். அடுத்து ஹசியும் ரெய்னாவும் ஓரளவு நம்பிக்கையளித்தனர். ஆனால் ரெய்னா23 ஓட்டங்களில் வெளியேறினார். பிராவோவும் 10 ஓட்டங்களில் வெளியேறினார்.

32 பந்துகளில் 19 ஓட்டங்களை மட்டுமே எடுத்த ஹசியும் ரன் அவுட்டில் வெளியேறினார். தோனி 10 ஓட்டங்களையே எடுத்தார்.

சென்னை அணி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது.

ஆனால் மோர்கல்-அனிருதா ஜோடி சென்னை அணியை காப்பாற்றி கரை சேர்த்தது.

இருவரும் தலா 6 பந்துகளையே எதிர் கொண்டு ஆட்டமிழக்காமல் தலா 18 ஓட்டங்களைக் குவித்தனர்.

இதனால் சென்னை அணி 18.1 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 127 ஓட்டங்களை அடைந்து 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஹில்பென்ஹஸ் தேர்வானார்.

# மீண்டும் யாழ். அரச...

என்பதே எனது நோக்கமாக இருந்தது.

அரச அதிகாரிகளுக்கு இடமாற்றம் என்பது கட்டாயமானது. அதையாரும் தட்டிக்கழிக்க முடியாது. எல்லா அரச அதிகாரிகளும் இடமாற்றங்களுக்கு கட்டாயம் உட்படுவார்கள்.

யாழ்.மாவட்டத்தில் குறுகிய காலத்தில் என்னால் சிறந்த சேவையினை வழங்கக் கூடியதாக இருந்தது. எனது சேவையில் மக்கள் திருப்தியடைந்துள்ளனர் என்பதை அவர்கள் எனக்கு எழுதும் கடிதங்கள் ஊடாக அறியக் கூடியதாயிருந்தது.

நான் பெறுமதியான பொருளாக கருதுவது மக்களின் பாராட்டினையே. அவர்கள் எனக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு மிகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கட்சி பேதம் பார்க்காது சேவை செய்தேன். எல்லா அரசியல் தலைவர்களுடனும், கட்சிகளுடனும் நல்ல உறவினைப் பேணிவந்தேன். பாதுகாப்பு படைப் பிரிவினர், பொலிஸார் ஆகியோர் எனக்கு மிகவும் ஒத்துழைப்பு வழங்கினர்.

இராணுவத்தினர் எனது வேண்டுகோளுக்கு அமைவாக உயர் பாதுகாப்பு வலயங்களை விடுவித்து தந்ததோடு பொதுமக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்ற உதவினர்.

அத்தோடு பல அமைச்சுக்கள் ஊடாகவும் நிதியினைப் பெற்று அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வந்தேன். எனது வேண்டுகோளுக்கு அமைச்சுக்களும் நிதியுதவி செய்து ஒத்துழைப்பு வழங்கின.

முப்பது வருடம் அரச சேவையில் நான் இருந்துள்ளேன் மிகவும் கஷ்டமான காலகட்டத்திலும் கூட சேவை செய்துள்ளேன். யுத்த காலத்தில் முல்லைத்தீவில் அரச அதிபராக பணிபுரிந்து வந்தேன்.

யாழ்.அரச அதிபராக பணிபுரிந்த காலகட்டத்திலும் சரி முல்லைத்தீவு அரச அதிபராக பணிபுரிந்த காலத்திலும் சரி ஊடகங்கள் எனக்கு மிகவும் ஒத்துழைப்பாகவிருந்தன. பிழை நடக்குமிடத்து அதை சுட்டிக்காட்டியதோடு சரியானவற்றை செய்யும்போது பாராட்டின.

மீண்டும் யாழ்ப்பாணத்திலுள்ள மக்களுக்கு சேவை செய்ய சந்தர்ப்பம் கிடைக்கும் என நம்புகிறேன். அவ்வாறு கிடைத்தால் அது என்பெரும் பேறாக கருதுவேன்.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் வழங்கப்பட்ட இடமாற்றம் என்பதனால் காரணங்களை சரிவர அறியமுடியவில்லை. அத்தோடு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் என்னிடம் கூறினார் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளேன் என்று. ஆனால் எந்த அமைச்சின் செயலாளர் என்பது தெரியவில்லை. எங்கு இருந்தாலும் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து எனது பணியைச் செய்வேன்.

அத்தோடு தமிழ் மக்களின் நிலைமைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆலோசகராக நியமிக்கப்படவும் வாய்ப்புள்ளது. எவ்வாறு இருந்தாலும் தமிழ் மக்களுக்கு சேவை செய்ய வாய்ப்பு கிடைத்தால் போதும்.

மேலும் யாழ். அரச அதிபராக இடமாற்றம் பெற்று வரும் மட்டக்களப்பு அரச அதிபர் எஸ். அருமைநாயகம் சிறந்த முறையில் மக்களுக்கு சேவை செய்யக் கூடியவர் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# விவசாயம் செய்கிறார் ஐ.பி.எல். வீரர் - வோர்ன் வேதனை

ஐ.பி.எல். தொடரில் இருந்து நீக்கப்பட்ட கம்ரான் கான் தனது சகோதரரின் நிலத்தில் விவசாயம் செய்கிறார்.

உத்திர பிரதேசத்தில் உள்ள அசாம்கர் பகுதியைச் சேர்ந்தவர் கம்ரான் கான் (வயது 21) மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த இவரது வேகப்பந்துவீச்சு திறமையை 2009 ஆம் ஆண்டில் ராஜஸ்தான் அணியின் தலைவராக இருந்த வோர்ன் கண்டறிந்தார்.

பின் ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் அணிக்காக அறிமுகமானார். சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான போட்டியின் போது இவரது பந்துவீச்சு குறித்து சர்ச்சை எழுந்தது. பந்தை எறிவதாக நடுவர்கள் புகார் கூறினர். இம்முறை புனே அணியில் இடம் பெற்றார். ஆனால் இவரது சேவை தேவையில்லை என்று புனே அணி நிர்வாகம் திடீரென தெரிவித்தது.

கையில் ரூ.10 லட்சம் மட்டும் கொடுத்து வீட்டுக்கு அனுப்பியது. இதனால் மனம் நொந்துபோன கம்ரான் கான் அசாம் நகரில் உள்ள தனது சகோதரரின் நிலத்தில் விவசாய பணிகளை மேற்கொள்கிறார்.

இது குறித்து கம்ரான் கூறுகையில், கிரிக்கெட்டில் அறிமுகமாவதற்கு முன்பு விவசாயம்தான் செய்தேன். தற்போது காலை, மாலையில் மட்டும் பயிற்சி செய்கிறேன். மீண்டும் கிரிக்கெட்டுக்கு திரும்புவேன் என்றார்.

இது குறித்து வோர்ன் தனது டுவிட்டரில், ஐ.பி.எல். தொடரில் பங்கேற்காமல் கம்ரான் விவசாயம் செய்வதாக கேள்விப்பட்டேன். இளம் திறமை வீணடிக்கப்படுகின்றது என குறிப்பிட்டுள்ளார்.

தென்மராட்சி சாவகச்சேரி நகரில்
German Dutch, France French,
IELTS, (A1, B1, B2), சிங்களம்
ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
புதிய வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது
தொடர்புகளுக்கு: Brilliant International Studies
T.P.: 0779265447 (C-6574)

## பலாலி ஆசிரிய கலாசாலையை மூடிவிடுவதற்கு முஸ்தீபு

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார். ஆங்கிலம் மற்றும் கிறிஸ்தவ பாட கற்கை நெறிகளை வேறு கலா சாலைகளுக்கு மாற்றி அதனூடாக பலாலி ஆசிரிய கலாசாலையை மூடுவதற்கு முஸ்தீபு நடைபெறுவதாக அவர் மேலும் தெரிவித்தார். பலாலி ஆசிரியர் கலாசாலையை மூடுவதற்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளது. (ந)

## இஸட் புள்ளி வழக்கு; தீர்ப்பு ஒத்திவைப்பு

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையில் பரீட்சார்த்திகளின் இஸட் புள்ளியை கணிப்பதற்கு பிழையானது, ஏற்க முடியாதது என கூறப்படும் சூத்திரத்தை பயன்படுத்தியமைக்கு எதிரான உரிமைமீறல் மனு மீதான தீர்ப்பை உயர்நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை ஒத்திவைத்தது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் 16 பேரும் இலங்கை ஆசிரியர் சங்கத்தினரும் இணைந்து இந்த வழக்கை தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,கல்வி அமைச்சர், பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் ஆர்.ஓ. தாட்டில் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்படப்பட்டுள்ளனர். (எ-11)

## இந்தியக் குழுவின் இலங்கை விஜய...

போராடி வருகிறது. முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பா.ஜ.கவின் மிகப் பெரிய தலைவராக வந்தபோது நானும் அரசியலில் பெரிய இடத்திற்கு வரவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. எனக்கு முன்னால் பேசிய லோக்சபா எதிர்க் கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் பேசியது போல, மாநாட்டினை சிறப்பாக நடத்திட பாடுபட்ட பொன். ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட தலைவர்களை நான் பாராட்டுகிறேன்.

மேலும் இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில் சுஷ்மா சுவராஜ் தலைமையில் சென்ற பாராளுமன்ற குழு அங்கு நடந்த அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பலனாக அங்கு இலங்கை தமிழர்களுக்கு மேலும் பாதுகாப்பு கூடியுள்ளது. இதற்கு காரணமாக இருந்த சுஷ்மா சுவராஜை பாராட்டுகிறேன்.

வரும் 13 ஆம் திகதி பாராளுமன்ற இரு சபைகளும் கூடியதன் 60ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு சிறப்பு பாராளுமன்ற கூட்டம் நடக்கிறது. இதில் பா.ஜ.க பல்வேறு விடயங்கள் குறித்து விவாதிக்க உள்ளது. எத்தனை தேசியக் கட்சிகள் உருவெடுத்தாலும் பா.ஜ.கவே வலுவான ஒரு தேசியக் கட்சி. இவ்வாறு அத்வானி பேசினார்.

மாநாட்டில் நிதின் கட்காரி பேசியதாவது, சர்வதேச சந்தையில் ரூபாயின் மதிப்பு சரிந்து வருகிறது. இந்தியாவில் செய்யப்படும் முதலீடுகளும் களவாடப்படுகின்றன. இதனால் தொழில்கள் வீழ்ச்சி அடைந்து வருகிறது.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்ட போதும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. நாட்டில் பயங்கரவாதம் அதிகரித்து வருகிறது. இனி இந்த நிலை மாற போகிறது. விலைவாசி உயர்வு,குடும்ப ஆட்சி ஆகியன முடிவுக்கு வரும் காலம் வந்து விட்டது. நாட்டின் இந்த துயர நிலையை மாற்ற விரைவில் தாமரை ஆட்சி மலரும். இவ்வாறு கட்காரி நம்பிக்கை தெரிவித்துள்ளார். (எ-11)

## அனுமதிப் பத்திர...

என்று ஊடகத்துறை பதில் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த் தன தெரிவித்தார்.

இந்நிலையில், மணல் ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப்பத்திர முறையை நீக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக் கப்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர் மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின் போது மேலும் குறிப்பிட்டார். (எ-11)

## புதியவர்...

அரசாங்க அதிபர்களின் இடமாற்றங்கள் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, காலி மாவட்டங்களில் இதுவரை காலமும் கடமையாற்றிய அரசாங்க அதிபர்களுக்கே இந்த திடீர் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## நாவாந்துறை கிறிஸ்...

நேற்று கொழும்பு உயர் நீதிமன்றில் பிரதம நீதியரசரான சிராணி பண்டாரநாயக்க மற்றும் நீதியரசர்களான நிமால் காமினி அமரதுங்க, சிறிபவன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது யாழ்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளடங்கலாக இராணுவத்தினர் சார்பில் ஆஜராகியிருந்த அரச சட்டத்தரணி தனது வாதத்தை முன்வைத்தார்.

யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேராவும், இராணுவத்தினரும் மனுதாரர்கள் குறிப்பிட்டது போன்று எவ்விதமான மனித உரிமை மீறல்களிலும் ஈடுபடவில்லை என்றும் அன்றையதினம் மனுதாரர்களை வீடு வீடாகச் சென்று கைதுசெய்யவில்லை என்றும் எவர்மீதும் தாக்குதல் மேற்கொள்ளவில்லை என்றும் கைது செய்யப்பட்ட அனைவரும் பொலிஸாருக்கு தாக்குதல் நடத்தும் போதே ஒரு மைதானத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர் எனக் கூறி சத்தியக் கூற்றுக்களைதனித்தனியே சமர்ப்பித்தனர்.

அதன்பின் இடம்பெற்ற வாதப்பிரதி வாதங்களைத் தொடர்ந்து குறித்த 51 மனுக்களினையும் ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் பிரதிவாதிகளான பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அறிவித்தல் அனுப்பும் வண்ணமும் குறித்த வழக்கினை விவாதத்திற்கென நவம்பர் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள் ளது.

இவ் வழக்கில் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ராஜரட்ணம், வெலியமுனை, பி.என்.தம்பு, புவீந்திரன், றெமீடியஸ், விரான் கௌரியா, பவானி பொன்சேகா, மங்களேஸ்வரி சங்கர், கிஷாந்தினி உட்பட பல சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

மேலும் குறித்தவழக்கு தொடர்வதற்கும் நடத்திச் செல்வதற்கும் அனைத்து உதவிகளினையும் யாழ்.சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணிகளே செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-4)

## அரசாங்கத்திற்கு எதி...

கொள்கையால் ஏற்பட்ட விளைவாகும்.

இலங்கையை பொறுத்த வரையில் புதைபொருள் ஆராய்ச்சிகளை புதைபொருள் திணைக்களமே மேற்கொள்கின்றது. எனினும் அரசாங்கமும் தற்போது துட்டகைமுனு மன்னனின் பொருட்கள் இருப்பதாக கூறி, அநுராதபுரப் பகுதியில் புதைபொருள் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதன்காரணமாக பொது மக்கள் தாமே தமக்கு புதைகுழிகளை தோண்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் பொது மக்களின் பெருமளவு வைப்புப் பணத்தைக் கொண்டுள்ள தேசிய சேமிப்பு வங்கியிலும் அரசாங்கம் கொள்ளையில் ஈடுபட்டுள்ளது.

என்.எப்.சி நிறுவனத்தின் குறைந்த விலையிலான பங்குகளை அரச வங்கியான தேசிய சேமிப்பு வங்கி அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்துள்ளது. இதன்மூலம் பொது மக்களின் பெருமளவு பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இதனை திறைசேரி செயலாளர் தற்போது தடுத்து நிறுத்தியுள்ளார். எனினும் இக்கொள்ளைக்கு பொறுப்பான தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் பதவி விலகவேண்டும். வங்கியின் பணிப்பாளர்சபையும்கலைக்கப்படவேண்டும்என ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிலையில் மக்களின் சுமைகளை குறைக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதில் எவ்வித பயனும் இல்லை, பொது எதிர்க்கட்சிகளை ஒன்று திரட்டி மக்களை தெளிவு படுத்துவதன் மூலமே அரசாங்கத்தின் பொய்யான அபிவிருத்தித்திட்டங்களை வெளிக்கொண்டுவர முடியுமென ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். (எ-11)

## தூதுவர் பதவியை...

வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, வெனிசுலாவில் விரைவில் திறக்கப்படவுள்ள இலங்கைக்கான புதிய தூதரகத்தில் தன்னை நியமிக்குமாறு தமரா குணநாயகம் கோரிக்கை விடுத்துள்ளதாக இவ் வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

கியூபாவிற்கான இலங்தைத் தூதுவராக தமரா குணநாயகத்தை பொறுபேற்குமாறு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிவுறுத்திய போது அதனைத் தான் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என அவர் கூறியிருந்ததுடன், வெளிவிவகார அமைச்சுக்கு எதிராக கடும் விமர்சனங்களையும் முன் வைத்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த கூட்டத் தொடரில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப் பட்டதை அடுத்து இராஜதந்திரப் பணிகளில் வெளிவிவகார அமைச்சு மாற்றங் களை ஏற் படுத்தி வருகின்றமை தெரிந்ததே. (எ-11)

## சோதிடரின் ஆலோ...

திலங்க சுமதிபால, திகாம்பரம், பிரபா கணேசன் ஆகியோருக்கு இந்தப் பிரதியமைச்சுப் பொறுப்புக்களை ஒப்படைப்பது குறித்து அரச தரப்பில் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

இம்முறை அமைச்சரவை மாற்றத்தின் போது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு முன்னுரிமையளிப்பதற்குஅரசுத்தலைமை முடிபெடுத்துள்ளது.

அத்துடன், பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சுப் பதவிகளில் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என பல்வேறு தரப்பில் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறப்பட்ட போதிலும், அந்தத் துறைகளில் உடனடி மாற்றங்களைச் செய்வதில்லையென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

சோதிடர்களின் ஆலோசனைப்படியே இந்த அமைச்சரவை மாற்றத்தை அடுத்த மாதம் நடுப்பகுதியில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அரச உயர் மட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. (எ-11)

விசுவமடுவில் புதியதோர் உதயம்....
அபி கனி புத்தக நிலையம்
பாடசாலை மாணவர்கள், பட்டதாரிகளின் தேவைகளை உணர்ந்து சேவைகள் ஆற்ற முன்வந்துள்ளோம். தரம் 1 - A/L வரைக்குமான சகல விதமான பாடப் பயிற்சி புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், விண்ணப்பப் படிவங்கள் அனைத்துக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.
அபி கனி புத்தக நிலையம்
சுண்டிக்குளம் சந்தி,
முல்லை வீதி, விசுவமடு.
தொலைபேசி : 0775144093
என்றும் நாம் உங்களோடு
(C-6562)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
சனி, ஞாயிறு புதிய பிரிவு
12.05.2012 சனிக்கிழமை
பிரிவு 1 : காலை 9.00 – 10.00
பிரிவு 2 : மாலை 3.00 – 4.00
காலம் : 3 மாதம் கட்டணம் : ரூபா 3000 மட்டும்
அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர், A/L எடுத்தோர், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் வகுப்பில் கலந்துகொள்ளாம்.
பயிற்சி பற்றி அறிந்துகொள்ள முதல் வகுப்பில் இலவசமாக கலந்துகொள்ளலாம்.
12.05.2012 சனிக்கிழமை பதிவுசெய்வோருக்கு ரூபா 500 பெறுமதியான புத்தகம் இலவசம்
MyWay 182, STANLEY RD, JAFFNA 077 33 63 456

Ice cream விற்பனை முகவர் மாற்றமும் விற்பனையும்
Ice cream mobile Agent, Ice cream விற்பனைக்கு ஏற்ற ஐந்து முச்சக்கர வண்டியும் ஒரு Ice vanனும் உட்பட பல பொருட்களுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
56, மணிக்கூட்டு வீதி,
நீராவியடி.
0779910154, 0214918407
(8436)

அறிவித்தல்
CIMA-UK
Certificate Level & Operational Level
November பரீட்சைக்கான Operational Level பாடநெறிகளிற்கான விரிவுரைகள் மே 27ல் ஆரம்பமாகவுள்ளது. Certificate Level பயிலும் மாணவர்கள் தமது கற்கைநெறிகளை பூர்த்தி செய்து பரீட்சைக்குத் தோற்றவும். இவர்களிற்கான சிறப்புப்பிரிவுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. CBA பரீட்சைகளை எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும். Operational Level பாடநெறிகளிற்கான விரிவுரைகளிற்கு மாணவர்களிற்கான அனுமதி பின்னர் வழங்கப்படமாட்டாது. சென்றமுறை போன்றும் தரமும் அனுபவமும் மிக்க விரிவுரையாளர்களால் பாடவிதானங்கள், மீட்டல், பரீட்சை மாதிரி வினாக்கள், Case studies உரிய காலத்திற்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும். மேலதிக விபரங்களை இல. 324.பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
Certified Level பாடநெறிகள் மே 12ல் ஆரம்பமாகின்றது. CIMA பயில்வதற்கு A/L தகைமை அவசியமில்லை. -இணைப்பாளர், CIMA
MCS தகவல் தொழில் நுட்ப வளாகம், 0212226373, 0772395895
Approved Listed College & Exam centere-CIMA-UK
Supported by United Nation Development Programme / Jaffna Rehabilitation & Resettlement Projects

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.